பெண் குழந்தை பிறந்தாலே, இன்னொரு வீட்டுக்குத் திருமணமாகிப் போகப் போகிறவள் என்ற ஒற்றைக கருத்தாக்க அடிப்படையிலேயே பெண்கள் வளர்க்கப்படுவதால், ஆணுக்கு அளிக்கப்படுவதுபோல கல்வி, உடல்நலப் பராமரிப்பு, திறன் மேம்பாடு போன்றவை பெண்களுக்கு அளிக்கப்படுவதில்லை. எனவே, குழந்தைத் திருமணம், இளவயது தாய்மை, குடும்ப வன்முறை போன்ற சிக்கல்களைப் பெண்கள் எதிர்கொள்ள நேரிடுகிறது. இந்த நிலையில், பாலினப் பாகுபாடுகள், பாலின வன்முறை போன்றவற்றை அடையாளம் காணவும் திருமணத்தின் முழுமையான அர்த்தத்தைப் புரிந்து கொண்டு, திருமணத்தின் மூலம் வரக்கூடிய சவால்களை எதிர்கொள்வதற்கான திறன்களைப் பெறவும், தன் வாழ்க்கை மேம்பட உதவும் விஷயங்கள் குறித்து அறிந்து முடிவெடுக்கவும், உறவுகளைக் கையாளவும், சமரசப் பேச்சுத் திறன்களை வளர்த்துக் கொள்ளவும், பெண்களுக்கு உதவும் வகையில் வளரிளம் பெண்களுக்காக இந்தப் பயிற்சிக் கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இளந்தென்றல்

குழந்தைத் திருமணத்தை
முடிவுக்குக் கொண்டு வருவோம்!

இளந்தென்றல்

# வளரிளம்பருவ பெண்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிக் கையேடு



unicef
for every child

# வளரிளம் பருவப் பெண்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிக் கையேடு

## குழந்தைத் திருமணம் மற்றும் வன்முறையை எதிர்கொள்ள வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாடு

இளந்தென்றல்

வளரிளம் பருவத்தினரின்
தன்னுரிமை மேம்பாடு மற்றும் குழந்தைத் திருமணத்தை
முடிவுக்குக் கொண்டு வரும் திட்டத்துக்கான கருத்துப் பெட்டகம்

வளரிளம் பருவப் பெண்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிக் கையேடு

குழந்தைத் திருமணம் மற்றும் வன்முறையை எதிர்கொள்ள வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாடு

Capacity Building Module for Adolescent Girls

On Adolescent Empowerment to Address Child Marriage and Violence

முதல் பதிப்பு: மார்ச், 2020

First Edition: March, 2020

வெளியீடு :
மாநில கருவூல மையம், சென்னை - 600 020.
State Resource Centre, Chennai - 600 020.
Email: sbtamilnadusrc@gmail.com
044-24914147

வடிவமைப்பு:

THY Designers & Computers

Triplicane, Chennai - 600 005

044-42113807

நன்றி:

வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாட்டுக்காக யுனிசெஃப் (UNICEF) அமைப்பும் பிரேக் த்ரு (Break Through, New Delhi ) நிறுவனமும் இணைந்து ஆங்கிலத்தில் உருவாக்கிய கருத்துப் புத்தகத்தின் தமிழ் வடிவம்.

தமிழ் வடிவம்: மாநில கருவூல மையம்

தொடர்புக்கு: sbtamilnadusrc@gmail.com

# அறிமுகம்

நமது நாட்டில் பெரும்பாலான குடும்பங்களில் ஒரு குழந்தை பிறந்ததில் இருந்தே, நாம் ஆண் குழந்தையையும் பெண் குழந்தையையும் வெவ்வேறான சமூக மதிப்பீடுகளோடும் பாலின வரையறைகளோடும் வளர்க்கிறோம். ஒரு குழந்தை சிசுவாக உருவாவதில் இருந்தே பாலினப் பாகுபாடு தொடங்கி விடுகிறது. உணவுப் பங்கீட்டில், கல்வி கற்பதில், வேலைவாய்ப்பில், முடிவுகளை எடுப்பதில் என வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் பாலினப் பாகுபாடும் அதனால் வரக்கூடிய பாதிப்புகளும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. பெண் குழந்தை பிறந்தாலே, இன்னொரு வீட்டுக்குத் திருமணமாகிப் போகப் போகிறவள் என்ற ஒற்றைக் கருத்தாக்க அடிப்படையிலேயே பெண்கள் வளர்க்கப்படுவதால், ஆணுக்கு அளிக்கப்படுவதுபோல கல்வி, உடல்நலப் பராமரிப்பு, திறன் மேம்பாடு போன்றவை பெண்களுக்கு அளிக்கப்படுவதில்லை. எனவே, குழந்தைத் திருமணம், இளவயது தாய்மை, குடும்ப வன்முறை போன்ற சிக்கல்களைப் பெண்கள் எதிர்கொள்ள நேரிடுகிறது. இதிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்கான திறன்களும் தெரிந்து உணர்ந்து முடிவெடுப்பதற்கான தகவல்களும் கிடைக்கப் பெறாமலேயே பெண்கள் வளர்க்கப்படுகிறார்கள். இத்தகைய வளர்ப்பு முறைகளால் வரக்கூடிய சிக்கல்களை, இந்த பாதிப்புக்குள்ளாகிற பெண்கள்தான் முதலில் உணர வேண்டும். அந்த நோக்கிலேயே வளரிளம் பெண்களுக்கான இந்தப் பயிற்சிக் கையேடு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பாலினப் பாகுபாடுகள், பாலின வன்முறை போன்றவற்றை அடையாளம் காணவும் திருமணத்தின் முழுமையான அர்த்தத்தைப் புரிந்து கொண்டு, திருமணத்தின் மூலம் வரக்கூடிய சவால்களை எதிர்கொள்வதற்கான திறன்களைப் பெறவும், தன் வாழ்க்கை மேம்பட உதவும் விஷயங்கள் குறித்து அறிந்து முடிவெடுக்கவும், உறவுகளைக் கையாளவும், சமரசப் பேச்சுத் திறன்களை வளர்த்துக் கொள்ளவும், பெண்களுக்கு உதவும் வகையில் வளரிளம் பெண்களுக்காக இந்தப் பயிற்சிக் கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாட்டுக்காக **யுனிசெஃப், பிரேக் த்ரு** ஆகிய அமைப்புகள் ஆங்கிலத்தில் உருவாக்கிய இந்தக் கருத்துப் புத்தகத்துக்கு **மாநில கருவூல மையம்** தமிழ் வடிவம் கொடுத்துள்ளது. இந்த முயற்சிக்குத் துணை நிற்கும் **தமிழக அரசின் சமூக நலத் துறை**, **யுனிசெஃப் அமைப்பு** ஆகியவை தரும் ஒத்துழைப்பையும் நன்றியுடன் நினைவு கூர்கிறோம்.

நமது நோக்கம் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வருதல். அனைத்துத் தரப்பினரும் இணைந்து செயல்பட்டால்தான் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியும். இந்த முயற்சியில் அனைவரும் ஒன்றிணைவோம்!

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | வளரிளம் பருவப் பெண்களுக்கான இந்தப் பயிற்சிக் கையேடு ஏன் உருவாக்கப்பட்டுள்ளது? | 2 |
| 2 | வளரிளம் பருவப் பெண்களுக்குப் பயிற்சிக் கையேட்டினை உருவாக்க எந்தக் காரணிகள் கருத்தில் கொள்ளப்பட்டன? | 3 |
| 3 | இந்தப் பயிற்சிக் கையேட்டை உருவாக்க வளரிளம் பருவப் பெண்களுக்கு, எந்தவித திறன் மேம்பாடுகள் முக்கியமாகத் தேவை எனக் கண்டறியப்பட்டன? | 4 |
| 4 | வளரிளம் பருவப் பெண்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின் கால அளவும், பயிற்சி அளிக்கும் முறையும் என்ன? | 4 |
| 5 | வளரிளம் பருவப் பெண்களுக்கான பயிற்சிக் கையேட்டின் கீழ் இந்த அமர்வுகள் எவ்வாறு நடத்தப்படும்? | 5 |

| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | **கட்டகம் -1 சமூகப் பாலினம் மற்றும் பாலினப் பாகுபாடுகளைப் பற்றி புரிந்து கொள்ளுதல்** | 6 |
| 1.1 | **அமர்வு - 1** ஒரே மாதிரியான பாலினப் பாத்திர வரையறைகள் (*Gender Stereotyping*) | 7 |
| 1.2 | **அமர்வு - 2** வளரிளம் பருவத்தினரின் (ஆண்/பெண்) வாழ்க்கைச் சுழற்சியோடு தொடர்புடைய சமூக விதிமுறைகளைப் புரிந்து கொள்ளுதல் | 12 |
| 1.3 | **அமர்வு - 3** வன்முறை மற்றும் உரிமைகள் | 17 |
| 1.4 | **அமர்வு - 4** நம்முடைய வாழ்வில் பாலினம் மற்றும் சமூகப் பாலினத்தால் ஏற்படும் தாக்கத்தைக் கண்டறிதல் | 21 |
| 1.5 | **அமர்வு - 5** உறவுகளில் சமூகப் பாலினத்துக்கும் அதிகாரத்துக்கும் இடையே உள்ள தொடர்பு | 25 |
| 1.6 | **அமர்வு - 6** வளரிளம் பெண்களின் உரிமைகள் | 29 |
| 2 | **கட்டகம் - 2 பாலியல் வன்முறைகளைச் சமாளித்தல்** | 35 |
| 2.1 | **அமர்வு - 7** பாலியல் வன்முறையிலிருந்து தற்காத்துக் கொள்ளுதல் | 36 |
| 2.2 | **அமர்வு - 8** பாதுகாப்பான இடங்கள் பாதுகாப்பற்ற இடங்கள் | 50 |
| 3 | **கட்டகம் - 3 திருமணம் என்பதன் பொருளைப் புரிந்து கொள்ளுதல்** | 55 |
| 3.1 | **அமர்வு - 9** திருமணமான பெண்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள | 56 |
| 3.2 | **அமர்வு - 10** குழந்தைத் திருமணம் - ஒரு மனித உரிமை மீறல் | 63 |
| 3.3 | **அமர்வு - 11** குழந்தைத் திருமணத்தில் குடும்ப வன்முறையைக் கையாளுதல் | 73 |
| 3.4 | **அமர்வு - 12** சமுதாயத்தின் உறுப்பினர்களாக பெண்கள் மற்றும் வளரிளம் பருவப் பெண்களின் பங்களிப்பு. | 81 |

| | | |
|---|---|---|
| 3.5 | **அமர்வு - 13** பெண்களின் எண்ணிக்கை குறைந்து வருதல் மற்றும் அதனால் குழந்தைத் திருமணங்களின் மீது ஏற்படும் தாக்கம் | 87 |
| 3.6 | **அமர்வு - 14** சரியான தெரிவுகள் செய்து அதை கடைபிடித்தல் | 93 |
| 3.7 | **அமர்வு - 15** உரிமைகளுக்காக பேச்சுவார்த்தையை நடத்த, குழுவாக, கூட்டமைப்பாக இணைவதால் கிடைக்கும் பலம் | 99 |



# குழந்தைத் திருமணம் மற்றும் பாலினம் சார்ந்த வன்முறையை நீக்க வளரிளம் பருவப் பெண்களுடன் இணைந்து வேலை செய்தல்

## வளரிளம் பருவப் பெண்களுக்கான இந்தப் பயிற்சிக் கையேடு ஏன் உருவாக்கப்பட்டுள்ளது?

பாலினப் பாகுபாடு, குழந்தைத் திருமணம், வளரிளம் பருவத்தில் கர்ப்பம், பாலியல் வன்முறை, குடும்ப வன்முறை ஆகியவற்றை வளரிளம் பருவப் பெண்கள், இளவயதிலேயே எதிர்கொள்கின்றனர். இளம் பெண் குழந்தைகளாய், இள வயதில் திருமணம் செய்துகொண்டவர்களாய், இளம் தாய்மார்களாய் அவர்கள் குறிப்பிட்ட விதிமுறைகளை பின்பற்ற வேண்டும், குறிப்பிட்ட முறையில் நடந்துகொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.

இந்தப் பயிற்சிக் கையேடானது 13 வயது முதல் 18 வயது வரை உள்ள, ஆபத்தை எதிர்கொள்ளும், வளரிளம் பருவப் பெண் குழந்தைகள், மூன்று வழிகளில் தங்கள் திறன்களை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

- **முதலாவதாக,** கல்வி மேம்பாட்டிற்கான வசதிகள் கிடைக்காமல் போவது, வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகள் மறுக்கப்படுவது போன்ற அடிப்படை உரிமைகள் இல்லாதது குறித்தும், குழந்தைத் திருமணத்தில் தள்ளப்படுதல், வளரிளம் பருவ கர்ப்பம், குடும்ப வன்முறை போன்ற ஆபத்துகள் இருப்பது பற்றியும் அவர்கள் புரிந்துகொள்ளவும், ஒப்புக் கொள்ளவும் உதவும்.

- **இரண்டாவதாக,** கல்வி மற்றும் வாழ்வாதாரம், வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுத்தல், வரதட்சணைப் பிரச்சினைகளைக் கையாளுதல், மணப்பெண்ணாய் எதிர்கொள்ளும் எதிர்பார்ப்புகளை சமாளித்தல், குடும்ப வன்முறையை எதிர்த்தல், குழந்தை பெற்றுக்கொள்ள உண்டாக்கப்படும் அழுத்தம் – இவையெல்லாம் பற்றி முடிவு எடுக்கவும், உடன்பாட்டுக்காக பேச்சுவார்த்தை நடத்தும் திறனை வளர்க்கவும் இந்த பயிற்சிக் கையேடு உதவுகின்றது.

- **மூன்றாவதாக,** அவர்களுக்குள் நன்மதிப்பு, மரியாதை, நம்பிக்கை ஆகியவற்றை ஊக்குவிக்கும்படியாக உள்ள கலந்துரையாடல்களும், சார்புநிலையற்ற அமர்வுகளும், புதியவற்றைக் கண்டறியும்படியான ஒரே தளமும் அமைய உதவிகரமாக இருக்கும். வளரிளம் பருவப் பெண்களின் மேம்படுத்தப்பட்ட திறன்கள், அவர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்க உதவுகின்றது. இது பாதுகாப்பான, ஆதரவான தளத்தை உருவாக்க வழிகோலுகின்றது.

இந்தப் பயிற்சிக் கையேடானது, வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாட்டுக்கான கையேடுகளின் தொகுதியில் ஒரு பகுதியாகும். வாழ்க்கைத்திறன் பயிற்சிகள், வளரிளம் பருவ ஆண்கள்/பெண்களுக்கான பயிற்சிக் கையேடுகள், தன்னார்வத் தொண்டு நிறுவன பயிற்சியாளர்கள் மற்றும் முன்னணிக் களப்பணியாளர்களுக்கான பயிற்சிக் கையேடுகள், மேலும் மதத் தலைவர்கள், பஞ்சாயத்து உறுப்பினர்கள், குழந்தைத்

திருமணத் தடுப்பு அதிகாரிகள், காவல் துறையினர், பெற்றோர்கள் போன்ற பங்காளர்கள் களச் சவால்களை எதிர்கொள்வதற்கான உத்திகளைக் கூறும் கையேடுகள் உள்ளிட்ட பல்வேறு புத்தகங்கள் அந்த விரிவான கையேடுகளின் தொகுதியில் அடங்கியுள்ளன.

## வளரிளம் பருவப் பெண்களுக்கான பயிற்சிக் கையேட்டினை உருவாக்க எந்தக் காரணிகள் கருத்தில் கொள்ளப்பட்டன?

வளரிளம் பருவப் பெண்கள், ஆண்களின் பிரச்சினைகளையும், திறன் மேம்பாட்டுத் தேவைகளையும் கண்டறிய, 'பிரேக் த்ரு' (Break Through) மற்றும் 'யுனிஃசெப்' (UNICEF) நிறுவனங்களால் பல ஆய்வுகளுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. இந்த ஆய்வறிக்கைகளின் சாராம்சங்கள் யுனிஃசெப் மற்றும் பிரேக் த்ரு வல்லுனர்களுடன் விரிவாக விவாதிக்கப்பட்டு உறுதிப்படுத்தி வலுப்படுத்தப்பட்டுள்ளன.

வளரிளம் பருவ ஆண்கள், பெண்கள் சம்பந்தப்பட்ட, கீழ்க்காணும் முக்கியமான பிரச்சினைகளும் திறன் மேம்பாட்டுத் தேவைகளும், பயிற்சி கட்டகங்களை உருவாக்கும்போது கருத்தில் கொள்ளப்பட்டன.

## பெண் குழந்தைகள்

- 13 – 18 வயதிற்குட்பட்ட, கிராமப்புறங்களிலும் சிறு நகரங்களிலும் உள்ள வளரிளம் பருவப் பெண்கள்தான் இள வயதுத் திருமணம், குடும்ப வன்முறை, உணர்வு ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் மோசமாக நடத்தப்படுதல், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், மோசமான பொருளாதார சிக்கல் ஆகியவற்றை அதிகமாக எதிர்கொள்கின்றனர்.
- குறைந்த அளவு கல்வி வாய்ப்புகளும், வாழ்வாதார வாய்ப்புகளும் உள்ள இடங்களில்தான் இவர்கள் வசிக்கின்றனர்.
- கல்வி, வாழ்வாதாரம், வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்தல், குழந்தைகள் பெற்றுக்கொள்ளுதல், குடும்பச் செலவுகளை நிர்வகித்தல் முதலியவை பற்றி முடிவெடுக்க குறைந்த அளவே திறனும் அதிகாரமும் உள்ளவர்களாக இருக்கின்றனர்.
- பழைய பழக்கவழக்கங்களான குழந்தைத் திருமணம், வரதட்சணை, பாலினப் பாகுபாடு ஆகியவற்றிற்கு உட்படுத்தப்படுகின்றனர்.
- மகள், மணப்பெண், மனைவி மற்றும் தாய் என்ற பாத்திர வரையறைகளில் சமூகம் விரும்புகிறபடி நடந்துகொள்ள எதிர்பார்க்கப்படுகிறார்கள்.
- இந்தப் பெண்களிடம் சுயமதிப்பு, சுயமரியாதை, தன்னம்பிக்கை ஆகியவை மிகவும் குறைவாகவே இருக்கின்றன.

- உடன்பாடு காண்பதற்காக வாதாடும் பேச்சுவார்த்தைத் திறன் இந்தப் பெண்களிடம் மிகவும் குறைவாகவே உள்ளது.

## இந்தப் பயிற்சிக் கையேட்டை உருவாக்க வளரிளம் பருவப் பெண்களுக்கு, எந்தவித திறன் மேம்பாடுகள் முக்கியமாகத் தேவை எனக் கண்டறியப்பட்டன?

களஅளவில் அமலாக்கப்பட்ட திட்டங்கள் தந்த அனுபவத்தின் அடிப்படையிலும், பல்வேறு ஆராய்ச்சிகளின் அடிப்படையிலும், வளரிளம் பருவ ஆண்களுக்கும் பெண்களுக்கும் எந்த விதமான திறன் மேம்பாடுகள் தேவை என்பது கண்டறியப்பட்டன. பாலினப் பாகுபாடு மற்றும் வன்முறைக்கு எதிராக போராட, வளரிளம் பருவ ஆண்கள் பெண்களுக்கு தேவையான முக்கியமான திறன் மேம்பாடுகள், கீழ்க்காண்பனவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### பெண் குழந்தைகள்:

- பாலின வன்முறை மற்றும் பாலினப்பாகுபாடு பற்றி புரிந்துகொள்ளுதல்
- பாலியல் ரீதியாக மோசமாக நடத்தப்படுவதைத் தடுத்தல்
- திருமணத்தின் அர்த்தத்தைப் பற்றி புரிந்துகொள்ளுதல்
- பெண் குழந்தையை மதித்தல்
- முடிவெடுக்கும் திறன் மற்றும் உடன்பாட்டுக்கான பேச்சுவார்த்தைத் திறன் பற்றி கண்டறிதல்

அமர்வுகள், வளரிளம் பருவப் பெண்களின் வாழ்வை ஆராய்ந்து எதிர்காலத்தில் அவர்கள் எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினைகளையும் முன்னரே தெரிவிக்கின்றன. வளரிளம் பருவப் பெண்கள், இந்தச் சவால்களை, கூட்டுமுயற்சி மற்றும் தன்னம்பிக்கையுடன் எப்படி எதிர்கொள்வது என்ற வழிகளையும் கண்டறிகின்றன.

## வளரிளம் பருவப் பெண்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின் கால அளவும், பயிற்சி அளிக்கும் முறையும் என்ன?

பதினைந்து அமர்வுகளில், 12 மணி நேரத்தில், திறன் மேம்பாட்டுத் தேவைகளை வழங்கும்படியாக இந்தக் கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. 20 – 25 எண்ணிக்கையிலான பெண்கள், ஆண்கள் கொண்ட சிறு குழுக்களுக்கு ஏற்றவாறு, முறைசாரா வகுப்புகளில் பயிற்றுநர்களால் நடத்தப்படும் வகையில் இந்த அமர்வுகள் அமைந்துள்ளன. இந்த அமர்வுகள் ஆண்களும் பெண்களும் பங்கேற்பு முறையில் பயிற்சி பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. மாதிரிச் சம்பவங்களை விவாதித்தல், குழுக் கலந்துரையாடல்கள்,

சிந்தனைத் தூண்டல், குழுக்களாகப் பகிர்தல், பங்கேற்று நடித்தல் போன்ற முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பாலினம் சார்ந்த வன்முறைகள் மற்றும் குழந்தைத் திருமணம் தொடர்பான இடையீட்டு நடவடிக்கைகளில் ஊக்கமாக செயல்பட்ட, வெவ்வேறு பகுதிகளில் உள்ள வளரிளம் பருவத்தினரின் பிரச்சினைகளை நன்கறிந்த, உள்ளூர் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சார்ந்த பயிற்சியாளர்கள் இந்த அமர்வுகளில் பயிற்றுநர்களாக செயல்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வளரிளம் பருவப் பெண்களுக்கான பயிற்சிக் கையேட்டின் கீழ் இந்த அமர்வுகள் எவ்வாறு நடத்தப்படும்?

இந்தப் பயிற்சிக் கையேட்டின் கீழுள்ள அமர்வுகளை கீழ்க்காணும் சுலபமான வழிமுறைகளைப் பின்பற்றி நடத்தமுடியும்.

- திட்டமிடப்பட்டுள்ள அமர்வுகளின் பட்டியலைப் பார்த்து, நடத்தவேண்டிய அமர்வைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும்.

- அமர்வுத் திட்டத்தை கவனமாகப் படித்து, தேவையான பொருட்களைக் கொண்டு, அமர்வுகளை நடத்த எவ்வாறு தயார் செய்துகொள்ள வேண்டும் என்று குறித்துக் கொள்ளவேண்டும். இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சியாளருக்கான கைப்பிரதிகளை நகலெடுப்பது, பயிற்றுநருக்கான குறிப்புகளை புரிந்துகொள்வது, உள்ளூர் தகவல்கள் பற்றி அறிந்திருப்பது, குழு செயல்பாடுகளுக்கான வேறு விஷயங்களை சேகரிப்பது போன்ற தயாரிப்புகளை முன்கூட்டியே செய்யவேண்டும்.

- அடுத்து, கற்றலின் நோக்கம், செயல்படுத்தும் விதம், முக்கியமான கலந்துரையாடல் குறிப்புகள், பயிற்றுநர்களுக்கான குறிப்புகள், அனைத்தையும் நன்றாகப் படித்து, நன்றாகப் புரிந்துகொண்டதை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். இந்தக் கையேடு ஒரு வழிகாட்டியே. கிடைக்கும் நேரத்திற்கேற்ப, கற்றுக்கொள்பவரின் தன்மைக்கு ஏற்ப, மாறும் பயிற்சி சூழலுக்கேற்ப கையேட்டினை மாற்றிக்கொள்ளலாம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

- பயிற்சியின் வழிமுறைகளைப் பற்றி சிறு குறிப்பு ஒன்றை வைத்துக்கொள்ளவேண்டும். இது அமர்வுகளை நடத்தும்போது, கலந்துரையாடல் செய்வதற்கான குறிப்புகளையும் தர உதவும்.

- வளரிளம் பருவப் பெண்களுக்கு அமர்வு நடத்தும்போது படிப்போர் கைப்பிரதிகள், குழு செயல்பாட்டுப் பொருட்கள், சிறிய பயிற்சிக் குறிப்பு ஆகியவற்றைக் கையில் வைத்திருக்கவேண்டும்.

# கட்டகம் - 1



# சமூகப் பாலினம் மற்றும் பாலினப் பாகுபாடுகளைப் பற்றி புரிந்து கொள்ளுதல்

# அமர்வு 1

## ஒரே மாதிரியான பாலினப் பாத்திர வரையறைகள் (Gender Stereotyping)

**நேரம் :** 20 நிமிடங்கள்

**தேவையான பொருட்கள் :** சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள்

### கற்றலின் நோக்கம் :

- இந்த அமர்வின் இறுதியில், நம் சமூகத்தில் ஆண் பெண்களின் பாத்திர வரையறைகளும், பொறுப்புகளும் என்னவாக இருக்க வேண்டும் என்று சமூகம் எதிர்பார்க்கிறது என்பதை பங்கேற்பாளர்கள் புரிந்துகொள்வார்கள்.
- சமூகத்தின் 'விதிகளும்' எதிர்பார்ப்புகளும் ஒரே மாதிரியான பாலினப் பாத்திர வரையறைகளை எவ்வாறு தீர்மானிக்கின்றன என்பதை பங்கேற்பாளர்கள் அடையாளம் கண்டுகொள்வார்கள்.

### செயல்படுத்தும் விதம் :

- பயிற்றுநர், பங்கேற்பாளர்களை ஒரு பெரிய வட்டத்தில் நிற்கச் சொல்லவேண்டும்.
- பயிற்றுநர், ஒரு அட்டைப்பெட்டியில் பங்கேற்பாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப துண்டுச் சீட்டுகளைச் சுருட்டி போட்டிருக்க வேண்டும். (அந்தத் துண்டுச் சீட்டுகளில், நாய், பூனை, குயில், மயில், ஆடு, மாடு, சேவல், சிங்கம், காக்கா போன்ற விலங்குகள், பறவைகளின் சப்தங்களையும் சைரன் சப்தம், கடிகாரம் போன்ற பொருட்களின் சப்தங்களையும் பங்கேற்பாளர்கள் புரிந்துகொள்ளும் வகையில் மேலே உள்ளவைகளின் பெயர்களை இரண்டு இரண்டு சீட்டுகளில் எழுதிச் சுருட்டி அட்டைப் பெட்டியில் போட்டிருக்க வேண்டும்).
- பங்கேற்பாளர்கள் அனைவரும் ஆளுக்கொரு சீட்டை எடுக்கும்படி கூற வேண்டும்.
- பங்கேற்பாளர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாமல் துண்டுச் சீட்டில் கூறியுள்ள பொருள், விலங்கு, பறவைகளின் சப்தங்களை ஒலி எழுப்பிக்கொண்டே, அதே சப்தங்களை எழுப்பிக்கொண்டிருக்கும் பங்கேற்பாளரோடு ஜோடி சேர வேண்டும். ஒலியை வைத்துதான் ஜோடியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று கூற வேண்டும்.
- ஜோடி சேர்ந்த பங்கேற்பாளர்களை ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துகொள்ளச் சொல்லலாம்.

- பங்கேற்பாளர்களுடைய பெயர், பிடித்த உணவு, தங்கள் குடும்பத்தில் உள்ள ஆண்களிடம் (குழந்தைகள், பெரியவர்கள்) தனக்குப் பிடித்த குணங்கள் எவை, தங்கள் குடும்பத்தில் உள்ள பெண்களிடம் (குழந்தைகள், பெரியவர்கள்) தனக்குப் பிடித்த குணங்கள் எவை போன்றவற்றை ஒருவருக்கொருவர் பேசி அறிமுகம் செய்துகொள்ளும்படி கூறவேண்டும்.
- பின்னர், பங்கேற்பாளர்கள் ஒவ்வொருவராக தங்களுடன் ஜோடி சேர்ந்த சக பங்கேற்பாளரை பொது அமர்வில் அறிமுகம் செய்துவைக்கச் சொல்லவேண்டும்.
- அவ்வாறு பங்கேற்பாளர்கள் ஆண், பெண் குணநலன்களைப் பற்றிக் கூறும்போது பயிற்றுநர், போர்டில் கீழ்க்காண்பனவாறு எழுதிக்கொண்டே போக வேண்டும்.

| ஆண் குழந்தைகள் மற்றும் ஆண்களிடம் விரும்பப்படும் குணநலன்கள் (உதாரணம்) | பெண் குழந்தைகள் மற்றும் பெண்களிடம் விரும்பப்படும் குணநலன்கள் (உதாரணம்) |
|---|---|
| ▪ கடின உழைப்பு<br>▪ தைரியம் | ▪ அக்கறை எடுத்து கவனித்துக் கொள்ளுதல்<br>▪ நன்றாகச் சமைத்தல் |

- அனைவரும் பகிர்ந்த பிறகு, பயிற்சித்தாள்-1 இல் உள்ள கேள்விகளை பங்கேற்பாளர்களிடம் கேட்டு பொது அமர்வில் கலந்துரையாட வேண்டும். அவர்களிடம் பெறப்பட்ட பதில்களோடு கருத்துத்தாளில் உள்ள கருத்துக்களையும் தொகுத்துக்கூறி அமர்வை முடிக்க வேண்டும்

## பயிற்சித்தாள் - 1

- இந்தப் பகிர்வில் இருந்து உங்களால் ஆண், பெண் குணநலன் பற்றி ஏதாவது உணர முடிகிறதா?
- ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் இந்தக் குறிப்பிட்ட தனி குணநலன்களைக் கொண்டிருக்கின்றனர் என்று ஏன் நாம் நினைக்கிறோம்?
- மேற்கூறிய குணநலன்கள் அனைத்தும் ஆண், பெண் இருவரிடமும் இருக்கக்கூடும் என்று நினைக்கிறீர்களா?
- இந்த ஒரே மாதிரியான பாலின வரையறைகளால் வளரிளம் பருவ ஆண்களும் மற்ற ஆண்களும் சந்திக்கக்கூடிய அழுத்தம் என்ன?
- இந்த ஒரே மாதிரியான பாலின வரையறைகளால் வளரிளம் பருவப் பெண்களும் மற்ற பெண்களும் சந்திக்கக்கூடிய அழுத்தம் என்ன?
- இந்த ஒரே மாதிரியான பாலின வரையறைகள், வளரிளம் பருவ ஆண்கள் மற்றும் பிற ஆண்கள் மீதும் வளரிளம் பருவப் பெண்கள் மற்றும் பிற பெண்கள் மீதும் ஏற்படுத்தும் தாக்கம் என்னவாக இருக்கும்?

# கருத்துத் தாள்

சிறுவயதில் இருந்தே நம் குடும்பத்திலிருந்தும், நாம் வாழும் சமூகத்திலிருந்தும் சில நம்பிக்கைகளை நாம் பெறுகிறோம். சடங்குகள் பழக்கவழக்கங்கள் மட்டுமன்றி இந்த நம்பிக்கைகள் சார்ந்து, மனிதர்களின் குணங்கள் பற்றியும் சில மதிப்பீடுகளை குடும்பமும் சமூகமும் நமக்குள் விதைக்கின்றன. இப்படி மனிதர்கள் ஒருவிதமான வரையறைக்குள் உட்படுத்தப்படுவதைதான் ‘Stereotyping’ என்ற வார்த்தையால் குறிப்பிடுகிறோம் .

குழந்தை பிறந்ததிலிருந்து ஆண் பெண் என்ற பாலினப் பாகுபாட்டு வரையறைகளுடனேயே நாம் வளர்க்கப்படுகிறோம். இவை நமக்குள் நம்மை அறியாமலேயே விதைக்கப்படுகிறது.

## ஒரே மாதிரியான பாலின வரையறை எப்படி நிறுவப்படுகிறது?

இது நான்கு வழிகளில் நடக்கிறது - குடும்பம், ஊடகங்கள், கல்வி, ஒத்த குழுக்கள். பொதுவாக, இந்த ஒரேமாதிரியான வரையறைகளுக்கான விதிமுறைகள் முதலில் குடும்பத்தில்தான் தொடங்குகிறது. குடும்பம், தான் சார்ந்த உள்ளூர் கலாச்சாரம் மற்றும் பழக்கவழக்கங்களைத் தனக்கான சமூக விதியாக எடுத்துக்கொள்கிறது. குடும்பம், தான் சார்ந்த சமூகத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்காக சமூகம் எதிர்பார்க்கின்ற ஒரே மாதிரியான பாலின வரையறைகளை வளரும் குழந்தையின் மேல் சுமத்துகிறது. உடை, அவர்கள் விளையாடும் பொம்மைகள், அவர்கள் வெளிப்படுத்த வேண்டிய உணர்ச்சி, யாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று ஓயாமல் வரையறைகளை நினைவூட்டி மறுஉறுதி செய்து கொண்டே இருக்கிறது.

சிறுவயதில் இருந்தே, ஆண் குழந்தைகளையும் பெண் குழந்தைகளையும் வெவ்வேறுவிதமாக வளர்க்கிறோம். பெண் பாதுகாக்கப்பட வேண்டியவள் என்று நினைக்கிறோம். ஆண் என்றால் வீரம், தைரியம், எதையும் சமாளிப்பவராக இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். பெண்கள் என்றால் அமைதியானவர்கள், மற்றவர்கள் மேல் அன்பாக அக்கறையாக இருப்பார்கள் என்று சொல்வது முழுமையாக சரியா? ஆண்களில் பரிவு பாசத்தோடு இருப்பவர்கள் இல்லையா? பெண்களில் எதையும் சமாளிக்கும் ஆற்றல் உள்ளவர்கள் இல்லையா ?

ஆசிரியர்கள், வளரிளம் பருவப் பெண்களையும் ஆண்களையும் பாராட்டுவதிலும் ஒழுங்குபடுத்துவதிலும் வெவ்வேறுவிதமான அணுகுமுறைகளையே கையாளுகிறார்கள். ஆண்களிடம், “படிச்சு பெரிய ஆளாக வரவேண்டும்” எனும் அதே டீச்சர், பெண்களிடம் நல்ல மதிப்பெண்கள் எடுத்ததற்கு பாராட்டுகிறார்கள். ஆனால் பெண்களின் இலக்குகளை தூண்டுவதில்லை. “பெண்கள் திட்டினால் அழுவார்கள் என்று அவர்களை அதிகம் கோபிப்பதில்லை, ஆனால் எங்களை அடிக்கிறார்கள்” என்று பள்ளி சிறுவர்கள் புகார் செய்கிறார்கள்.

பிறகு அவர்களுடைய நண்பர் குழுக்கள் இவற்றை மறுஉறுதி செய்கின்றனர். “நீ ஆம்பளடா, எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்” என்றும், “நீ பொண்ணு,

அடக்கவொடுக்கமாக இரு" என்றும் நினைவுறுத்திக்கொண்டே இருக்கிறார்கள்.

நம்முடைய தொலைக்காட்சி, சினிமா மற்றும் பத்திரிகைகள், ஆண்களை வலிமையானவர்களாக, அதிகாரம் செலுத்துபவர்களாக, உறுதியானவர்களாக இருக்க வேண்டும் என்று சித்தரிக்கிறது. பெண்களென்றால் அமைதியாக, மற்றவர்களைப் பராமரிப்பவர்களாக, எதற்கும் மறுபேச்சு பேசாதவர்களாக இருக்கவேண்டும் என்று சித்தரிக்கிறது .

## ஆண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும்; பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற ஒரே மாதிரியான பாத்திர வரையறைகளினால் வரக்கூடிய ஆபத்துகள் என்ன?

இப்படியான ஒரே மாதிரியான வரையறைகளை நம்பும்போது நமக்குள் பல விஷயங்கள் பற்றி முன்தீர்மானங்கள் தோன்றிவிடுகின்றன.

சிறுவயதில் இருந்தே இந்த வரையறைகளை ஆணும் பெண்ணும் நம்ப ஆரம்பித்து விடுகிறார்கள், இது தன்னைப் பற்றிய சுயமதிப்பீட்டிலும் உறவுகளைக் கட்டமைப்பதிலும் படிப்பு, வேலை, குடும்பம் பற்றிய கனவுகளை வளர்த்துக் கொள்வதிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இப்படியாக, சின்னஞ்சிறு வயதிலிருந்தே பாலின வரையறைகளோடு குழந்தைகளை வளர்ப்பதால் ஆண்களுக்கான பரிவையோ பெண்களுக்கான தைரியத்தையோ கற்றுக்கொடுப்பதில்லை. இந்த மாதிரியான வரையறைகளால், பெண்கள் வெளியுலகத்தில் நடமாடும்போது ஏதாவது பிரச்சினை வந்தாலும் அதை எதிர்கொள்வதற்கு தயங்குகிறார்கள், பயந்து ஒதுங்கிப் போகிறார்களே தவிர எதிர்த்து நிற்பதில்லை. இதேபோல் ஆண்களும், அவர்கள் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற வரையறைப்படி வளர்ந்திருப்பதால், ஒரு சாலையில் போகும் பெண்ணைக் கிண்டல் செய்யும்போது அது பற்றி அவர்களுக்குள் வெட்கமோ அவமான உணர்வோ வருவதில்லை. ஆண்களையும் பெண்களையும் இப்படி ஒரேமாதிரி பாலின வரையறைப்படுத்துவது இரண்டு பேருடைய ஒட்டுமொத்தமான வளர்ச்சியையும் திறன் மேம்பாட்டையும், அவர்களுக்குள்ளே இருக்க வேண்டிய ஆரோக்கியமான உறவுகளையும் பாதிக்கிறது.

இந்த ஒரே மாதிரியான பாலின வரையறைகள்தான், இன்று வளரிளம் பருவப் பெண்கள் எதிர்கொள்ளக் கூடிய பல பிரச்சினைகளுக்கும் காரணமாகிறது.

இந்தப் பயிற்சிக் கையேடானது குழந்தைத் திருமணம், குடும்ப வன்முறை, பாலியல் வன்முறை போன்ற பல தொடர்புடைய பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்குப் பயிற்சி அளிக்கிறது.

இவற்றைத் தெரிந்து கொள்வது என்பது ஒரு ஆரம்பமே. இருப்பினும், மனிதர்களாகிய நம்மிடம் இந்த குணநலன்கள் இருக்கும் என்பதையும், தேவைப்பட்டால் அது வெளிப்படும் என்பதைப் பற்றியும் விழிப்புணர்வோடு இருக்கவேண்டும்.

# அமர்வு 2

## வளரிளம் பருவத்தினரின் (ஆண்/பெண்) வாழ்க்கைச் சுழற்சியோடு தொடர்புடைய சமூக விதிமுறைகளை புரிந்து கொள்ளுதல்

**நேரம் :** *20 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** ஒரு பெரிய அறை அல்லது திறந்த வெளி

### கற்றலின் நோக்கம் :

- *இந்த அமர்வின் இறுதியில் பங்கேற்பாளர்கள் பாலினப் பாகுபாட்டை கண்டறிந்துக் கொள்வார்கள்.*
- *சமூக விதிமுறைகளை அமைதியாக ஏற்றுக்கொள்வதற்கு பதில், அவற்றைக் கேள்வி கேட்க பங்கேற்பாளர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்வார்கள்.*

### செயல்படுத்தும் விதம் :

- *பயிற்றுநர், அமர்வின் தலைப்பையும் கற்றலின் நோக்கத்தையும் தெரிவிக்க வேண்டும்.*
- *அறையின் ஒரு பக்க மூலையில் 'ஆண் குழந்தை / வளரிளம் பருவ ஆண்' என்றும் மற்றொரு பக்க மூலையில் 'பெண் குழந்தை / வளரிளம் பருவப் பெண்' என்றும் குறிக்க வேண்டும்.*
- *பிறகு, 10 பங்கேற்பாளர்களை அழைத்து அவர்களைக் குழுவாக நிற்கச் சொல்ல வேண்டும்.*
- *நம் வாழ்வில் நடக்கும் சூழ்நிலைகள் மற்றும் நிகழ்ச்சிகள் போல் 12 வாக்கியங்களை வாசிக்கப் போகிறேன் என்று அறிவிக்க வேண்டும். 10 பங்கேற்பாளர்களும், வாசிக்கப்படும் 12 வாக்கியங்களுக்கேற்ப பதில் அளிக்க வேண்டும்.* ***(பயிற்சித்தாள் -1)***
- *வாசிக்கப்படும் வாக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வாழ்க்கைச் சூழல் யாருக்கு அதிக ஆதரவாக இருக்கிறது (சிறுவன்/சிறுமி) என்று நினைக்கிறார்களோ அதற்கேற்றவாறு இடத்தைத் தெரிவு செய்து 10 பங்கேற்பாளர்களும் அந்தந்தப் பகுதிக்கு சென்று நிற்க வேண்டும்.*
- *ஒவ்வொரு சூழ்நிலைக்கும் எத்தனை நபர்கள் எங்கு நிற்கிறார்கள் என்பதை ஒரு அட்டவணையில் எழுத வேண்டும் (உதாரணமாக: சூழ்நிலை 1க்கு 8 பேர்*

ஆண்குழந்தை / வளரிளம் பருவ ஆண் என்ற மூலையில் நின்றார்கள், 2 பேர் பெண் குழந்தை / வளரிளம் பருவப் பெண் என்ற மூலையில் நின்றார்கள்).

- பின்வரும் சூழ்நிலைகளை ஒவ்வொன்றாக படித்து எத்தனை பங்கேற்பாளர்கள் ஆண்குழந்தை / வளரிளம் பருவ ஆண் என்ற மூலையில் நின்றார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். மேலும் அவர்கள் ஏன் அங்கு நின்றார்கள் என்பதையும் விளக்கும்படி கூறவேண்டும். (பெரும்பாலானோர் "ஆண்குழந்தை / வளரிளம் பருவ ஆண்" பக்கம் என்ற மூலையில் அதிகமான சூழ்நிலைகளுக்கு நின்றிருப்பார்கள்).
- கடைசியாக, மதிப்பெண்களைக் கூட்டி ஆண்குழந்தை / வளரிளம் பருவ ஆண் மூலைக்கு அதிக மதிப்பெண்கள் கிடைத்ததா அல்லது பெண் குழந்தை / வளரிளம் பருவப் பெண் மூலைக்கு கிடைத்ததா என அறிவிக்க வேண்டும்.
- பங்கெடுத்தவர்களை அமரச் சொல்லி நன்றி சொல்லவேண்டும்.

## பயிற்சித்தாள் - 1

### சூழ்நிலை வாக்கியங்கள்:

- **குழந்தையின் பிறப்பைக் கொண்டாடுதல்:** பொதுவாக ஆண் குழந்தையின் பிறப்பு கொண்டாடப்படுகிறது.
- **குழந்தைக்குப் பெயர் சூட்டுதலை கொண்டாடுதல்:** பொதுவாக, ஆண் குழந்தைக்குப் பெயர் சூட்டுதல் ஆடம்பரமாக இருக்கும்; பெண் குழந்தைக்கு அல்ல.
- **குழந்தை பிறப்பில் குடும்ப அங்கத்தினர்களின் ஈடுபாடு:** பெரியவர்கள், ஆண் குழந்தை பெற்றெடுத்த தாயைத்தான் அதிகமாக வாழ்த்துவார்கள். பெண் குழந்தை பிறந்தால் தாயைப் பழி கூறுவார்கள்.
- **தாய்க்கும், பிறந்த குழந்தைக்கும் கிடைக்கும் கவனிப்பும் ஊட்டச்சத்தும்:** பொதுவாக, பெண் குழந்தையைப் பெற்ற தாயைவிட ஆண் குழந்தையைப் பெற்ற தாய்க்கு அன்பும் ஆதரவும் ஒரு உயர்ந்த அந்தஸ்தும் கொடுக்கப்படும். இதில் பிரசவத்திற்குப் பின் கொடுக்கப்படும் கவனிப்பும், ஊட்டச்சத்தும் கூட ஆண் குழந்தையைப் பெற்ற தாய்க்கும், அந்த ஆண் குழந்தைக்கும் தான் அதிகமாகக் கிடைக்கும்.
- **குழந்தைக்கான சுகாதார சேவைகள்:** பொதுவாக, குடும்பத்தார் ஆண் குழந்தையை மருத்துவமனைக்குக் கொண்டு சென்று காண்பிப்பார்கள். ஆனால் பெண் குழந்தைக்கு வீட்டு வைத்தியம் செய்வார்கள் அல்லது கிராம வைத்தியரிடம் காண்பிப்பார்கள். மேலும், பெண் குழந்தையைவிட ஆண் குழந்தைக்கு ஆர்வமாக தாய்ப்பால் தருவார்கள்.
- **பெண் குழந்தை பிறப்பதைத் தடுத்தல்:** கருவிலுள்ள சிசுவின் பாலினத்தைக் கண்டறியும் பழக்கம் அதிகமாக பரவியுள்ளது. இதனால் பெண் கருக்கொலைகளும் பெண் குழந்தை விகிதாச்சாரக் குறைவும் ஏற்பட்டிருக்கிறது.

- ***குழந்தைக்கு கல்வி கொடுப்பது:*** *எழுத்தறிவு சதவீதம், பெண்களை விட ஆண்களே அதிகம் படித்தவர்களாக இருக்கிறார்கள் என்று தெரிவிக்கிறது.*

- ***விளையாட்டு நேரம்:*** *பொதுவாக, பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகள் விளையாட வெளியே அனுப்பப்படுகிறார்கள்.*

- ***வீட்டு வேலையில் உதவுதல்:*** *பையன்களை விட பெண் குழந்தைகள் வீட்டு வேலைகளில் உதவ வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறார்கள்.*

- ***பருவமடைதலும் பெண் குழந்தைகள் நடமாட்டமும்:*** *பெண் குழந்தைகள் பருவமடைந்தவுடன் வெளியே சுதந்திரமாக போய் வருவதை குடும்பத்தார் ஊக்கப்படுத்துவது இல்லை. சிறுவர்களுக்கு இத்தகைய தடைகள் இல்லை.*

- ***திருமணம்:*** *தங்கள் மகன்களைவிட மகள்களுக்கு மிக சீக்கிரமாகவே மணமகனைத் தேடுதல், வரதட்சணை பற்றி கவலைப்படுதல் போன்றவற்றில் பெற்றோர் ஈடுபடத் தொடங்குகிறார்கள்.*

- ***தீர்மானம் செய்யும் அதிகாரம்:*** *பையன்களைப் போல அல்லாமல் பெண்களுக்கு தங்கள் உடை பற்றி அல்லது தெரியாதவர்களிடம் பேசுதல் போன்ற செயல்களுக்கு எந்த உரிமையும் இல்லை.*

## *பயிற்றுநர் குறிப்பு - 1*

### *கலந்துரையாடலுக்கான கேள்விகள் :*

- *'பெண் குழந்தை / வளரிளம் பருவப் பெண்' என்று குறிக்கப்பட்ட மூலையைவிட 'ஆண்குழந்தை / வளரிளம் பருவ ஆண்' எனக் குறிக்கப்பட்ட மூலையில் பலர் நின்ற போது நம் உணர்வு எவ்வாறு இருந்தது?*

- *பெண் குழந்தைக்கும் ஆண் குழந்தைக்கும் ஊட்டச்சத்து மற்றும் நல சேவைகளில் பிறப்பிலிருந்து பெரியவராகும் வரை வெவ்வேறு விதங்களில் கவனம் இருக்க வேண்டுமா? இந்த நிலையை மாற்ற யார் யாருக்குப் பொறுப்பு உள்ளது?*

- *ஏன் பெண் குழந்தைகள் பருவமடைந்த பிறகு விளையாடப் போகாமல் வீட்டு வேலைகள் செய்ய வேண்டும்? இந்த நிலையை மாற்ற என்ன செய்ய முடியும்?*

- *ஏன் பெண் குழந்தைகள் சீக்கிரமாகத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று எதிர் பார்க்கப்படுகிறது? வரதட்சணை பேசப்படுவது எதனால்? பெண் குழந்தைகளுக்கு கல்வி கொடுப்பதும் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதும் இந்நிலையை மாற்றுமா?*

- *குடும்பத்தில், ஏன் ஒரு பெண்ணிற்கு தன் வாழ்வைக் குறித்து முடிவு எடுக்கும் அதிகாரம் இருக்கக் கூடாது? இந்த நிலையை எவ்வாறு மாற்றுவது?*

- *பங்கேற்பாளர்களோடு விவாதிக்கப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து, கருத்துத்தாளில் உள்ள கருத்துக்களோடு இணைத்து கூறி அமர்வை முடிக்க வேண்டும்.*

# கருத்துத் தாள்

- குடும்பத்தில் குழந்தை பிறந்தவுடனேயே ஆண், பெண் பாலினப் பாகுபாடு தொடங்குகிறது. பெண் குழந்தை பிறந்ததைக் கொண்டாடாமல் இருப்பதிலிருந்தும், பெண் குழந்தை பெற்ற தாயை வேறு விதமாக நடத்துவதிலிருந்தும் குடும்பத்தாருடைய மனப்பான்மை தெளிவாகத் தெரிகிறது. சிறுமிகள் மற்றும் பெண்களின் முழு வாழ்க்கையிலும் இந்தப் பாகுபாட்டைப் பார்க்கவும் உணரவும் முடிகிறது. வேலையிலோ, கல்வியிலோ, திருமணத்திலோ, வேலை வாய்ப்புகளிலோ மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் வன்முறைகளிலோ, அவர்களுக்குள்ள முடிவெடுக்கும் அதிகாரத்திலோ – எல்லா நேரங்களிலும் இந்த பாகுபாட்டினைக் காண முடிகிறது.

- பொதுவாக, வீட்டு வேலைகள் அனைத்தும் பெண்கள் மற்றும் சிறுமிகளின் பொறுப்பாகவே கருதப்படுகிறது. இதனால் கல்வியிலும் வேலையிலும் அவர்களுக்கு குறைந்த அளவிலேயே வாய்ப்புகள் கிடைக்கின்றன. ஆனால் ஆண்கள், கல்வி, விளையாட்டு, பொழுதுபோக்கு போன்றவற்றின் பயன்பாடுகளை மகிழ்ச்சியாக அனுபவிக்கிறார்கள். பெண்கள் அதிகமாக வீட்டு வேலைகளில் ஈடுபட்டாலும் அது அங்கீகரிக்கப்படுவதில்லை மற்றும் அவர்களுக்கு அதற்கான ஊதியமோ சம்பளமோ கிடைப்பதில்லை. இது நியாயமானது இல்லை. ஏனென்றால் அவர்களுக்கு பொருளாதாரச் சுதந்திரம் இல்லை. இது அவர்களின் முடிவு எடுக்கும் அதிகாரத்தைக் குறைக்கிறது.

- பெரும்பாலும் வீட்டு வேலைகள் முழுவதும் பெண்கள் மட்டுமே செய்கிறார்கள்.

- பெண்கள் வெளியில் சென்று வேலை செய்தாலும் அதன் கூடவே வீட்டு வேலைகளையும் செய்ய வேண்டிய பொறுப்பு உள்ளது.

- வீட்டு வேலைகளிலிருந்து பெண்களுக்கு இடைவெளியோ, விடுப்போ, ஓய்வோ கிடையாது.

- எப்பொழுதும் வீட்டு வேலைகளிலேயே ஈடுபட்டுள்ளதால் பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் தங்கள் கல்வித் தகுதியை வளர்த்துக்கொள்ளவும், திறன்களில் பயிற்சி பெறவும், அறிவை வளர்த்துக்கொள்ளவும் நேரம் கிடைப்பதில்லை. ஓய்வுக்கும் பொழுது போக்கிற்கும் கூட நேரம் கிடைப்பதில்லை.

- பெண்கள் செய்யும் வேலைகளை, குடும்பத்தார் மதிப்பதில்லை. வீட்டிலுள்ள மற்றவர்கள் இந்த வீட்டு வேலைகளைச் செய்வது அவர்களின் தன்மானத்திற்கு இழுக்காக கருதுகிறார்கள். பெரும்பாலும் வீட்டு வேலைகள், எல்லாருடைய வேலைகளாக கருதப்படுவது இல்லை. இது பெண்களுக்கே உரித்தான வேலை, அவர்களால்தான் இதை சிறப்பாக செய்ய முடியும் என்று கருதப்படுகிறது.

- அதே நேரத்தில் இதே வேலைகளை ஆண்கள் வெளியே ஊதியத்திற்காகச் செய்கிறார்கள். அது மதிப்பான வேலையாகவும் கருதப்படுகிறது. இந்த சமுதாயத்தில் ஆண்கள் இந்தப் பணிகளை எல்லாம் வீட்டில் செய்யக்கூடாது என்று நம்பப்படுகிறது. இதற்கு சில உதாரணங்கள் :

  - உணவு விடுதிகள் மற்றும் உணவகங்களில் சமைத்தல்
  - சலவை மையத்தில் துணி துவைத்தல்
  - தையல் கடையில் துணி தைத்தல்
  - பள்ளி, கல்லுரி மற்றும் பல்கலைக்கழகங்களில் கற்றுத் தருதல்

- போதுமான கல்வி அறிவின்மை, வாழ்வாதார திறன்கள் இல்லாமை, பருவமடைந்த பிறகும் தாயான பிறகும்  சுதந்திரமான நடமாட்டத்திற்கான தடை ஆகியவை பெண்களுக்கு முடிவு எடுக்கும் திறனும், அதிகாரமும் போதுமான அளவில் இல்லாமல் போவதற்கான காரணங்கள் ஆகின்றன. சிறு வயதிலிருந்தே போதுமான உடல்நலப் பராமரிப்பின்மை, குறைந்த சுய மதிப்பு ஆகியவையும் சூழ்நிலைகளை மேலும் சிக்கலாகுகின்றன.

# அமர்வு 3

## வன்முறைமற்றும் உரிமைகள்

**நேரம் :** *90 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** வெள்ளை பலகை, மார்க்கர் பேனாக்கள்.

### கற்றலின் நோக்கம் :

- *இந்த அமர்வின் இறுதியில், வன்முறையின் வெவ்வேறு வடிவங்களையும், அதனால் பாதிக்கப்படுபவர்கள் யார் என்பதையும் பங்கேற்பாளர்கள் உணர்ந்து கொள்வார்கள்.*
- *பெண்கள் மீது நடைபெறும் வன்முறைகளினால் ஏற்படும் தாக்கங்களையும், அதனால் மீறப்படும் உரிமைகளையும் பங்கேற்பாளர்கள் புரிந்துகொள்வார்கள்.*

### செயல்படுத்தும் விதம் :

- *பங்கேற்பாளர்களை நான்கு குழுக்களாகப் பிரிக்க வேண்டும்.*
- *ஒவ்வொரு குழுவுக்கும் **பயிற்சித்தாள் -1** இல் கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளைக் கொடுத்து அந்தந்த காலக் கட்டங்களில் பெண் குழந்தைகளோ, பெண்களோ என்ன மாதிரியான வன்முறையை எதிர்கொண்டார்கள் என்று கலந்துரையாடும்படி கூறவேண்டும்.*
- *பயிற்றுநர், பங்கேற்பாளர்கள் குழுவில் கலந்துரையாடும் பொழுது ,*
  - ✦ *உடல் ரீதியான வன்முறை,*
  - ✦ *பாலியல் ரீதியான வன்முறை,*
  - ✦ *மன ரீதியான வன்முறை மற்றும்*
  - ✦ *பாலியல் ரீதியான அச்சுறுத்தல்கள்*

  *என வன்முறையின் நான்கு அம்சங்களையும் சேர்த்துச் சிந்திக்கச் சொல்ல வேண்டும்.*
- *நான்கு வன்முறைகளில் ஏதேனும் ஒரு நிகழ்வை குழுவில் சிந்தித்து அதனை பொது அமர்வில் நடித்துக்காட்டச் சொல்ல வேண்டும். நடிக்கும் பொழுது பேசக் கூடாது.*

மௌனமாக, செய்கையின் மூலமே நடித்துக் காட்ட வேண்டும். சொல்ல வரும் வன்முறையை அசையா பிம்பமாக ஒரு சிலை போல காட்சிப்படுத்த வேண்டும் என்று பயிற்றுநர் விளக்க வேண்டும்.

- ஒவ்வொரு குழுவாகப் பொது அமர்வில் நடித்துக் காட்சிப்படுத்தும் பொழுது, மற்ற குழுவினர் கவனமாகப் பார்த்து என்ன வகை வன்முறையைக் காட்சிப்படுத்துகின்றனர் என்பதைத் தெரிந்துகொள்ளும்படி கூற வேண்டும்.

- பின்னர் பயிற்றுநர், கீழ்க்காணும் அட்டவணையை வெள்ளை பலகையில் எழுதி ஒவ்வொரு குழுவும் காட்சிப்படுத்தியதன் அடிப்படையில் பொது அமர்வில் கலந்துரையாடி, கட்டத்தை நிரப்ப வேண்டும்.

| குழு | வன்முறை நிகழ்வுகள் என்ன? | வன்முறையின் வடிவம் என்ன? | யார் அந்த வன்முறையை எதிர்கொண்டது? | யார் அந்த வன்முறையை நிகழ்த்தியது? | வன்முறையை எதிர்கொண்ட நபருக்கு அதனால் ஏற்பட்ட தாக்கம் என்ன? | இந்த நபரின் எந்த உரிமைகள் மீறப்பட்டன? |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |

- பயிற்றுநர் இந்த அட்டவணையை நிரப்புவதற்கு, பங்கேற்பாளர்கள் தாங்கள் பார்த்த காட்சிகளையும், பிம்பங்களையும் மனதில் கொண்டு பதில் அளித்து ஒவ்வொன்றாக நிரப்ப வேண்டும்.

- பயிற்றுநர், **பயிற்றுநர் குறிப்பு -1** இல் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி பதில் கருத்துக்கள் வருவதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

- தேவைப்பட்டால், பயிற்றுநர் விடுபட்ட உரிமை மீறல்கள் பற்றி பங்கேற்பாளர்களைப் பேசத் தூண்டலாம்.

- பின்னர், பயிற்றுநர் **பயிற்சித்தாள் -2** இல் உள்ள கேள்விகளைக் கேட்டுக் கலந்துரையாடி கருத்துத்தாளில் உள்ள கருத்துக்களையும் விளக்கிக்கூறி அமர்வை முடிக்க வேண்டும்.

## பயிற்றுநர் குறிப்பு -1 மாதிரி பதில்கள்

1. வன்முறை நிகழ்வுகள், (உதாரணம்: பேருந்தில், கடை வீதியில் பாலியல் தொல்லை, வீட்டில் வன்முறை, மருத்துவமனையில் கருவிலேயே பாகுபாட்டுடன் பாலினத் தெரிவு, கல்வி பெறுவதில் பாலினப் பாகுபாடு முதலியன).

2. உடல் ரீதியான, மன ரீதியான, உளவியல் ரீதியான, பொருளாதார ரீதியான, பாலியல் ரீதியான வடிவங்களில் வன்முறை.

3. பெண்கள், குழந்தைகள், அந்தப் பெண்களுடைய பெற்றோர் முதலியோர்.

4. இந்தக் கேள்விக்குப் பல்வேறு பதில்கள் இருக்கக்கூடும். உதாரணத்திற்கு, மாமனார், மாமியார், கணவர், அண்டை வீட்டார், பெற்றோர், தெரியாதவர்கள் முதலியோர்.

5. குறைவான நடமாட்டம், பாதுகாப்பு, மிகக் குறைந்த சுயமரியாதை போன்ற தாக்கத்தை ஏற்படுத்தும்.

6. இந்த பத்தியில் பலவகை உரிமை மீறல்கள் குறிப்பிடப்படலாம். உதாரணத்திற்கு, சுதந்திரத்துக்கான உரிமை மீறல், சம உரிமை மீறல் போன்றவை.

### பயிற்சித்தாள் -1

- குழு 1: கருவிலிருந்து பத்து வயது வரை
- குழு 2 :வளரிளம் பருவம்
- குழு 3 : திருமணமாகி இனப்பெருக்க காலக்கட்டம்.
- குழு 4 : வயதான பெண்

### பயிற்சித்தாள் -2

- மேலே குறிப்பிடப்பட்டுள்ள இந்த அட்டவணை நமக்கு என்ன கூறுகிறது?
- எல்லா நிகழ்வுகளிலும் எந்த நபர் பாதிக்கப்பட்டுள்ளார்?
- எல்லா நிகழ்வுகளிலும் யார் வன்முறையை நிகழ்த்தியது? பாதிக்கப்பட்ட நபருக்குத் தெரிந்தவர்களா?
- இது பாதிக்கப்பட்ட நபருக்கு எவ்வித தாக்கத்தை ஏற்படுத்துகின்றது?
- எல்லா சம்பவங்களிலும் பொதுவான காரணிகள் என்ன?

# கருத்துத் தாள்

வன்முறை, பாதிக்கப்பட்டவர் மேல் உடனடியாக தாக்கத்தை ஏற்படுத்துவதோடு அவர்களுடைய பாலியல், உடல், மனம் சம்பந்தமான வாழ்விலும் நீண்டகாலத் தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

பெரும்பாலான வன்முறை நிகழ்வுகளில், பாதிக்கப்பட்டவர் பெண்ணாகவோ, பெண் குழந்தையாகவோ, அவளுடைய குடும்ப உறுப்பினர்களாகவோ, அவளுடைய குழந்தைகளாகவோதான் இருக்கிறார்கள்.

வன்முறையால் தேவையில்லாத கர்ப்பம், பாதுகாப்பற்ற கருக்கலைப்பால் வரும் சிக்கல்கள், எச்ஐவி உட்பட பாலியல் தொற்றுகள், அடி உதையால் வரும் காயங்கள் போன்ற உடல் நலப் பிரச்சினைகள் வரலாம் .

மனச்சோர்வு, பதற்றம், மோசமான நிகழ்வுகளால் அதிர்ச்சிகரமான மன அழுத்தம், தற்கொலை செய்ய நினைத்தல், மரணம் போன்ற மனநலப் பிரச்சினைகள் வரலாம். வன்முறை, குழந்தைகளின் உயிர் வாழ்தலையும் வளர்ச்சியையும், படிப்பையும் பாதிக்கிறது. வீட்டின் பொருளாதார தேவைகளுக்கு ஆண்களை சார்ந்திருக்கும் சூழலில் பெண்கள் மேலும் ஒடுக்கப்படுகிறார்கள்.

சிறுவயதில் இருந்தே சுற்றிலுமுள்ள பெரிய ஆண்கள், பெண்களைப் பார்த்து வளரும் பெண் குழந்தைகள் அடங்கிப் போகிறவர்களாகவும், ஆண் குழந்தைகள் அதிகாரம் செலுத்துபவர்களாகவும் வளர்க்கிறார்கள்; வளர்க்கப்படுகிறார்கள்.

அவர்களின் இரண்டாம்பட்ச சமூக நிலையினால், பலவீனமானவர்களாய் பார்க்கப்பட்டு, வன்முறையை எதிர்கொள்கின்றனர். மேலும் பெரும்பாலான நிகழ்வுகளில் இந்த வன்முறையை ஏற்படுத்துவோர் பாதிக்கப்பட்டவர்களுக்கு தெரிந்தவராகவோ அல்லது உறவினராகவோ இருக்கின்றனர். அவருடைய வீடோ அல்லது இருப்பிடமோ, அவருக்கு பாதுகாப்பற்றதாக ஆகிவிடுகிறது; வெளியே பாதுகாப்பைத் தேடும் வாய்ப்பைக் குறைத்துவிடுகிறது; அவருடைய பாதுகாப்பற்ற நிலையை அதிகரிக்கிறது. சுயமரியாதையுடன், பாதுகாப்புடன், வன்முறையிலிருந்து விடுதலையடைந்து வாழ கிடைக்கக்கூடிய வசதிகளும், பராமரிப்பு பெறக்கூடிய வாய்ப்புகளும் குறைகின்றன.

# அமர்வு
# 4

## நம்முடைய வாழ்வில் பாலினம் மற்றும் சமூகப் பாலினத்தால் ஏற்படும் தாக்கத்தைக் கண்டறிதல்

**நேரம் :** *30 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள்*

### கற்றலின் நோக்கம் :

- *இந்த அமர்வின் இறுதியில் பங்கேற்பாளர்கள் பாலினம் மற்றும் சமூகப்பாலினத்திற்கு இடையே உள்ள வேறுபாட்டைப் புரிந்துகொள்வார்கள்.*
- *சமுதாயம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கட்டமைத்துள்ள பாத்திர வரையறைகளை ஆராய்ந்து, இத்தகைய பாத்திர வரையறைகளும், பொறுப்புகளும் அவர்களின் முடிவெடுக்கும் திறனைக் குறைப்பதோடு வளர்ச்சிக்கான குறைந்த ஆதாரங்களையே தருகிறது என்பதை பங்கேற்பாளர்கள் கண்டுகொள்வார்கள்.*

### செயல்படுத்தும் விதம் :

- ***அமர்வு -1*** *இல் நாம் கலந்துரையாடிய கருத்துக்களை நினைவில் கொள்ளச் சொல்லவேண்டும்.*
- *ஒரே மாதிரியான பாலின வரையறைகளை ஒட்டி, பாலினம் மற்றும் சமூகப் பாலினத்தைப் புரிந்து கொள்வதுதான் இந்த அமர்வின் நோக்கம் என்று கூறி அமர்வை பயிற்றுநர் தொடங்க வேண்டும்.*
- *பயிற்றுநர்,* ***பயிற்சித்தாள் -1*** *இல் உள்ள அட்டவணையை வரைந்து பங்கேற் பாளர்களுக்கு பாலினம் மற்றும் சமூகப் பாலினம் என்றால் என்ன என்று விளக்கிக் கூறவேண்டும்.*
- *பின்னர்* ***பயிற்சித்தாள் -2****இல் உள்ள வாக்கியங்களை ஒவ்வொன்றாக வாசித்து அது பாலினம் சார்ந்ததா? சமூகப் பாலினம் சார்ந்ததா? என்று பயிற்றுநர் கேட்க வேண்டும்.*
- *பயிற்றுநர் வாக்கியத்தை மட்டும் கூறவேண்டும் (அடைப்புக் குறிக்குள் உள்ளதைக் கூறக்கூடாது. அது பயிற்றுநரின் புரிதலுக்காகக் கொடுக்கப்பட்டவை).*

- *பங்கேற்பாளர்கள், தாங்கள் கூறும் பதில்களுக்கு காரணங்கள் சொல்லி அது பாலினமா அல்லது சமூகப் பாலினமா என்று குறிப்பிட வேண்டும்.*

- *பின்னர் பயிற்றுநர், **பயிற்சித்தாள் -3** இல் உள்ள கேள்விகளைக் கேட்டு கலந்துரையாட வேண்டும். கலந்துரையாடலின்போது கருத்துத்தாளில் உள்ள கருத்துக்களையும் விளக்கிக் கூறவேண்டும்.*

### பயிற்சித்தாள் -1

| பாலினம் (Sex) | சமூகப் பாலினம் (Gender) |
|---|---|
| உடற்கூறு சார்ந்தது | சமூகம் கட்டமைத்தது |
| நீங்கள் இதனுடன் பிறக்கிறீர்கள் | இது கற்கப்பட்டது |
| அறுவை சிகிச்சையின்றி, பிறவிதமாக மாற்றமுடியாது | பல்வேறு சமூகங்களில், நாடுகளில், கலாச்சாரங்களில் வெவ்வேறு வரலாற்றுக் காலக் கட்டங்களை ஒட்டி இது மாறுகிறது |

### பயிற்சித்தாள் -2

- *பெண்கள் குழந்தைகளைப் பெற்றெடுக்கின்றனர். ஆண்கள் பெற்றெடுப்பதில்லை. **(உடற்கூறு பாலினம்)***

- *சிறு பெண் குழந்தைகள் மென்மையானவர்கள். ஆண் குழந்தைகள் முரடானவர்கள். **(சமூகப் பாலினம்)***

- *இந்திய விவசாயத் தொழிலாளர்களுக்கிடையே ஒரே மாதிரியான வேலைக்கு, ஆண்களின் சம்பளத்தில் 40 – 60 சதவீதமே பெண்களுக்குச் சம்பளமாக அளிக்கப்படுகிறது. **(சமூகப் பாலினம்)***

- *பெண்களால் குழந்தைகளுக்கு தாய்ப் பால் அளிக்கமுடியும். ஆண்களால் குழந்தைகளுக்கு புட்டிப் பால் அளிக்கமுடியும். **(உடற்கூறு பாலினம், சமூகப் பாலினம்)***

- *ஒரு பெண் வேலைக்குச் செல்பவராக இருந்தாலும், அவள்தான் வீட்டையும் கவனித்துக்கொள்ள வேண்டும். **(சமூகப் பாலினம்)***

- *குடும்பத்திற்கான பொருளாதாரத் தேவைகளை சமாளிப்பது ஆண்களுடைய கடமை. **(சமூகப் பாலினம்)***

- *வணிகம் செய்பவர்களில் முக்கால்வாசிப் பேர் ஆண்கள். **(சமூகப்பாலினம்)***

- *வளரிளம் பருவ காலத்தில் ஆண்களுக்குக் குரல் உடையும், பெண்களுக்கு உடையாது. **(உடற்கூறு பாலினம்)***

- *அபாயகரமான பணிகளான சுரங்கங்களில் வேலை செய்வதற்கு பெண்கள் தடை செய்யப்பட்டுள்ளனர்.* ***(சமூகப் பாலினம்)***

- *ஐக்கிய நாடுகள் சபையின் ஆய்வறிக்கையின்படி உலகத்தின் 67 சதவீத வேலையைப் பெண்கள் செய்கின்றனர். ஆனால் அவர்களுடைய வருமானம் உலகத்தின் வருமானத்தில் 10 சதவீதமே இருக்கின்றது.* ***(சமூகப் பாலினம்)***

## பயிற்சித்தாள் -3

- *உடற்கூறு சாராத குணங்கள் இரு பாலினத்தவருக்கும் பொதுவானதாக இருக்கும்போது ஏன் இந்தப் பாகுபாடு ஏற்படுகின்றது?*

- *நமது உரிமைகளை அனுபவிப்பதற்கு நமது பாலினம் எந்த வழியில் தடையாக உள்ளது? பாலினத்தால், ஒருவர் உரிமை மீறலுக்கு எளிதில் ஆளாகும் வாய்ப்புள்ளதா?*

- *ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே உள்ள பாத்திர வேறுபாட்டையும், நடமாட்டத்தில், கல்வி வாய்ப்புகளில், அரசியல் உரிமைகளில் மற்றும் குடும்ப உறுப்பினர்களைப் பற்றி அக்கறை எடுத்துக்கொண்டு கவனிக்கும் பொறுப்புகளில் ஏற்படும் கட்டுப்பாடுகளையும் பற்றி பயிற்றுநர்கள் பேச வேண்டும்.*

# கருத்துத் தாள்

இயற்கையும், உயிரியலும் நீங்கள் ஆணாகப் பிறந்திருக்கிறீர்களா அல்லது பெண்ணாகப் பிறந்திருக்கிறீர்களா என்பதை மட்டுமே தீர்மானிக்கிறது. ஆனால் சமூகத்தால் நிர்ணயிக்கப்படுகின்ற பாலின வரையறைகள் ஆணுக்கும் பெண்ணுக்கும் வெவ்வேறு விதமான பாத்திரங்களையும் பொறுப்புகளையும் தருகிறது.

கலாச்சாரம் மற்றும் சமூக விதிகள் ஆண்களை வலுவானவர்களாக, ஆக்ரோஷமாக இருப்பவர்களாக, மற்றவர்களை கட்டுப்படுத்துபவர்களாக, உணர்ச்சிகளை வெளியே காண்பித்துக் கொள்ளாதவர்களாக உருவாக்குகிறது.

இதேபோல் பெண்கள் என்றால் அடங்கிப் போகிறவர்களாக, பலமற்றவர்களாக, எதற்கும் பொறுத்துப் போகிறவர்களாக, ஆண்களைச் சார்ந்து இருப்பவர்களாக வாழ வேண்டும் என்றும் வரையறுக்கிறது.

இப்படி ஆண்களையும் பெண்களையும் வெவ்வேறு விதமாக சமூகமயமாக்குவது இருவருக்கிடையேயும் அதிகாரத்தில், சக்தியில் ஏற்றத் தாழ்வுகளை உருவாக்குகிறது. சிறுவயதில் இருந்தே சுற்றிலுமுள்ள பெரிய ஆண்கள், பெண்களைப் பார்த்து வளரும் பெண் குழந்தைகள் அடங்கிப் போகிறவர்களாவும், ஆண் குழந்தைகள் அதிகாரம் செலுத்துபவர்களாகவும் வளர்கிறார்கள், வளர்க்கப்படுகிறார்கள்.

இதன் காரணமாக ஆண்களின் மனோபாவம், பெண்களை மரியாதைக் குறைவாகப் பார்ப்பதாகவே இருக்கிறது. தனக்கு அதிகாரம் போய்விடுமோ அல்லது குறைந்துவிடுமோ என்று நினைத்து எப்போதும் அதிகாரத்தைச் செலுத்த முற்படுகிறார்கள் .

உங்கள் பாலினம் சார்ந்து குறிப்பிட்ட சில பாத்திர வரையறைகள் அல்லது சில எதிர்பார்ப்புகளை உங்கள் மேல் வைப்பது, உங்கள் உரிமைகளை அனுபவிப்பதற்கு தடையாக இருக்கும். உதாரணத்திற்கு, ஒரு குடும்பத்தில் ஆண்களின் முடிவுகளைப்பற்றி பெண்கள் கேள்வி கேட்காமல் இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்புடைய ஒரு கலாச்சாரத்தில், வன்முறை ஏற்பட்டாலும் பெண்கள் அமைதியாக இருக்க நிர்பந்திக்கப்படுகின்றனர். இதனால் அவர்களுடைய வன்முறையற்ற வாழ்க்கைக்குரிய உரிமை ஆபத்துக்கு உட்படுத்தப்படுகிறது.

பாலினத்திற்கும் சமூகப் பாலினத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டினை எப்போதும் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். நம்முடைய வீடுகளிலும், சமூகக் குழுக்களிலும், சமுதாயத்திலும் நுட்பமான பாகுபாடும் அதிகாரமும் செயல்படுவதைப் பற்றி விழிப்புணர்வோடு இருப்பது மிகவும் உதவியாக இருக்கும்.

ஆண் – பெண் பாத்திர வரையறைகளும், பொறுப்புகளும், சமூக விதிகள், மத ஒப்புதல்கள், குடும்பக் கலாச்சாரம் மற்றும் சட்டரீதியான உரிமைகள் ஆகியவற்றைக்

கொண்டு பல காலமாக கட்டமைக்கப்பட்டுள்ளன. உண்மையில் எல்லா வேலைகளையும் ஆண்கள் பெண்கள் இருவராலும் செய்யமுடியும். அதற்கு ஆண்கள் பெண்கள் இருவருக்கும் சரிசமமான ஆதார வளங்கள், முடிவெடுக்கும் அதிகாரங்கள், முழுமையான நடமாட்டத்திற்கான சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். ஆனால் இந்தச் சமுதாயம் செயற்கையான தடைகளை நம்மைச் சுற்றி உருவாக்கியுள்ளது.

ஒரு பெண் திருமணமான பின், குடும்பத்தை விட்டுச் சென்றுவிடுவாள், அதனால் குடும்ப வருமானத்துக்கு அவளால் எந்தப் பங்களிப்பும் இருக்காது என்றே பார்க்கப்படுகின்றாள். ஒரு பையனின் படிப்பு, குடும்பத்தின் எதிர்காலத் தேவைகளுக்கான முதலீடாகவே பார்க்கப்படுகின்றது.

# அமர்வு 5

# உறவுகளில் சமூகப் பாலினத்துக்கும் அதிகாரத்துக்கும் இடையே உள்ள தொடர்பு

**நேரம் :** *45 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள்*

## கற்றலின் நோக்கம் :

- *இந்த அமர்வின் இறுதியில், உறவுமுறைகளில் யாருக்கு அதிகாரம் உள்ளது என்பதையும் அதனால் அவர்களுக்கு முடிவு எடுக்கும் உரிமை இருக்கிறது என்பதையும் பங்கேற்பாளர்கள் புரிந்து கொள்வார்கள்.*
- *உறவுமுறைகளில் அதிகாரம் உள்ளவர்கள் தங்கள் அதிகாரத்தை நேர்மறையாக பயன்படுத்துவதன் அவசியத்தையும் தவறாகப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகளைப் பற்றியும் அலசி, ஆராய்ந்து பங்கேற்பாளர்கள் புரிந்துகொள்வார்கள்.*

## செயல்படுத்தும் விதம் :

- *பயிற்றுநர் சார்ட் பேப்பரிலோ, கரும்பலகையிலோ "அதிகாரம்" என்ற வார்த்தையை எழுதி, பங்கேற்பாளர்கள் இந்த வார்த்தையை பார்த்தவுடன் அல்லது வாசித்தவுடன் என்ன நினைக்கிறார்கள் என்று ஒரு வரியில் விளக்கச் சொல்லவேண்டும்.*
- *பின்னர், பயிற்றுநர் சார்ட் பேப்பரில் **பயிற்சித்தாள் -1**இல் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை மூன்று கட்டங்களாகப் பிரித்து வரைந்து கொள்ளவேண்டும்.*
- *அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள உறவு முறைகளில் யார் அதிகாரமிக்கவர்கள், யார் உதவி செய்பவர்கள், யார் மற்றவருக்குத் தீங்கு ஏற்படுத்தியவர்கள் என்பது போன்ற கேள்விகளைக் கேட்டு அட்டவணையை நிரப்ப வேண்டும்.*
- *மேலும் ஒவ்வொரு உறவுமுறையிலும் உள்ள ஆணோ அல்லது பெண்ணோ எங்கிருந்து அந்த அதிகாரத்தைப் பெற்றனர்? எது அவர்களை அதிகாரம் செய்ய வைக்கிறது போன்றவற்றை கலந்துரையாடி அட்டவணையை நிரப்ப வேண்டும்.*

- *பின்னர்* ***பயிற்சித்தாள் -2*** *இல் உள்ள கேள்விகளை பொது அமர்வில் கேட்டுக் கலந்துரையாடி, கருத்துத்தாளில் கூறியிருக்கும் கருத்துக்களையும் கூறி விளக்க வேண்டும்.*

## பயிற்சித்தாள் -1

| உறவுமுறை | யார் அதிகாரம் மிக்கவர்? | என்ன காரணம் |
|---|---|---|
| தந்தையும் மகளும் | தந்தை | வயதில் மூத்தவர், பணம் சம்பாதிப்பவர், உடல் வலிமை மிக்கவர் |
| தந்தையும் தாயும் | | |
| ஆசிரியர் மற்றும் மாணவர் | | |
| வகுப்புத் தலைவர் மற்றும் மாணவர் | | |
| அண்ணன்/தம்பி மற்றும் அக்கா/தங்கை | | |
| தந்தையின் தாய் மற்றும் சொந்தத் தாய் | | |

## பயிற்சித்தாள் -2

- *உறவுகளுக்குள் அதிகாரம் என்பது எதிர்மறைப் பண்பா அல்லது ஓர்அம்சமா?*
- *ஏன் உறவுகளில் மோசமாக நடத்தப்படுவது நடக்கிறது?*
- *நாம் ஏன் வளரிளம் பருவப் பெண்களையும் பிற பெண்களையும் விட, வளரிளம் பருவ ஆண்களையும் பிற ஆண்களையும் மிகுந்த அதிகாரம் உடையவர்களாகக் கருதுகிறோம்?*
- *ஒரு உறவில், பிறரை மோசமாக நடத்தும் அதிகாரமிக்க நபரையும், பாதிக்கப்பட்டவரையும் சரிசமமாகக் குறை சொல்லலாமா?*
- *உறவுகளிலும், முடிவுகள் எடுக்கும்போதும் தங்கள் அதிகாரத்தை மேம்படுத்திக்கொள்ள வளரிளம் பருவப் பெண்களும் மற்ற பெண்களும் என்ன முயற்சிகளை எடுக்கலாம்?*

## கருத்துத் தாள்

அதிகாரம் என்பது அதுவாகவே நேர்மறையாகவோ, எதிர்மறையாகவோ இருப்பதில்லை. சரியாகவோ தவறாகவோ அந்த அதிகாரத்தைப்பயன்படுத்தும் போதுதான் நன்மையோ, தீமையோ ஏற்படுகின்றது. அந்த அதிகாரம் எதிர்மறையாக பயன்படுத்தப்பட்டால், பாதிக்கப்பட்டவரது உரிமைகள் மீறப்பட்டு, அவர்களிடையே உள்ள உறவை எதிர்மறையாகப் பாதிக்கும்.

பெண் குழந்தைகள் என்ற முறையில், சமூகப் பாலினம் சார்ந்த பிரச்சினைகள் பற்றி விழிப்புணர்வோடு இருப்பது நல்லதுதான். ஆனால் அது மட்டுமே போதாது. முதலில் தன்னிடமிருந்து துவங்கி, அந்தச் சூழலை மாற்ற முயற்சி எடுப்பதும் முக்கியம். அதாவது, அதிகாரத்தைப் பயன்படுத்தி முடிவெடுக்கும் திறனை மேம்படுத்தவும், குடும்பத்திலும், சமூகத்திலும் அவர்களுடைய பாத்திரங்களையும் பொறுப்புகளையும் எப்படி மேம்படுத்திக் கொள்வது என்பது பற்றியும் யோசிக்க வேண்டும்.

பொதுவாக, மூன்று வகையான அதிகாரங்கள் உறவுகளை வரையறுப்பதிலும், முடிவுகள் எடுப்பதிலும் செயல்படுகின்றன. இது வளரிளம் பருவப் பெண்களுக்கும் பெரிதும் பொருந்தும்.

- **மக்கள் மீது அதிகாரம்** - நம்மைச் சுற்றியுள்ளோர் மீது நாம் அதிகாரம் செலுத்துகின்றோம். ஏனெனில், அவர்களுக்கு கிடைக்காத ஆதார வளங்களும் அவற்றைக் கட்டுப்படுத்தும் வாய்ப்புகளும் நமக்குக் கிடைக்கின்றன. உதாரணத்திற்கு, ஒருவரின் தந்தை அதிகாரம் உடையவராக இருக்கின்றார். ஏனெனில், அவரது வருவாய் மூலம் வளங்களை அளிப்பவராக இருக்கிறார்.

- **மக்கள் அல்லது அமைப்பின் கீழ் அதிகாரம்** - நாம் ஒருவரை எல்லா அதிகாரமும் உடையவராக அங்கீகரிக்கும்போது, அவரது சார்பில் வேறொருவர் அதிகாரம் செலுத்தலாம். உதாரணத்திற்கு, ஒரு தாய்க்குப் பிரியமான மகன், தன் சகோதரியை மோசமாக வம்புக்கு இழுக்கலாம். சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகள் மற்றும் அமைப்புகள் மூலமும் நாம் அதிகாரத்தை உணர்கிறோம். உதாரணத்திற்கு, புகுந்த வீட்டினர், பெரியவர்கள், மதத் தலைவர்கள் ஆகியோருக்கு மரியாதை செலுத்த வேண்டியுள்ளது.

- **சம அதிகாரம்** - இந்த அதிகாரம், எல்லா உறுப்பினர்களாலும் எவ்விதப் பாகுபாடும் இல்லாமல் ஒருவருக்கொருவர் இடையேயான புரிதல் மூலம் பெறப்படுகின்றது. உதாரணத்திற்கு, கூட்டுறவு சங்கங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், உடன் பணிபுரிவோர், சில சமயங்களில் முற்போக்கான குடும்பங்களிலிருந்தும் இந்த அதிகாரம் கிடைக்கலாம்.

- ***சுய அதிகாரம்*** - இது சுயமாகப் பெறப்பட்டது. இது பொதுவாக, விதிகளையும், பரம்பரை பழக்க வழக்கங்களையும் உடைத்தெறிந்து மாற்றத்திற்காக செயல்படும் வளரிளம் பருவ ஆண்களிடமும், பெண்களிடமும் காணப்படுகின்றது. தங்கள் மகள்களின் உயர் கல்விக்கு ஆதரவளிக்கும் பெற்றோர்களிடமும் இது காணப்படுகின்றது.

இந்த அதிகாரங்களின் அடிப்படையில் நம்முடைய உறவுகளை மறு சீரமைக்கவும், விரும்பித் தேர்ந்தெடுக்கவும் நமக்கு அதிகாரம் இருக்கின்றது.

நம்முடைய பாலின அடையாளம், நமக்கு சமுதாயத்தினுள் எவ்வளவு அதிகாரம் இருக்கிறது என்பதை விளக்குகின்றது. அது கல்வி, ஆரோக்கியம், தொழில்நுட்பம் ஆகியவற்றைப் பெறுவதற்குரிய உரிமையையும், வாய்ப்புகளையும் பாதிக்கின்றது. பொதுவாக, சமூகத்தினால் ஆண்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பாலின அடையாளங்களால் அவர்கள் அதிக அளவில் ஆதார வளங்களை அடைய முடிகிறது. அதனால் அவர்களுக்கு அதிக அதிகாரம் கிடைக்கின்றது. சமமான கல்வி, வேலைவாய்ப்புகளை ஊக்குவித்தால் பெண்களும் அதிக அதிகாரத்தை அடைய முடியும்.

# அமர்வு 6

## வளரிளம் பெண்களின் உரிமைகள்

**நேரம் :** *60 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள், இணைப்பு -1 மனித உரிமைகள் என்றால் என்ன?*

### கற்றலின் நோக்கம் :

- *இந்த அமர்வின் இறுதியில், பெண்களுக்கும் சமமான உரிமைகள் உள்ளது என்பதை பங்கேற்பாளர்கள் உணர்ந்து கொள்வார்கள்.*
- *மேலும் மனித உரிமைக் கொள்கைகளைப் பற்றியும் அறிந்து கொண்டு அதை அவர்கள் வாழ்க்கைக்கு எவ்வளவு முக்கியமானது என்பதைக் கண்ணுணர்ந்து கொள்வார்கள்.*
- *உரிமைகள் பற்றிப் புரிந்துகொள்ளுதலின் தொடர்ச்சியாக பாகுபாட்டிற்கு எதிரான குழந்தைகள் உரிமை மற்றும் பெண்களுக்கான உரிமைகளின் முக்கியத்துவத்தையும் கண்டறிந்து கொள்வார்கள்.*

### செயல்படுத்தும் விதம் :

- *இந்த அமர்வின் தலைப்பையும் நோக்கங்களையும் பங்கேற்பாளர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.*
- *கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை சார்ட் தாளில் வரைந்து பங்கேற்பாளர்கள் எல்லோரும் பார்க்கும்படி வைக்க வேண்டும்.*
- *பங்கேற்பாளர்களிடம், அவர்களின் குடும்பத்தில் உள்ள அனைத்து நபர்களின் பெயரைக் கேட்டு அந்த அட்டவணையின் முதல் கட்டத்தில் பூர்த்தி செய்யச் சொல்ல வேண்டும். குடும்ப நபரின் பெயர்களை பத்தியில் பூர்த்தி செய்த பிறகு எதிரே உள்ள கட்டத்தில் குடும்பச் சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல உதாரணங்கள் எழுதவேண்டும்.*
- *பின்னர் பங்கேற்பாளர் ஒருவரை அழைத்து குடும்ப உறுப்பினர்களின் செயல்களைப் படித்து ஒவ்வொரு கட்டமாக நிறப்பச் சொல்ல வேண்டும்.*

- ஒவ்வொரு கேள்விக்கும் 'ஆம்' மற்றும் 'இல்லை' என்ற பதில்களை வெவ்வேறு நிறங்களில் எழுத வேண்டும். இதில் சில போக்குகள் ஒரே மாதிரியாக வருவதை நாம் உணரலாம். சிறுமிகள் /பெண்களின் பதில்கள் பெரும்பாலும் 'இல்லை' என்பதாக இருக்கும். ஏனென்றால் அவர்களுக்கு சலுகைகளும் உரிமைகளும் மறுக்கப்படுகிறது.

| குடும்ப உறுப்பினர்களின் பெயர்கள் | பரம்பரை வீடு உடையவர் / வீட்டுக்குச் சொந்தக்காரர் | வாகனம் வைத்திருப்பவர் | வேலை பார்ப்பவர் | பள்ளிக்கல்வி/ மேற்படிப்பை முடித்தவர் | வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்தல், திருமணத்திற்குப் பின் பெயர் மாற்றம் | வீட்டுச் செலவை நிர்வகித்தல் மற்றும் எது முக்கியம் என்று முடிவெடுத்தல் |
|---|---|---|---|---|---|---|
| **அப்பா** | | | | | | |
| **அம்மா** | | | | | | |
| **அண்ணன்** | | | | | | |
| **அக்கா** | | | | | | |
| **தம்பி** | | | | | | |
| **தங்கை** | | | | | | |

- பிறகு இணைப்பு -1இல் உள்ள மனித உரிமைகள் என்றால் என்ன? என்ற தாளை அவர்களுக்கு கொடுக்கவேண்டும்.

- பங்கேற்பாளர்களை 5 - 6 உறுப்பினர்கள் கொண்ட குழுக்களாகப் பிரிக்கவேண்டும். அந்தத் தாளில் கூறியவைகளை குழுவில் படித்து புரிந்து கொள்ளும்படி கூறவேண்டும். அத்துடன் அவர்களுக்குத் தரப்படும் அட்டவணையை (இணைப்பு -1) அவர்கள் கலந்துரையாடலுக்குப் பின் பூர்த்தி செய்ய வேண்டும். பூர்த்தி செய்ய 15 நிமிடங்கள் தரவேண்டும்.

- பங்கேற்பாளர்கள் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து செய்கிறார்களா? என்பதை கண்காணித்து தேவையெனில் உதவிகள் செய்ய வேண்டும்.

- பிறகு, ஒவ்வொரு குழுவையும் அவர்களின் அறிக்கையை பொது அமர்வில் பகிரச் சொல்ல வேண்டும்.

- அவர்களுடைய பதில்களை தனி சார்ட் தாளில் குறித்து வைக்கவேண்டும். எல்லா குழுக்களும் தங்களின் அறிக்கையை வாசித்த பின்பு அவற்றைத் தொகுத்துக் கூறவேண்டும். பெண்களுக்கு உள்ள ஆறு விதமான உரிமைகள் பற்றியும் அதனால்

வரும் நன்மைகளையும் அவற்றைப் பெறத் தேவையான வளங்கள் மற்றும் இந்த முழு செயல்பாட்டிற்கும் யார் முக்கிய பொறுப்பாளர்கள் என்றும் கேட்டு கலந்துரையாடி விளக்க வேண்டும். இதற்கான மாதிரி, **பயிற்றுநர் குறிப்பு-1** இல் கொடுக்கப்பட்டுள்ளது

- பயிற்றுநர், கருத்துத்தாளின் உதவியுடன் மனித உரிமைகளின் தொடர்ச்சியாக பாகுபாடுகளுக்கு எதிராக குழந்தை உரிமைகள் மற்றும் பெண்கள் உரிமைகள் எவ்வளவு முக்கியம் என்பதைப் பற்றி பேச வேண்டும். வளரிளம் பருவப் பெண்கள் தன்னுரிமை அடைந்து மதிப்பான அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு அவர்களின் எல்லாவித உரிமைகளைப் பற்றி அறிவதும் புரிவதும் எவ்வளவு முக்கியம் என்பதை கருத்துத்தாளின் உதவியுடன் விளக்க வேண்டும்.

## பயிற்றுநர் குறிப்பு -1

மனித உரிமைகள் பற்றி பங்கேற்பாளர்களிடம் விளக்குவதற்கு கீழே தரப்பட்ட மாதிரி அட்டவணையைப் பயன்படுத்தவேண்டும். இதே அட்டவணை அவர்களின் குழு செயல்பாட்டில் பூர்த்தி செய்வதற்கு கைப்பிரதியாகத் தரப்பட்டுள்ளது. இதைப் பங்கேற்பாளர்களுக்கு ஏற்றவாறு மேலும் மாற்றுவதற்குத் தேவையான தகவல்களைச் சேர்க்கவேண்டும்.

| என் உரிமைகள் | அதன் பொருள் |
|---|---|
| வாழ்வு, சுதந்திரம், தனி நபர் பாதுகாப்பு | விளையாட்டும் பொழுதுபோக்கும்; ஆண் பெண் சமம்; வாழ்க்கைத் துணைவரைத் தேர்ந்து எடுத்தல்; பாலினத் தெரிவைத் தடுத்தல்; திருமணத்திற்கான உரிமை; சொத்துரிமை, எல்லா சிறுமிகளுக்கும் பெண்களுக்கும் பொருளாதாரப் பாதுகாப்பு; இனப்பெருக்க உரிமை (எப்போது குழந்தை பெறுவது, கர்ப்பம்) மற்றும் பாதுகாப்பாக இருத்தல். |
| கொடுமைகளில் இருந்து விடுதலை | பாலியல் கொடுமைகள் மற்றும் குடும்ப வன்முறைக்கு எதிரான பாதுகாப்பு. |
| நியாயமான விசாரணை | முதல் தகவல் அறிக்கை மூலம் தரப்பட்ட மனுவிற்கு சட்டத் தீர்வு அமைப்பு, வழக்கறிஞர்களின் உதவி, நீதிமன்ற விசாரணை போன்றவை. |
| பேச்சுரிமை | சமூகத்தில் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் பற்றி படித்தல் மற்றும் கலந்து பேசுதல், வளரிளம் பெண்களின் குழுக்களை அமைத்து சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல். |

| | |
|---|---|
| மத சுதந்திரம் | கடவுளைத் தொழுவதற்குப் பாதுகாப்பான இடம். தொழுபவர்கள்குழுக்கள்அமைத்தல். எங்குதொழுவது என்பதை தேர்ந்து எடுத்தல். தேவையானால் உடல் நிலையினை கருத்தில் கொண்டு உபவாசம் / விரதம் இருக்காமல் இருத்தல் போன்றவை. |
| சுகாதாரம், நலம், கல்வி மற்றும் தரமான வாழ்விற்கு வழி | தகவல் பெற உரிமை மற்றும் கல்வி, தடுப்பூசிகள், நலச் சேவை மற்றும் ஊட்டச்சத்து; உணவு; குடும்பக் கட்டுப்பாடு திட்டம், முறைகள் என பெண்கள் தேர்ந்தெடுப்பதற்கான வழிகள். |

## கருத்துத் தாள்

### செயல் -1க்கு பிறகு சொல்ல வேண்டிய கருத்துக்கள்

1948, டிசம்பர் 10-இல் நடந்த ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்திற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்துள்ளது. இதனால் இந்தியர்களாகிய நமக்கு சர்வதேச மனித உரிமைப் பிரகடனம் உறுதிப்படுத்தியுள்ள உரிமைகள் அனைத்தும் உரித்தானவை ஆகும்.

வளரிளம் பருவக் குழந்தைகளுக்கு, அவர்களுக்குரிய எல்லா உரிமைகளைப் பற்றியும் அறிதலும் புரிதலும் இருந்தால், அது அவர்களின் தன்னுரிமை மேம்பாட்டிற்கு வழிவகுக்கும்; அவர்களுக்கு கண்ணியமான, அர்த்தமுள்ள வாழ்வு கிடைப்பதை உறுதிப்படுத்தும். குறிப்பாக, கீழ்க்காணும் மனித உரிமைகளின் அர்த்தத்தைப் பற்றி நமக்கு தெரிந்திருக்க வேண்டும் .

- உயிர் வாழ்வதற்கான, சுதந்திரத்துக்கான, தனிமனித பாதுகாப்புக்கான உரிமைகள்
- சித்திரவதையிலிருந்து விடுதலை
- நியாயமான விசாரணை
- பேச்சுரிமை
- மத சுதந்திரம்
- ஆரோக்கியம், கல்வி மற்றும் போதுமான வாழ்க்கைத் தரம்

பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் உள்ள உரிமைகளைப் பற்றியும், அவர்களுக்கு எதிரான பாகுபாட்டை முடிவு கட்ட அரசுகள் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் விளக்கிக் கூறும் 30 விதிகள் CEDAW-வில் இருக்கின்றன. எல்லா விதிகளும் தவிர்க்க முடியாதவையாக இருப்பினும், விரைவான புரிதலுக்காக, முக்கியமான சில விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- விதி 1 – பெண் குழந்தைகளுக்கும் பிற பெண்களுக்கும் எதிரான பாகுபாடு என்ன என்பது பற்றி விளக்குதல்
- விதி 3 – அடிப்படை மனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்துக்கு உத்தரவாதம் அளித்தல்
- விதி 5 – ஒரே மாதிரியான பாலின பாத்திர வரையறைகள்
- விதி 6 – கடத்தல் மற்றும் பாலியல் தொழிலில் ஈடுபடுத்துதல்
- விதி 10 – கல்வி

- *விதி 11 – வேலைவாய்ப்பு*
- *விதி 12 – சுகாதாரம்*
- *விதி 16 – திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கை*

*இதே போல், குழந்தைகள் உரிமைகளுக்கான பிரகடனமானது (CRC), குடியுரிமை, அரசியல், பொருளாதாரம், சமூகம், சுகாதாரம் மற்றும் கலாச்சார உரிமைகளை குழந்தைகளுக்கு உறுதிபடுத்துகிறது. பிரகடனத்தில் உள்ள உரிமைகளை மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம்.*

- ***உரியவை**: குறிப்பிட்ட விஷயங்களை அல்லது சேவைகளை வைத்திருப்பதற்கு, பெறுவதற்கு அல்லது எளிதாய் அணுகுவதற்குரிய உரிமை (உதாரணத்திற்கு – பெயர், நாட்டுரிமை, சுகாதாரப் பராமரிப்பு, கல்வி, ஓய்வு, விளையாட்டு, ஆதரவற்றவர்களுக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும் கவனிப்பு)*
- ***பாதுகாப்பு** : தீங்கு விளைவிக்கக்கூடிய செயல்பாடுகளில் இருந்தும், நடைமுறைகளில் இருந்தும் பாதுகாத்துக்கொள்வதற்கான உரிமை (உதாரணம் – பெற்றோரிடமிருந்து பிரிக்கப்படுதல், போரில் ஈடுபடுத்தப்படுதல், பொருளாதார ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் சுரண்டப்படுதல், உடலளவிலும் மனதளவிலும் மோசமாக நடத்தப்படுதல்)*
- ***பங்கேற்பு**: தன் வாழ்வைப் பாதிக்கும் முடிவுகளைப் பற்றி குழந்தைகள் கருத்து சொல்வதற்குரிய உரிமை. குழந்தைகளின் திறன்கள் மேம்படும்போது, பெரியவர்கள் ஆவதற்கு தயாராகும்போது, சமூகத்தில் உள்ள செயல்பாடுகளில் ஈடுபட அதிக வாய்ப்புகள் கிடைக்கவேண்டும். (உதாரணம்: பேச்சு, கருத்து, கலாச்சார, மத, மொழி சுதந்திரத்துக்கான உரிமைகள்)*

*குழந்தைகள் உரிமைகளுக்கான பிரகடனத்தில் (CRC) 54 விதிகள் இருக்கின்றன. இது குழந்தைகள் நாள்தோறும் எல்லா நாடுகளிலும் எதிர்கொள்ளும் புறக்கணிப்பு, மோசமாக நடத்தப்படுதலுக்கு எதிராக சில கொள்கைகளை நிறுவியுள்ளது. முக்கியமாக கவனத்தில் கொள்ளவேண்டியது குழந்தைதகளின் நலனே பிரதானமானது என்பதுதான். அனைத்து விதிகளும் தவிர்க்க முடியாதவையாக இருப்பினும், எளிதாகப் புரிந்துகொள்ள முக்கியமான சில விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.*

- *விதி 1 – குழந்தை என்பதற்குரிய விளக்கம் - 18 வயதிற்கு கீழ் இருக்கும் அனைவரும். 18 வயது முடியும் வரை குழந்தைகளுக்கான எல்லா சட்டங்களும் பொருந்தும்.*
- *விதி 2 – பாகுபாடின்மை*
- *விதி 5 – பெற்றோர், குடும்பம், சமூகத்துக்குரிய உரிமைகள் மற்றும் பொறுப்புகள்*

- *விதி 6 – வாழ்வு, உயிர் பிழைத்திருத்தல் மற்றும் வளர்ச்சி*
- *விதி 19 – மோசமாக நடத்தப்படுதல், புறக்கணிக்கப்படுதல் (குடும்பத்திலும், மற்ற கவனிப்பிலும்)*
- *விதி 24 – உடல்நல பராமரிப்பு*
- *விதி 26 – சமூகப் பாதுகாப்பு*
- *விதி 28 – கல்வி*
- *விதி 32 – பொருளாதாரச் சுரண்டல்*
- *விதி 34 – பாலியல் சுரண்டல்*
- *விதி 35 – கடத்தல், விற்றல், கடத்தப்பட்டு விற்கப்படுதல்*
- *விதி 40 – இளஞ்சிறார் நீதி*

*பலவிதமான உரிமைகளைப் பற்றி வளரிளம் பருவத்தினர் அறிந்து, புரிந்திருந்தால், அது அவர்களின் தன்னுரிமை மேம்பாட்டிற்கும், மதிப்புமிக்க அர்த்தமுள்ள வாழ்க்கையை உறுதிப்படுத்துவதற்கும் வழி வகுக்கும். நாம் அனைவரும், வளரிளம் பருவப் பெண்கள் , வளரிளம் பருவ ஆண்கள் என்ற முறையிலும் மற்றும் பிற பெண்கள், பிற ஆண்கள் என்ற முறையிலும், வாழ்க்கையில் ஆதார வளங்களைப் பெற வேண்டிய தேவையுள்ளது. இது ஒரு முழுமையான வாழ்க்கை வாழ வழி வகுக்கும். இன்றைய சமூகத்தில், இந்த ஆதார வளங்கள், பொதுவாக, பெண் குழந்தைகளையும் பிற பெண்களையும் விட ஆண் குழந்தைகளுக்கும் பிற ஆண்களுக்குமே அதிகம் கிடைக்கின்றன. இது மாற்றப்படவேண்டும். அப்போதுதான் ஒரு நல்ல வாழ்க்கை வாழ, பெண் குழந்தைகளும், பிற பெண்களும் சமமான வாய்ப்புகளைப் பெறமுடியும்.*

*பெண்களுக்குள்ள உரிமைகள் அதிகமாக கிடைப்பதற்கும் அவர்கள் மீதான கட்டுப்பாடுகளைக் குறைப்பதற்கும் நாம் எல்லோரும் வேலை செய்ய வேண்டும். ஆண்களும் பெண்களும் வேறு மாதிரியானவர்கள். ஆனால் சமமற்றவர்கள் அல்ல. ஆண்களுக்கும் பெண்களுக்கும் உரிமைகள் கிடைப்பதும் கட்டுப்பாடுகளும் வெவ்வேறு விதங்களாக உள்ளன. பெண்களுக்குள்ள தடைகள் அவர்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு முட்டுக்கட்டைப் போடுகிறது. ஆண்களுக்கு கிடைக்கும் அதே சந்தர்ப்பங்களும் உரிமைகளும் பெண்களுக்கும் கிடைக்க வேண்டும். அது அவர்களின் முழு வளர்ச்சிக்கு உதவும். அதனால் அவர்கள் தங்கள் குடும்பங்களுக்கும் சமூதாயத்திற்கும் பங்களிக்க முடியும்.*

# கட்டகம் - 2



# பாலியல் வன்முறைகளைச் சமாளித்தல்

# அமர்வு 7

## பாலியல் வன்முறையிலிருந்து தற்காத்துக் கொள்ளுதல்

**நேரம் :** நிமிடங்கள்

**தேவையான பொருள்கள் :** A4 தாள்கள், இளம் குழந்தைகளை பாலியல் துன்புறுத்தல் செய்தல் - கைப் பிரதி, மோகன் கதையின் பிரதிகள்

### கற்றலின் நோக்கம் :


இந்த அமர்வின் இறுதியில் ,

- பங்கேற்பாளர்கள் அவர்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் பாலியல் வன்முறை நிகழ்வுகளை இனம் கண்டு கொள்வார்கள்.
- வளரிளம் பருவ ஆண்கள், பாலியல் சீண்டல்களிலிருந்தும் பாலியல் வன்முறைகளிலிருந்தும் தங்களை எவ்வாறு பாதுகாத்துக்கொள்வது என்பதையும், அவ்வாறு பாலியல் ரீதியாக துன்புறுத்தும் உறவுகள் மற்றும் நண்பர்களை எப்படி எதிர்க்க வேண்டும் என்பது பற்றியும் கற்றுக்கொள்வார்கள்.

### செயல் -1 பாலியல் வன்முறைகளை அடையாளம் காணுதல் :

- கற்றலின் நோக்கத்தோடு இணைத்து அமர்வின் தலைப்பைப் பற்றியும் பங்கேற்பாளர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.
- பயிற்றுநர், அமர்வின் தலைப்பைக் கூறியவுடன் பங்கேற்பாளர்களுக்கு இடையில் சலசலப்புத் தோன்றும். இது முக்கியமான அமர்வு என்றும், பங்கேற்பாளர்களின் மனதிற்குள் சங்கடமாக இருக்கும் சில விஷயங்களை வெளிப்படையாகப் பேசவேண்டும் என்பதைச் சொல்ல வேண்டும் .
- இப்படி பேசுவது, அவர்களுக்கோ, அவர்கள் குடும்பத்தில் உள்ள மற்ற குழந்தைகளுக்கோ இந்த பாதிப்புகளில் இருந்து விடுபடுவதற்கு உதவியாக இருக்கும் என்று பயிற்றுநர் கூறி, பங்கேற்பாளர்களை வெளிப்படையாகப் பேச ஊக்கப்படுத்த வேண்டும்.
- ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் ஒரு வெள்ளைத் தாளைக் கொடுத்து தமது உடலின் வெளிப்புற அமைப்பை அருகில் காட்டியுள்ளவாறு படமாக வரையச் சொல்லுங்கள்.

- பிறகு அவர்களது உடலின் புறப்பகுதிப் படத்தில் எந்த அந்தரங்கப் பகுதியைப் பார்த்தாலோ தொட்டாலோ அவர்களுக்கு அசௌகரியமாகவும் மோசமாகவும் தோன்றுமோ அந்த உடல் பகுதியை *'x'* என்ற குறியீட்டால் சுட்டிக்காட்டச்சொல்லவேண்டும். குறியீடு இடப்படாமல் உள்ள உடல் பாகங்கள் மற்றவர்களுக்கு வெளிப்படையாக தெரியக் கூடியவை.



- பிறகு பின்வரும் செயல்களினால் அவர்கள் என்ன உணர்வார்கள் எனக் கேட்கவேண்டும்.
  - ✦ தாய் அணைத்தல்
  - ✦ சகோதரி / சகோதரன் கன்னத்தில் முத்தமிடுதல்.
  - ✦ தாத்தாவின் காலில் விழுந்து வணங்கும்போது அவர் தலையைத் தடவுதல்.
  - ✦ மருத்துவர் மார்பில் ஸ்டதஸ்கோப்பை வைத்து பார்க்கும் பொழுது அல்லது அவர்களது தொடையில் (அ) புட்டத்தில் குடும்ப உறுப்பினர் முன்னிலையில் ஊசி போடுதல்.
- பின்வரும் சம்பவங்களைப் போல உள்ள சம்பவங்களைப் பங்கேற்பாளர்கள் சந்தித்திருந்தால் அப்பொழுது அவர்கள் எவ்வாறு உணர்ந்தார்கள் என்பனதக் கேட்கவேண்டும்.
  - ✦ பேருந்தில் பயணம் செய்யும் போது தெரியாதவர் ஒருவர் கையைத் தடவுதல்
  - ✦ சக மாணவர்கள் முறைத்துப் பார்க்கும்போது
  - ✦ நீங்கள் உடை மாற்றும் போது அல்லது குளிக்கும் போது யாராவது உங்களைப் பார்த்ததை நீங்கள் பார்த்து விட்டால்
- இப்போது ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் வெற்றுப் பேப்பர் ஒன்றைக் கொடுத்து கீழ்க்காண்பனவாறு வரையும்படி கூறவேண்டும்.

| நான் அதிகமாக நம்பும் மக்கள் | பாலியல் வன்முறைக்கான அறிகுறிகள் (பாதுகாப்பான தொடுதல் மற்றும் அபாயமான தொடுதல்) | பாலியல் வன்முறையை எதிர்த்தல் |
|---|---|---|
| | | |

- "பாதுகாப்பான" தொடுதல் மற்றும் "அபாயகரமான" தொடுதல் பற்றி கருத்துத் தாளில் உள்ள கருத்துக்களைக் கொண்டு விளக்குங்கள். இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களில் பாலியல் வன்முறைகளை அடையாளம் காணுதல் என்ற தலைப்பில்

விவாதித்துப் பெற்ற கருத்துக்களை எழுதிக் கொள்ளும்படி கூறவேண்டும்.

- ஒரு சிறப்புப் பயிற்சியாளர் துணையோடு பாதுகாப்பான தொடுதல், அபாயகரமான தொடுதல் மற்றும் இரண்டுக்குமிடையே உள்ள வேறுபாடுகளைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

- அடுத்த செயலுக்கு போவதற்கு முன் பங்கேற்பாளர்களை அவர்கள் இரகசியங்களுள் ஏதேனும் ஒன்றைப் பற்றி யோசிக்கச் சொல்லுங்கள். இந்த ரகசியங்களை எந்த நபருடன் /மக்களுடன் பகிர்ந்து கொள்வதில் அச்சமோ, ஐயமோ இல்லாமல் சௌகர்யமாக உணர்வார்களோ அவர்கள் பெயரை எழுதச் சொல்லுங்கள். அவரது குடும்பத்துக்குள்ளேயே இருக்கும் அம்மா (அ) அப்பா, ஒரு ஆசிரியர், அண்டை வீட்டுக்காரர் (அ) நண்பர் என யாராக வேண்டுமானாலும் இருக்கலாம் .

## செயல் -2

- "இளம் குழந்தைகளை பாலியல் துன்புறுத்தல் செய்தல்" என்ற இணைப்பு -3 இன் பிரதிகளை விநியோகித்து படிக்கும்படி கூறவேண்டும். படித்த பின் பங்கேற்பாளர்கள் தமது குடும்பத்தினரோடும் அதை பகிர்ந்து கொள்ள வேண்டும் என அழுத்தமாகக் கூறுங்கள்.

- உள்ளூர் அரசுசாரா நிறுவனங்களை இனம் கண்டு பட்டியலிட்டு அந்நிறுவனங்களில் குழந்தை பாலியல் வன்முறை நிகழ்வுகளில் குழந்தைக்கு ஆதரவாகச் செயல்படுவோர் பெயர்களையும், தொடர்பு எண்களையும் கைப்பிரதியாக வழங்குங்கள்.

## செயல் -3

- பயிற்றுநர், பயிற்றுநர் குறிப்பு -1இல் உள்ள ரமாவின் கதையை பங்கேற்பாளர் ஒருவரிடம் கொடுத்து பொது அமர்வில் அதை நிதானமாக வாசிக்கச் சொல்ல வேண்டும்.

- வாசித்து விட்டு அதற்கு கீழ் உள்ள கேள்விகளுக்கான பதில்களை கலந்துரையாடச் சொல்லவேண்டும்.

- அபாயகரமான தொடுதல் பற்றிய முக்கியமான உண்மைகளை கருத்துத்தாளில் உள்ள கருத்துக்களின் உதவியுடன் பயிற்றுநர் எடுத்துக்கூற வேண்டும்.

### பயிற்சித்தாள் -1 :

## இளம் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாலியல் கொடுமை

### ரமாவின் கதை

ரமாவுக்கு 25 வயது. அவளுக்கு தன் குழந்தை பருவத்தைப் பற்றிய நல்ல நினைவுகள் இல்லை. அவளுக்கு ஏழுவயது இருக்கும்போது ஒரு கிராமத்தின் பெரிய குடும்பத்தில் வாழ்ந்தாள். உடன் பிறந்தவர்கள் மற்றும் பல உறவினர்கள் அதே வீட்டில் வாழ்ந்தனர். அவள் தாய்க்கு எல்லா நேரத்திலும் இத்தனை பெரிய குடும்பத்தை நிர்வகிக்கும் வேலை

இருந்துகொண்டே இருந்தது. அவள் தகப்பனுக்கும் பெரிய குடும்பத்தை பராமரிக்கும் வேலை. அந்தப் பெரிய குடும்பத்தில் இருந்தது ரமாவுக்கு பாதுகாப்பு உணர்வை தந்தது. ஆனால், இது அவளை எளிதில் மற்றவர்களுக்கு பாலியல் கொடுமைக்கு இரையாக்க காரணமாகவும் அமைந்தது. வீட்டிற்கு பல உறவினர்கள் வந்து போய் கொண்டிருந்தனர். வீட்டில் மிக இளையவளான ரமாவிடம் எல்லோரும் அன்பு காட்டினர். இந்த அன்பு காட்டும் நிகழ்வு அவள் தனியாக இருக்கும் போது மட்டும் தான் நிகழும். வீடு எப்போதும் மக்கள் நிறைந்திருந்தாலும், அவள் தனியாகவும் பயன்படுத்தப்பட்ட உணர்வுடனும் இருந்தாள்.

அவளுக்கு 10 வயது இருக்கும் பொழுது பல ஆண்டுகளாக நடைபெற்ற துன்புறுத்தல் தொடர்ந்த போது அவளால் அமைதியாக இருக்க முடியவில்லை, உட்கார்ந்து அலறத் தொடங்கினாள். அவளைக் கொடுமைப்படுத்தியவருக்கு அதிர்ச்சியும் குழப்பமும் வந்தது. "புதிதாக என்ன நடந்து விட்டது? ஏன் பிகு செய்கிறாய்?" என்றார். அவளுடைய அக்கா அந்த ஆளை அவள் ஓயும் வரை அடித்தாள். அவளுடைய பெற்றோர் அந்த ஆளை வீட்டை விட்டு உடனே வெளியே செல்லும்படி கூறினார்கள்.

அதன் பின், எதுவும் நடக்காதது போல ரமாவின் குடும்பம் வாழ்ந்தனர். இன்றும் இந்த சம்பவத்தால் அவளுக்கு என்ன பாதிப்பு நேர்ந்தது என்று ரமாவிற்கே தெரியவில்லை. அவள் பெற்றோர்கள் ஏன் இதை காவல் துறைக்கு முறையிடவில்லை என பல முறை சிந்தித்தாள். அவனால் எப்படி எந்தப் பிரச்சினையும் இல்லாமல் சுதந்திரமாக போக முடிந்தது? அவளுக்கு என்ன நடந்தது என்பதை விட வீட்டு கௌரவம் தான் முக்கியமாகிவிட்டது. சம்பவம் நடந்து பல ஆண்டுகள் ஆகியும் ரமா இதைப்பற்றி அவள் பெற்றோரிடம் எதுவும் கேட்கவில்லை. அவளுக்கும் எந்த பதிலும் தெரியவில்லை.

### கலந்துரையாடலுக்கான கேள்விகள்:

1. ரமாவிற்கு ஏற்பட்ட "பாதுகாப்பற்ற தொடுதலுக்கு" அவள் காரணமா?

2. மீண்டும் மீண்டும் தனக்கு ஏற்பட்ட பாலியல் துன்புறுத்துதலில் இருந்து தன்னைப் பாதுகாக்க ரமா என்ன செய்திருக்கக் கூடும்? தன் பெற்றோரிடம் இதைப் பற்றி கூற ஏன் அவளுக்குப் பயம்?

3. ரமா தன் பெற்றோரிடம் தனக்கு அடிக்கடி நேர்ந்த பாலியல் துன்புறுத்தல் பற்றி கூறிய பின்பு அவர்கள் அவள் அதிலிருந்து மீள என்ன செய்திருக்கக் கூடும்?

4. இத்தகைய சூழ்நிலையில் ரமாவைப் போன்ற பெண்களுக்கு நீங்கள் எவ்வாறு உதவ முடியும்?

5. பாலியல் கொடுமை ரமாவை எப்படி பாதித்தது?

6. இந்த நிகழ்ச்சி ஏற்பட்டது தெரிந்ததும் ரமாவின் பெற்றோர்கள் என்ன செய்திருக்க வேண்டும் ?

# கருத்துத் தாள்

## செயல் -1 க்கான கருத்துத்தாள்

**'பாதுகாப்பான தொடுதல்' மற்றும் 'பாதுகாப்பற்ற தொடுதல்' சம்பந்தமான முக்கிய குறிப்புகள் :**

- *யாரும் நம் அனுமதி இன்றி நம்மைத் தொடக் கூடாது. நம் உடல்மேல் நமக்கு தான் உரிமை உண்டு (அனுமதியில்லாத சிறு தொடுதல் கூட குற்றம்தான்).*

- *குறிப்பாக, நாம் உள்ளாடை அணிந்து மறைத்துள்ள பகுதிகளான நம் கால்களுக்கு இடையில், புட்டம் மற்றும் மார்பை யாரும் தொடக்கூடாது. நாம் பலவீனமாக இருக்கும்போதோ நோயுற்று இருக்கும் போதோ மருத்துவர் அல்லது பெற்றோர் நம்மை சுத்தம் செய்யவோ, பரிசோதிக்கவோ செய்யலாம்.*

- *நம் விருப்பம் இல்லாமல் பாதுகாப்பற்ற தொடுதலை ஒருவர் செய்தால் நாம் செய்ய வேண்டிய மூன்று காரியங்கள்*

    - ✦ *"என்னைத் தொடாதே" என்று கூறவேண்டும்.*
    - ✦ *அந்த நபரை விட்டு ஓடிப் போக வேண்டும்.*
    - ✦ *நீங்கள் யார் மீது அதிக நம்பிக்கை வைத்திருக்கிறீர்களோ (இந்த பயிற்சியின் ஆரம்பத்தில் அவர்கள் இனங்கண்டவர்கள்) அவர்களிடம் பாலியல் தொல்லை பற்றிச் சொல்லுங்கள்.*

- *பாலியல் ரீதியாக மோசமாக நடத்துதலைக் கையாளும் பொழுது பங்கேற்பாளர்கள் செய்ய வேண்டிய மூன்று செயல்களை, சத்தமாக கூறச் சொல்லவேண்டும்.*

- *குழந்தைக்கான உதவி எண் 1098 ஐப் பற்றிச் சொல்லுங்கள். சில சமயங்களில் குழந்தைகள் பாலியல் ரீதியாக மோசமாக நடத்தப்படும்பொழுது பாதுகாப்பவர்களே அவற்றை ஒரு பொருட்டாக நினைக்காமல் உதவ மறுப்பார்கள். அந்த சமயத்தில் இந்தத் தொலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொள்ளலாம் என்று கூறுங்கள்.*

## பாதுகாப்பான தொடுதல் *vs* அபாயமான தொடுதல்

| பாதுகாப்பான தொடுதல் | அபாயமான தொடுதல் |
|---|---|
| ▪ மகிழ்ச்சியான உணர்வுகளைத் தருகிறது. இந்த மகிழ்ச்சியை எல்லோரிடமும் பகிர்ந்து கொள்ளலாம் (சிறியவர்களுக்கு இது பொருந்தாது).<br><br>▪ இது வெளிப்படையானது, பரஸ்பரமானது, ஒரு போதும் அனுமதியில்லாமல் நிகழ்ந்தது இல்லை. சிறு குழந்தையாக இருக்கும் பட்சத்தில் அனுமதி பெற்றுத் தொடுவது கூடக் குற்றம் எனக் கருதப்படுகிறது.<br><br>▪ குழந்தைகளின் கால்களுக்கு இடையே, புட்டங்கள், மார்புகள் போன்ற இடங்களில் யாரும் தொட அனுமதியில்லை (மருத்துவ காரணங்களுக்காக அனுமதியோடு தொடலாம்)<br><br>▪ குழந்தைகளின் அந்தரங்க உறுப்புகளைத் தொட பிறர் வேண்டிக் கேட்டுக் கொள்ளக் கூடாது. | ▪ மனதில் மோசமான உணர்வுகளை ஏற்படுத்துவதால் பிறரோடு அவற்றை எளிதில் பகிர்ந்து கொள்ள முடியாது.<br><br>▪ பெரும்பாலும் மறைமுகமானது, தொடப்படுபவர் அச்செயலை பிறருக்குத் தெரிவிக்காமல் மறைத்து வைக்க அச்சுறுத்தப்படுகிறார்.<br><br>▪ அந்நியர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் இச்செயலைச் செய்யலாம்.<br><br>▪ உங்கள் எதிரே வேறு யாராவது தனது ஆடையைக் களைந்து தன்னுடைய அந்தரங்க பகுதிகளை, உதடுகளை தொடச் சொல்லலாம் .<br><br>▪ உங்கள் எதிரே வேறு யாராவது தனது ஆடையைக் களைந்து தன்னுடைய அந்தரங்க பகுதிகளைத் தொட்டாலும் இதே உணர்வு உங்களுக்கு ஏற்படலாம்.<br><br>▪ காமிராவிற்கு முன்னால் ஆடையைக் களையச் சொல்லுதல் (அ) விரும்பத்தகாத செயல்களைச் செய்யச் சொல்வதும் இதில் அடங்கும். |

## செயல் -2,3 க்கான கருத்துத்தாள்

- பங்கேற்பாளர்களிடம் யாரேனும் ஒருவர் அபாயமான முறையில் அவர்களை தொட்டாலோ (அ) பாலியல் சீண்டல் செய்தாலோ அது அவர்களது தவறு அல்ல என்ற உண்மையை உணர்த்த வேண்டியது அவசியம். பாதிக்கப்பட்ட குழந்தைகள் அக்குற்றச் செயலுக்குத் தாமே பொறுப்பு என உணரக் கூடாது. நிகழ்வுக்கு பெரியவர்கள் யார் காரணமோ அவரே தான் பொறுப்பாவார். இருப்பினும் அச் சிறுவர், பாலியல் சீண்டலிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ள கீழ்க்காணும் மூன்று வழிகளைப் பின்பற்ற சொல்லலாம்.

  - ✦ வேண்டாம் என்று உரத்த குரலில் சொல்லுதல்
  - ✦ பாலியல் துன்புறுத்தல் செய்யும் நபரிடமிருந்து விலகிச் செல்லுதல்
  - ✦ தம்மை நம்பும் மக்களிடம் நடந்த நிகழ்வைத் தெரிவித்தல்

பாதிக்கப்பட்டவர், நம்பிக்கையானவரிடம் நடந்ததைக் கூறியும் அவராக பாதுகாக்க எந்த நடவடிக்கையும் எடுக்காவிட்டால் (கொடுமைப்படுத்துபவரிடமிருந்து பாதுகாப்பு இல்லை, அவர் தொடர்ந்து நீங்கள் இருக்கும் பக்கம் வருகிறார், காவல் நிலையத்தில் முறையிடவில்லை) நீங்கள் வேறு ஒருவரிடம் கூற வேண்டும். யாராவது உங்களை நம்பி ஏதாவது நடவடிக்கை எடுக்கும் வரை கூறிக் கொண்ட இருக்க வேண்டும்.

மேலும், குழந்தை உதவி எண்ணான 1098 என்ற தொலைபேசிஎண்ணைத் தொடர்பு கொண்டு புகார் செய்யலாம். இந்தத் தொலைபேசி என் குழந்தைகளுக்காக மட்டுமே உள்ள உதவி தொடர்பு எண். அந்த தொலைபேசியில் பதில் அளிப்பவர்கள் குழந்தை கூறுவதைக் கேட்டு அடுத்து என்ன செய்ய முடியும் என்று ஆலோசனை தருவார். ஆனாலும் இது அவசரகால உதவி எண், அதனால் பாதிக்கப்பட்டவரின் முதல் நடவடிக்கையாக இது இருக்கக் கூடாது என்பதை நினைவில் வைக்க வேண்டும். ‘மோசமான’ அல்லது ‘பாதுகாப்பற்ற’ தொடுதல் ஆகியவற்றில் சாதாரணமாகத் தலையை, முதுகை வருடி விடுதலும் சேரும். மறைக்கப்பட்ட இடங்களைத்தொடுதல் மட்டும் அல்ல.

செயலால் இந்த பாதிக்கப்பட்டவர் முன் கூறிய மூன்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இல்லை என சொல்லுதல், அவரைவிட்டு ஓடுதல், நம்பிக்கையானவரிடம் கூறுதல்.

## பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012

***18 வயதிற்குள் உள்ள எவரும் குழந்தைகள் என இந்த சட்டம் கூறுகிறது.***

| குற்றங்களின் சுருக்கம் | | | |
|---|---|---|---|
| **குற்றம்** | **குற்றவாளிகள் வகை** | **நிகழ்வுகளின் விதங்கள்** | **தண்டனை** |
| அந்தரங்கப் பகுதிக்குள் சொருகுதல் | யாரேனும் | குழந்தையை நிர்ப்பந்தித்து வன்புணர்ச்சி செய்தல்/ செய்யவைத்தல் | 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் அபராதம் |
| தீவிரமான பலாத்கார வன்முறை (வன்புணர்வு) | ▪ காவல் துறையினர்<br>▪ இராணுவத் துறையினர்<br>▪ சமய நிறுவனங்கள், அலுவலர்கள்<br>▪ குழந்தைகளக்குச் சேவை செய்யும் எந்த நிறுவனமும் | ▪ குழுவாக பலாத்காரம் செய்தல்<br>▪ எச்ஐவி தொற்று ஏற்படுத்துதல்<br>▪ கர்ப்பம் ஆக காரணமாகுதல்<br>▪ உடல்/மனவளர்ச்சி குன்றியிருப்பதைத் தமக்கு சாதகமாக்குதல் | 10 ஆண்டுகால சிறைத் தண்டனை மற்றும் அபராதம் |
| பாலியல் துன்புறுத்தல்/ தாக்குதல் | யாரேனும் | பாலியல் குற்றம் செய்யும் நோக்கத்தோடு அந்தரங்கப் பகுதிக்குள் சொருகாமல் பிற செயல்களைச் செய்தல் | மூன்று முதல் ஐந்து வருட சிறைத்தண்டனை |

| | | | |
|---|---|---|---|
| பாலியல் சீண்டல் | யாரேனும் | ▪ பாலியல் சீண்டல் பாலியல் வன்முறை நோக்கதோடு செய்யப்படுகிறது<br>▪ பாலியல் உணர்வைத் தூண்டுவதாக அமையும்<br>▪ ஓர் குழந்தையைத் தனது அந்தரங்கப் பகுதியை வெளிக்காட்டடச் செய்வது<br>▪ பாலியல் திரைப்படங்களை குழந்தைக்கு காட்டுதல்<br>▪ ஒரே மாதிரியாகத் திரும்பத் திரும்ப துன்புறுத்தல் | மூன்று ஆண்டு வரை சிறைத் தண்டனை மற்றும் அபராதம் |
| குழந்தையை பாலியல் திரைப்படம் எடுக்கப் பயன்படுத்துதல் | யாரேனும் | ▪ குழந்தையின் பாலியல் உறுப்புகளைக் காட்டுதல்<br>▪ உண்மையான (அ) உருவகப் படுத்தப்பட்ட பாலியல் செயல்கள் செய்வது (அந்தரங்கப் பகுதிக்குள் சொருகியோ / சொருகாமலோ)<br>▪ அநாகரீகமாக (அ) குழந்தையை அசிங்கமாக பிரதிநித்துவம் செய்தல் | ▪ முதல் குற்றத்துக்கு 5 ஆண்டுவரை சிறை மற்றும் அபராதம்<br>▪ இரண்டாவது குற்றத்துக்கு (அ) தொடர்ந்து வரும் குற்றங்களைச் செய்தால் 7 ஆண்டு வரை சிறை மற்றும் அபராதம் |

| | | | |
|---|---|---|---|
| குழந்தை பாலியல் படம் எடுப்பதில் நேரடிப் பங்கேற்பு | யாரேனும் | ▪ பாலியல் தாக்குதல்<br>▪ அந்தரங்க உறுப்புக்குள் திணித்தல்<br>▪ பாலியல் சீண்டல்<br>▪ தீவிரப் படுத்தப்பட்ட குற்றங்கள் | வாழ்நாள் சிறைவாசம் (நிகழ்த்தப்பட்ட பாலியல் குற்றத்தைப் பொருத்து) (அ) அபராதம். |
| குழந்தை பாலியல் திரைப்படங்களைச் சேமித்து வைத்தல் | யாரேனும் | வியாபார நோக்கங்களுக்காக சேர்த்து வைத்தல் | மூன்றாண்டு வரை சிறைவாசம் மற்றும் அபராதம் |
| தவறைப் பொறுத்துக் கொள்ளுதல் (அ) ஊக்குவித்தல் | யாரேனும் | ▪ குற்றம் புரிய யாராவது ஒருவரைத் தூண்டுதல்<br>▪ குற்றம் செய்வதற்கு ஒன்று (அ) அதற்கு மேற்பட்டோருக்கு குற்றம் புரிய சதித் திட்டம் தீட்டுவதில் தெரிந்தே பங்களிப்புச் செய்தல். | குற்றத்தை ஊக்குவித்தவருக்கு அதற்குரிய தண்டனை கிடைத்தல் |
| குற்றம் புரிய முயற்சி செய்தல் | யாரேனும் | ▪ இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் ஓர் குற்றம் புரிய முயற்சி செய்தல்<br>▪ குற்றம் புரியத் தூண்டுதல்<br>▪ இக்குற்றம் நிகழ ஏதேனும் ஒரு செயலைச் செய்தல் | பாலியல் சார் குற்றங்களுக்கு விதிக்கப்படும் அதிகபட்ச தண்டனையில் பாதி (அ) அபராதம் (அ) இரண்டும் |

| | | | |
|---|---|---|---|
| புகார் செய்யவோ (அ) செய்யப்பட்ட புகாரைப் பதிவு செய்யவோ மறுத்தல் | யாரேனும் | பாதிக்கப் பட்டவரிடம் இருந்து புகாரைப் பெற தாமதித்தல் வெவ்வேறு இடங்களுக்கு அலையவிடுதல் | ஆறு மாதம் வரை சிறை மற்றும் அபராதம் |
| புகார் செய்யத் தவறினாலோ (அ) செய்யப்பட்ட புகாரைப் பதிவு செய்யவோ மறுத்தல் | நிறுவனப்பொறுப்பில் இருப்பவர் | பாதிக்கப் பட்டவரிடம் இருந்து புகாரைப் பெற தாமதித்தல் வெவ்வேறு இடங்களுக்கு அலையவிடுதல் | ஓராண்டுச் சிறை (அ) அபராதம் |
| ஊடக அத்து மீறல் | யாரேனும் | குழந்தை யார் என அடையாளம் கண்டு கொள்ளும் வண்ணம் செய்தியை வெளியிடுதல் | ஆறு மாதம் முதல் ஒரு ஆண்டு வரை சிறை மற்றும் அபராதம் |
| பொய்யான தகவல் தருதல் (அ) பொய் புகார் தருதல் | 18 வயதுக்கு மேல் யாரேனும் | ஒருவரைக் கேவலப் படுத்தவோ (அ) புகழுக்குக் களங்கம் கற்பிக்கும் நோக்கத்தோடு பொய்யான தகவல் தருவது (அ) பொய்யான புகாரோ செய்தல் (அ) மிரட்டிப் பணம் பறித்தல் | ஓராண்டு வரை சிறை மற்றும் அபராதம் (குற்றம் புரிந்தது குழந்தையாக இருந்தால் தண்டனை இல்லை) |

## தனிநபர் மற்றும் நிறுவனங்களின் பொறுப்பு

| யாருக்கு | என்ன பொறுப்பு |
|---|---|
| ஊடகம் | இச்சட்டத்தின் கீழ் நிகழ்த்தப்பட்ட குற்றத்திற்கான ஏதேனும் ஆதாரம் இருந்தால் அதை வெளியிடுதல் |
| பொது நிறுவனம் | இச்சட்டத்தின் கீழ் நிகழ்த்தப்பட்ட ஓர் குற்றத்திற்கான ஏதேனும் ஆதாரம் இருந்தால் அதை வெளியிடுதல் |
| சேவை வழங்குபவர்கள் | இச்சட்டத்தின் கீழ் நிகழ்த்தப்பட்ட ஓர் குற்றத்திற்கான ஏதேனும் ஆதாரம் இருந்தால் அதை வெளியிடுதல் |
| நிறுவனங்கள் | இச்சட்டத்தின் கீழ் நிகழ்த்தப்பட்ட ஓர் குற்றத்திற்கான ஏதேனும் ஆதாரம் இருந்தால் அதை வெளியிடுதல் |

தனிநபர்கள், நிறுவனங்கள் (ஊடகம், பொது நிறுவனங்கள் மற்றும் சேவை வழங்கிடுவோர்) இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் குற்றம் நிகழ்ந்தால் அதற்கான ஆதாரத்தை காவல் துறையினரிடம் புகாராக சமர்ப்பிக்க வேண்டும்.

### வழிமுறை

- சிறப்பு இளம் குற்றவாளி காவல் துறைப் பிரிவு (அ) உள்ளூர் காவல் துறை அதிகாரியிடம் புகார் செய்ய வேண்டும்.
- காவல் துறை, பெறப்படும் புகாரை எண்ணிட்டுப் பதிவு செய்ய வேண்டும்.
- பாதிக்கப்பட்ட குழந்தை, குழந்தை நலக் குழுவின் முன் நிறுத்தப்பட வேண்டும்.
- தேவைப்பட்டால் குழந்தை பேசும் மொழியைச் சரியாகப் புரிந்து கொள்ள மொழி பெயர்ப்பாளர் ஒருவரை நியமித்துக் கொள்ளலாம்.
- குழந்தைக்கு பாதுகாப்போ (அ) கவனிப்போ தேவைப்பட்டால் அவன் (அ) அவளை அரசினர் இல்லத்திலோ (அ) சுகாதார நிலையத்திலோ 24 மணி நேரத்துக்குள் சேர்க்க வேண்டும்.
- தடவியல் சோதனைக்காக சேகரிக்கப்பட்ட மாதிரிகளை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் தடயவியல் கூடத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- குழந்தைக்குத் தேவைப்படும் அவசர மருத்துவ சிகிச்சை, அவரது அந்தரங்கத்தை பாதிக்காமல் வழங்கப்பட வேண்டும். குழந்தையின் நம்பிக்கையைப் பெற்ற பெற்றோர், பாதுகாவலர் (அ) வேறு யாராவது ஒரு நபர் இருக்கும் போது தான் சிகிச்சையளிக்க வேண்டும்.

- எந்த ஒரு மருத்துவரும், மருத்துவமனையும் (அ) சிகிச்சை மையமும் ஒரு குழந்தைக்கு சிகிச்சை அளிக்க சட்டப்படி (அ) நீதிமன்றம் மூலம் கோரிக்கை (அ) சான்றிதழோ கேட்கக் கூடாது.

- சிறப்பு நீதிமன்றத்தில் 24 மணி நேரத்துக்குள் புகாரளிக்கப்பட வேண்டும்.

- புகாரளிப்பவரிடம் சிறப்பு இளங்குற்றவாளி காவல் துறைப் பிரிவு (அ) உள்ளூர் காவல் துறை கீழ்க்காணும் தகவல்களைப் பகிர வேண்டும்.

    - அவர் பெயர் மற்றும் பதவி

    - விலாசம் மற்றும் தொலைபேசி எண், தகவலை/புகாரைப் பெறும் அதிகாரியின் பெயர், பதவி, தொடர்பு விபரங்கள்.

## சிறப்பு வசதிகள்/ கொள்கைகள்

1. பாதிக்கப்பட்ட பெண்ணை மருத்துவ ஆய்வு செய்ய வேண்டும் என்றால் பெண் மருத்துவரே அதைச் செய்ய வேண்டும்.

2. அனைத்து மருத்துவப் பரிசோதனைகளும் உடனடியாக குழந்தையின் வக்கீல் (அ) அவரது தரப்பில் குழந்தையால் தெர்ந்தேடுக்கப்பட்டவர் அல்லது நியமிக்கப்பட்டவர் முன்னிலையிலேயே செய்யப்பட வேண்டும்.

3. குழந்தைக்கான வக்கீல் முன்னிலையிலேயே வாக்குமூலம் பெறப்பட வேண்டும். (குழந்தை தேர்ந்தெடுத்தவராகவோ (அ) அவன் / அவள் சார்பாக நியமிக்கப்பட்டவராகவும் இருக்கலாம்).

4. சீருடையில் இல்லாத காவல் துறை அதிகாரி மட்டுமே வாக்குமூலம் பெற வேண்டும்.

5. சம்பந்தப்பட்ட குழந்தையின் குடும்பம் (அ) பாதுகாவலருக்கான சட்ட ஆலோசனையை அவர்கள் விரும்பும் சட்ட வல்லுநர் மூலமாக சட்ட சேவை அதிகாரியின் வழிகாட்டுதலில் தரப்பட வேண்டும்.

6. குடும்பத்துக்கு (அ) பாதுகாவலருக்கு, இந்த சட்ட உதவிகள் மற்றும் நிவாரணங்கள் பற்றி ஆலோசனை வழங்கி அவை உரிய அதிகாரிகள் மூலம் கிடைக்க வழிசெய்ய வேண்டும்.

7. பொருத்தமான சில வழக்குகளில், சிறப்பு நீதிமன்றம் தாமாகவே முன்வந்து குழந்தை சார்பாக பதியப்பட்ட வழக்கின் மீது தற்காலிக இழப்பீடு வழங்க ஆணையிடலாம். இந்நிகழ்வு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு குழந்தைக்கு நிவாரணம் அளிக்கவோ (அ) மறுவாழ்வு அளிக்கவோ நடக்கலாம். தற்காலிக இழப்பீடு, இறுதி இழப்பீடு ஆணையில் சொல்லப்படும் தொகையிலிருந்து கழித்துக் கொள்ளப்படும்.

8. குற்றம் சாட்டப்பட்டவர், குற்றவாளி என உறுதி செய்யப்பட்டாலும் குற்றமற்றவர் என விடுதலை செய்யப்பட்டாலும் பாலியல் தாக்கத்திற்குள்ளான குழந்தை காயம் அடைந்தார் (அ) அவருக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என சிறப்பு நீதிமன்றம் முடிவு செய்தால் தாமாகவோ (அ) பாதிக்கப்பட்ட குழந்தையின் சார்பாக பதிவு செய்யப்பட்ட புகாரின் அடிப்படையிலோ இழப்பீட்டுத் தொகையைப் பரிந்துரை செய்யலாம்.

# அமர்வு 8

## பாதுகாப்பான இடங்கள் பாதுகாப்பற்ற இடங்கள்

**நேரம் :** *45 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள், வெள்ளைத் தாள்கள்*

### கற்றலின் நோக்கம் :

*இந்த அமர்வின் இறுதியில்,*

- *வளரிளம் பருவப் பெண்கள் பாதுகாப்பான, பாதுகாப்பற்ற இடங்களைப் பற்றி அறிந்துகொள்வார்கள்.*
- *மேலும், இவர்கள் பாதுகாப்பற்ற இடத்தை பாதுகாப்பான இடமாக மாற்றுவதற்கு கூட்டாக வேலை செய்வதற்கான ஊக்கத்தைப் பெற்றிருப்பார்கள்.*

### செயல்படுத்தும் விதம் :

- *சென்ற அமர்வில் விவாதித்த பாலியல் துன்புறுத்தல்களையும், மோசமாக நடந்துகொள்வதையும் தடுக்கும் வழிகளைப் பற்றியும் பயிற்றுநர் நினைவுபடுத்தி இந்த அமர்வைத் தொடங்க வேண்டும்.*
- *பயிற்றுநர், **பயிற்சித்தாள்-1**இல் உள்ள அட்டவணையை கரும் பலகையிலோ அல்லது வெள்ளை பலகையிலோ எழுத வேண்டும். பயிற்றுநர் ஒவ்வொரு இடமாக வாசித்து இது உங்களுக்கும் பாதுகாப்பானதா, பாதுகாப்பற்றதா என்று பங்கேற்பாளர்களைக் கேட்க வேண்டும். அவர்கள் கூறும் பதில்களை இரண்டாவது கட்டத்தில் எழுத வேண்டும்*
- *பங்கேற்பாளர்களின் பதில்களைப் பொறுத்து மேலும் சில இடங்களை நீங்களே சேர்த்துக் கொள்ளலாம்.*
- *பங்கேற்பாளர்கள் கூறும் வெவ்வேறு இடங்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.*
- *பின்னர், பங்கேற்பாளர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் இரண்டு, மூன்று இடங்களைக் கொடுக்க வேண்டும்.*

- ஒவ்வொரு குழுவுக்கும் ஒதுக்கப்பட்ட இடங்களை வளரிளம் பருவப் பெண்கள், வாழ்வதற்கும், பயணம் செய்வதற்கும், படிப்பதற்கும், வேலை செய்வதற்கும் ஏற்ற பாதுகாப்பான இடங்களாக மாற்றுவதற்கு என்னென்ன வழிகள் உள்ளன எனக் கண்டறிந்து கூற வேண்டும் என்று பயிற்றுநர் சொல்ல வேண்டும். மேலும் இரண்டாம் கட்டத்தில் எந்தெந்த இடங்கள் பாதுகாப்பற்றவை என்று பங்கேற்பாளர்கள் கூறினார்களோ அந்தந்த இடங்களை எவ்வாறு பாதுகாப்பானதாக மாற்ற முடியும் என்று கலந்துரையாட வேண்டும்.

- அனைத்துக் குழுக்களும் தங்கள் கலந்துரையாடல் கருத்துக்களை பொது அமர்வில் தெரிவிக்க வேண்டும். பங்கேற்பாளர்கள் கூறும் கருத்துக்களை அட்டவணையின் மூன்றாம் பத்தியில் எழுத வேண்டும்.

- பின்னர் பயிற்றுநருக்கான குறிப்புகள் -1 இல் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்டு கலந்துரையாட வேண்டும். பயிற்றுநர், கருத்துத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களையும் பங்கேற்பாளர்களுக்கு விளக்கிக் கூறி அமர்வை முடிக்கவேண்டும்.

## பயிற்சித்தாள் – 1

| இடங்கள் | உங்களுக்கு பாதுகாப்பானதா? பாதுகாப்பற்றதா? | பாதுகாப்பாக மாற்றுவதற்கான வழிகள் |
|---|---|---|
| வீடு | பாதுகாப்பானது / பாதுகாப்பானதாக இருக்கக்கூடும் | பூட்டக்கூடிய கதவுகளுடன் கழிப்பறையை வீட்டினுள் கட்டவேண்டும். |
| பள்ளிக்குச் சென்று திரும்பி வருதல் | பாதுகாப்பற்றது | ஒன்றுசேர்ந்து பள்ளிக்கு செல்லவேண்டும், அனைவரும் சேர்ந்து பெற்றோரிடம் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யும்படி பேசவேண்டும், அரசாங்கத் திட்டமான பெண்களுக்கு இலவச சைக்கிள் திட்டத்தை உபயோகிக்கவேண்டும். |

| | | |
|---|---|---|
| பள்ளி | பாதுகாப்பற்றது | தலைமை ஆசிரியரிடம், குறிப்பிட்ட ஆசிரியர் தங்களை முறைத்து பார்ப்பது பற்றி தகவல் தெரிவிக்கவேண்டும். மாணவர்களுக்கு முன்பாக மாணவிகள் வகுப்பறையை விட்டு வெளியே செல்வதற்கு அனுமதிக்குமாறு வகுப்பு ஆசிரியரிடம் கேட்கவேண்டும். |
| மார்க்கெட் / கடைகள் | பாதுகாப்பற்றது | பஞ்சாயத்து தலைவரிடம், ஆண் பிள்ளைகள், வெற்றிலை பாக்கு கடையில் (பெட்டிக் கடையில்) நின்று கொண்டு முறைத்து பார்த்துக்கொண்டு கேலி செய்கின்றனர் என்று தெரிவிக்கவேண்டும். |
| வீட்டைச் சுற்றி உள்ள இடங்கள் (அண்டை இடங்கள்) | பாதுகாப்பற்றது | பஞ்சாயத்து தலைவரிடம் தெருக்களில் சூரிய ஒளி விளக்குகளை பொருத்துவது பற்றி பேசவேண்டும். |
| விளையாடும் இடம் | | |
| திருவிழாக்கள்/ கொண்டாட்டங்கள் | | |
| மருத்துவரிடம் செல்வது | | |

### *பயிற்றுநர் குறிப்பு -1*

1. ஆண்களோடு ஒப்பிடும்போது, வளரிளம் பருவப் பெண்களும் பிற பெண்களும் சம உரிமைகளையும், வாய்ப்புகளையும் பெறுவதற்கு, பாதுகாப்பற்ற இடங்கள் எவ்வாறு தடையாக இருக்கின்றன?

2. பெண்களுக்குப் பாதுகாப்பான இடங்களை உருவாக்குவது என்பது சட்டம் ஒழுங்கு பிரச்சினையா?

3. வளரிளம் பருவப் பெண்களுக்கு பாதுகாப்பான இடங்களை உருவாக்குவதற்கு வேறு என்ன செய்யலாம்?

4. பொது இடங்களையும் தனியார் இடங்களையும் வளரிளம் பருவப் பெண்களுக்கும், மற்ற பெண்களுக்கும் பாதுகாப்பான இடங்களாக மாற்ற வளரிளம் பருவ ஆண்கள் எவ்வாறு செயலூக்கத்துடன் பங்களிக்கலாம்?

# கருத்துத் தாள்

உலகெங்கிலும், கிராமங்களிலும் நகரங்களிலும், நாள்தோறும் பொது இடங்களில் பாலியல் துன்புறுத்தல்களும், வேறு வகையான பாலியல் வன்முறைகளும் நடந்துகொண்டிருக்கின்றன.

வளரிளம் பருவப் பெண்களும் பிற பெண்களும் பலவிதமான பாலியல் வன்முறைகளை, துன்புறுத்தல்களை, பாலியல் பலாத்காரங்களை, ஏன் கொலைகளையே கூட பொது இடங்களில் எதிர்கொள்கின்றனர். இதனால் பொது இடங்களில் நடமாடக்கூட பயம் கொள்கின்றனர்.

தெருக்களில், பொது போக்குவரத்துகளில், பூங்காக்களில், பள்ளிகளிலும் அதைச் சுற்றிலும், பணியிடங்களில், பொதுக் கழிப்பறைகளில், நீர், உணவு விநியோக இடங்களில் அல்லது அவர்களுக்கு அருகில் உள்ள இடங்களில் எங்கு வேண்டுமானாலும் பாலியல் துன்புறுத்தல்கள் நடக்கலாம்.

இம்மாதிரியான நிகழ்வுகள் வளரிளம் பருவப் பெண்களும், பிற பெண்களும் சுதந்திரமாக நடமாடுவதைக் குறைத்துவிடுகிறது. பள்ளியிலும், பணியிடத்திலும், பொது வாழ்விலும் நடைபெறும் செயல்பாடுகளில் பெண்கள் பங்கேற்கும் திறனை குறைத்துவிடுகிறது. அத்தியாவசியமான சேவைகளை அடையும் வாய்ப்பைக் குறைத்து, கலாச்சார, பொழுதுபோக்கு அம்சங்களில் ஈடுபட்டு அனுபவிக்கும் சந்தர்ப்பங்களைக் குறைக்கிறது. இது அவர்களது ஆரோக்கியத்திலும், வளவாழ்விலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

வளரிளம் பருவப் பெண்களுக்கும், பிற பெண்களுக்கும் எதிரான வன்முறை, குறிப்பாக பொது இடங்களில் நிகழும் பாலியல் வன்முறை பெரும்பாலும் தடுக்கக்கூடியதாக இருந்தாலும், இன்னும் புறக்கணிக்கப்படும் பிரச்சினையாகவே இருக்கின்றது. இந்தப் பிரச்சினையைத் தடுப்பதற்கும் தீர்வு காண்பதற்கும், ஒரு சில சட்டங்களும், கொள்கைகளும் மட்டுமே உள்ளன.

பெண்கள் பாதுகாப்பு என்பது, சட்டம் ஒழுங்கு பிரச்சினை மட்டுமல்ல. காவல் துறையினர், இன்னும் உணர்திறன் மிக்கவர்களாக விவேகமாகவும், துரிதமாகவும் பாலியல் துன்புறுத்தல்களைக் கையாளவேண்டும். பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும். மக்களின் மனோபாவமும் மாறவேண்டும்.

நாள்தோறும் பொதுஇடங்களில் பெண்களுக்கெதிராக நிகழ்த்தப்படும் துன்புறுத்தல்களை யாரும் எதிர்த்து நிற்பதில்லை. வளரிளம் பருவப் பெண்கள் தன்னுரிமை மேம்பாடு அடைய வேண்டுமெனில், நாம் பெண்களுக்கு வழிமுறைகளையும் வாய்ப்புகளையும் உருவாக்கி, அவர்களுக்கு இடைநிலைக் கல்வி கிடைக்கச் செய்யவேண்டும்.

# கட்டகம் - 3



# திருமணம் என்பதன் பொருளைப் புரிந்து கொள்ளுதல்

# அமர்வு 9

## திருமணமான பெண்களின் உரிமைகள் மற்றும் , பொறுப்புகள்

**நேரம் :** *45 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள்*

### கற்றலின் நோக்கங்கள் :

- *இந்த அமர்வின் இறுதியில் திருமணம் பற்றி நடுநிலையான, பாரபட்சமற்ற நியாயமான வரையறையைப் புரிந்து வளரிளம் பெண்கள் புரிந்துகொள்வார்கள்.*
- *திருமணத்தின் மூலம் முடிவெடுக்கும் திறன்களை வளரிளப் பெண்கள் மேம்படுத்திக் கொள்வார்கள்.*

### செயல்படுத்தும் விதம் :

### செயல் -1

- *அமர்வின் தலைப்பு மற்றும் நோக்கங்களைப் பற்றி பங்கேற்பாளர்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.*
- *சார்ட் தாளில "திருமணம்" என்ற வார்த்தையை எழுதி சத்தமாக படிக்க வேண்டும். "திருமணம்" என்ற வார்த்தையை வாசிக்கும் பொழுதும், கேட்கும் பொழுதும் வளரிளம் பெண்களின் மனதில் வரும் எண்ணத்தை கூறும்படி சொல்லவேண்டும். மகிழ்ச்சி, கவலை அல்லது பயம் என்று எந்த உணர்வுகளோடும் தொடர்புடையதாக இருக்கலாம்.*
- *சார்ட்டில் அவர்கள் கூறும் பதில்களை அட்டவணையில் காட்டியுள்ளபடி நேர்மறை எண்ணங்கள் கொண்டது எது, எதிர்மறை எண்ணங்கள் கொண்டது எது என்று பிரித்து எழுத வேண்டும். சில எதிர்பார்த்த பதில்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.*

## பயிற்சித்தாள்-1

| திருமணத்தில் எதிர்பார்க்கும் நேர்மறையான மற்றும் மகிழ்ச்சிதரக்கூடிய விஷயங்கள் | திருமணத்தில் வரக்கூடிய எதிர்மறையான விஷயங்கள் |
|---|---|
| ஒரு குடும்பம் | அன்பானவர்கள் மற்றும் சிறுவயது நண்பர்களை விட்டு தெரியாத இடத்திற்கு செல்வது |
| நம்பிக்கையான எதிர்காலம் - வீடு, குழந்தைகள், போன்றவை | படிப்பை பாதியில் விட்டுச் செல்லுதல் |
| புதிய மனிதர்களை சந்திப்பது மற்றும் புதிய உறவுகள் ஏற்படுவது | பொருளாதார பிரச்சினை மற்றும் வாழ்வாதாரம் இல்லாமை போன்றவற்றிக்கு வாய்ப்பு |
| | குடும்பத்தையும் குழந்தைகளையும் கவனிப்பதில் பிரச்சினை |
| | பெண்ணுக்கும் அவளுடைய குழந்தைகளுக்கும் சத்துக் குறைபாடு ஏற்படுதல் |
| | பெண்கள் எதிர் கொள்ளக்கூடிய வன்முறை, இதில் வரதட்சணையும் சேரும் |
| | எச்.ஐ.வி. தொற்றை கணவரிடம் இருந்து பெற்றுக் கொண்டு அதற்கு தான் தான் காரணம் என குற்றம் சாட்டப்படுதல் |
| | உடல் நலக்குறைவு, இளவயது கர்ப்பம் மற்றும் அடிக்கடி கருவுறுதல் |
| | புகுந்த வீட்டில் துரத்தப்படுதல், தாய்வீட்டில் இடம் மறுக்கப்படுவதால் தங்குவதற்கு வீடு இல்லாமை |
| | பாலியல் சுரண்டல்/துன்புறுத்தல் மற்றும் வன்முறைக்கு ஆளாகக் கூடிய தன்மை |
| | தன் உடல் மீதும் இனப்பெருக்க நலத்தின் மீதும் உரிமை இல்லா நிலைமை |

- *இந்த அமர்வின் நோக்கம் திருமணம் குறித்து பங்கேற்பாளர்களை பயமுறுத்துவது அல்ல, திருமணத்திற்கு அவர்களைத் தயார் செய்வதுதான். கவனமாக வாழ்க்கைத் துணைவரை தேர்ந்தெடுக்க மற்றும் சரியான நேரத்தில் திருமணம் செய்ய, திருமணத்தில் வரக் கூடிய சிக்கல்களை அறிந்து கொள்வது நல்லது. இந்தப் பயிற்சியின் மூலம் அவர்கள் அறியும் தகவல்கள், பெற்றோர்களும் குடும்பத்தாரும் அவர்களைத் திருமணத்திற்கு வற்புறுத்தும் பொழுது சமரசமாகப் பேசுவற்கு ஏதுவாக இருக்கும். திருமணம் என்றால் என்ன என்பதற்கான வரையறையைக் கூறவேண்டும்.*

- *கருத்துத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்கள் பயிற்றுநருக்கு கலந்துரையாடுவதற்கு எளிதாக இருக்கும்.*

### *செயல் -2*

- *குடும்பம் என்றால் என்ன என்பதை புரிந்து கொள்ள ஒரு நாளின் பல்வேறு நேரங்களில், பெண்கள், ஆண்கள் இருவராலும் செய்யப்படும் முக்கியமான வேலைகளைப் பற்றி புரிந்துகொள்வது அவசியம் என்று கூறி, அதை விரிவாக விளங்கிக் கொள்வதற்கான பயிற்சி இது என்று செயல்பாட்டை தொடங்குவதற்கு முன் சொல்லவேண்டும் .*

- *பங்கேற்பாளர்களை இரு குழுக்களாகப் பயிற்றுநர் பிரிக்கவேண்டும்.*

- *ஒரு குழுவிடம், குடும்பத்தில் 1 நாள் முழுமைக்கும் (24 மணி நேரம்) ஆண்கள் என்னென்ன பணிகள் செய்கிறார்கள் என்றும், இன்னொரு குழுவிடம் பெண்கள் என்னென்ன பணிகள் செய்கிறார்கள் என்றும் எழுதச் சொல்லவேண்டும்.*

- *காலை 4.00 மணி முதல் அடுத்த நாள் காலை 4.00 மணி வரை செய்யும் பணிகள் என்று பயிற்றுநர் கூறவேண்டும். இரண்டு குழுக்களும் விடியற்காலை, காலை, மதியம், மாலை, இரவு என்று பிரித்து நன்றாக கலந்துரையாடி எழுதவேண்டும் என்று பயிற்றுநர் கூற வேண்டும்.*

- *பின்னர், பொது அமர்வில் பகிரச் சொல்லவேண்டும். கரும்பலகையில் ஆண்களால் செய்யப்படும் வேலைகள், பெண்களால் செய்யப்படும் வேலைகள் என்று* ***அட்டவணை -2*** *இல் உள்ளது போல் பயிற்றுநர் எழுதி, கலந்துரையாட வேண்டும்.*

- ***பயிற்சித்தாள்*** *–3 இல் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்டு கலந்துரையாட வேண்டும். மேலும் கருத்துத்தாள் -2 இல் கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களைக் கூறி பயிற்றுநர் இந்த அமர்வை முடிக்க வேண்டும்.*

## பயிற்சித்தாள்-2

| நேரம் | ஆண்களால் செய்யப்படும் வேலைகள் | பெண்களால் செய்யப்படும் வேலைகள் |
|---|---|---|
| விடியற்காலை | உறக்கம், செய்தித்தாள் வாசித்தல், தேநீர் அருந்துதல், வேலைக்குச் செல்ல ஆயத்தமாதல் | சமைத்தல், கணவரையும் குழந்தைகளையும் வேலைக்கும், பள்ளிக்கும் செல்ல தயார் செய்தல் |
| காலை | வேலைக்கோ வாழ்வாதாரத்திற்கோ செல்லுதல் | கைக்குழந்தைகளை, குழந்தைகளை, குடும்பத்திலுள்ள வயதானவர்களை பார்த்துக் கொள்ளுதல், வீட்டைச் சுத்தப்படுத்துதல், வேலைக்குச் செல்லுதல் |
| மதியம் | உறங்குதல் அல்லது வேலையில் இருத்தல் | வேலையில் இருத்தல், துணிகள் துவைத்தல் அல்லது வீட்டைச் சுத்தப்படுத்துதல் |
| மாலை/இரவு | நண்பர்களுடனோ, அண்டை வீட்டாருடனோ உரையாடுதல், தேநீர் அல்லது மது அருந்துதல், தொலைக்காட்சி பார்த்தல் | குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தல், சமைத்தல், படுக்கை விரித்தல் அல்லது மறுநாளைக்கு தயார் செய்தல் |

## பயிற்சித்தாள் – 3

- பெண்கள், ஆண்கள் இருவரும் நாள்தோறும் செய்யும் வேலைகளில் ஏதாவது வேறுபாடுகள் இருக்கின்றதா? அவ்வாறு இருப்பின் முக்கியமான வேறுபாடுகள் என்ன?
- எல்லா தினசரி வேலைகளையும், கணவன், மனைவி இருவராலும் செய்ய முடியுமா?
- ஒரு திருமண வாழ்க்கையில் இருவரின் சமமான பங்களிப்பினால் ஏற்படும் நன்மைகள் என்ன?
- நீங்கள் ஏற்கனவே இருக்கும் விதிமுறைகளை உடைத்து, உங்கள் வாழ்க்கைத் துணைக்கு வீட்டு வேலைகளில் உதவி செய்ய முடியுமா? நீங்கள் இந்த வேலைகளையும், பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாக நினைக்கிறீர்களா?
- திருமண வாழ்க்கையில் ஆணும், பெண்ணும் ஏற்றுக்கொள்ளும் பாத்திர வரையறைகள் மாறவேண்டும் என்று நினைக்கிறீர்களா? ஏன்? எவ்வாறு?

## கருத்துத் தாள் -1

பங்கேற்பாளர்களிடம், திருமணத்தைப் பற்றி பயத்தை ஏற்படுத்துவது நமது நோக்கம் அல்ல என்றும், மாறாக திருமணத்திற்கு அவர்களைத் தயார் படுத்துவதே நோக்கம் என்றும் தெளிவுபடுத்தவேண்டும.

திருமணத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி அவர்கள் நன்கு தெரிந்துகொண்டால் தான், தகவல்கள் கிடைக்கப்பெற்று தெளிவான முடிவுகள் எடுக்க முடியும்.

இந்தப் பயிற்சியானது அவர்களுக்கு காரண காரியங்களை விளக்கும் திறனை அளிக்கும். மேலும், பெற்றோர் அவர்களை இளம் வயதில் திருமணம் செய்துகொள்ள நிர்ப்பந்திக்கும் போது அவர்களுடனும் பிற குடும்ப உறுப்பினர்களுடனும் தன் தரப்பு நியாயங்களை எடுத்துச் சொல்லி உடன்பாடு காண்பதற்கு தேவையான பேச்சுத் திறனையும் அளிக்கும் எனக் கூறவேண்டும.

நம் சமூகத்தில் ஒரு பெண் பருவமெய்தியவுடன் அவள் திருமணத்திற்கு தயாராகி விட்டாள் என்று நினைக்கிறார்கள் . இதேபோல் ஒர் ஆண் வேலை பார்க்க ஆரம்பித்து விட்டால் அவன் திருமணத்திற்குத் தயார் என்று நினைக்கிறார்கள். திருமணம் என்பது இருவர் இணைந்து ஒரே கூரையின்கீழ் வாழ்வது. இது விளையாட்டான விஷயமல்ல. சிறு வயதில் இருவரும் வெவ்வேறு வீடுகளில் வளர்க்கப்பட்டதால் அவர்களுடைய ரசனைகளும் அன்றாடப் பழக்க வழக்கங்களும் வேறு வேறாக இருக்கலாம். இதில் யாருக்கு அதிகாரம் அதிகம் இருக்கிறதோ அவர்கள் தங்களுடைய பழக்கம்தான் சரி என்று இன்னொருவர் மீது திணிக்கப் பார்க்கலாம்.

நம் சமூக அமைப்பில் பெண்கள் பெரும்பாலும் திருமணம் முடித்து கணவன் விட்டிற்கு செல்கிறார்கள். கணவன் குடும்பத்தாருடன் வசித்தாலும், தனியாக இருந்தாலும் இந்திய சமூக அமைப்பு ஆண் மைய சமூக அமைப்பாகவே பெரும்பாலும் உள்ளத.

இருவர் சேர்ந்து அவர்களுக்கான ஒரு குடும்பத்தை வடிவமைக்கக்கூடிய பல்வேறு விஷயங்களில் அவர்கள் ஒத்துப்போனால்தான் அந்தக் குடும்பமும் அவர்கள் வளர்க்கும் குழந்தைகளும் நல்ல மதிப்பீடுகளோடு வளரமுடியும். திருமணம் என்றால் ஆண் பெண் இருவரும் சேர்ந்து ஒரு குடும்பத்தை கட்டமைப்பது.

ஒரு நூறு வருடங்களுக்கு முன்னர் இருந்த குடும்ப அமைப்பில் ஆணுக்கு என்று சில பொறுப்புகளும் பெண்ணுக்கு என்று சில பொறுப்புகளும் இருந்தன. ஆனால் இன்றைக்கு குழந்தை பெறுவது, தாய்ப்பால் தருவது தவிர ஆண் செய்யக்கூடிய எல்லா வேலைகளையும் பெண் செய்யமுடியும், செய்யலாம் என்ற விஷயங்கள் நிரூபிக்கப்பட்டுவிட்டது. வீட்டில் மட்டுமே உழன்று கொண்டிருந்த பெண் வெளிவேலைக்குப் போய் வெளியுலகத்தை

சந்திக்கத் தயாராகிவிட்டாள் என்றால் வெளியுலகத்தில் புழங்கிக் கொண்டிருந்த ஆண் வீடு சார்ந்த விஷயங்களில் தன்னை தயார்படுத்திக் கொள்ளவேண்டும் அல்லவா? அப்படி தயார்படுத்திக் கொள்ளாதபோது இதனால் குடும்பத்தில் நிறைய சச்சரவுகள் வரும் .

ஆண், பெண் இருவரும் சமம் என்பது வெறும் சட்டத்தால் சொல்லப்படுவது மட்டுமல்ல. குடும்பங்களில் உண்மையாகவே ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிசமமாக ஒருவர் மேல் மற்றவருக்கு மரியாதை, பரஸ்பர நம்பிக்கை, அன்பும் இருந்தால்தான் திருமணம் நிலைக்கும் .

திருமணமான இருவருக்கும் பல்வேறு விஷயங்களில் இருவரும் சமம் என்ற உணர்வு இருக்கவேண்டும் .

- குடும்பத்தின் பொருளாதார விஷயங்கள் பற்றி சேர்ந்து பேசுவது
- உடல்நலப் பராமரிப்பு மற்றும் சத்துணவுக்கான சம வாய்ப்பு
- கர்ப்பத்தடை வழிகளைப் பின்பற்றுவது, குழந்தைகள் பெற்றுக்கொள்வது, வீட்டுச் செலவுகள் போன்றவற்றைப் பற்றி சமமாக முடிவெடுப்பது.
- குடும்ப வன்முறை, பாலியல் ரீதியாக மோசமாக நடத்துதல் என அனைத்து வகையான வன்முறைகளிலிருந்தும் சமமான பாதுகாப்பு
- வீட்டு வேலைகளிலும், பொறுப்புகளிலும் சம பங்கு
- திறன்களை வளர்த்துக் கொள்வதில் சம வாய்ப்பு
- வீட்டு வேலைகள் உட்பட்ட அனைத்து வேலைகளையும் பகிர்வது

## கருத்துத் தாள் - 2

பெண் என்றால் இப்படி இருக்க வேண்டும் என்கிற சமூகப் பாலின வரையறைப்படி ஆண்களும் பெண்களும் வளர்க்கப்பட்டிருப்பதால் வீட்டு வேலை என்பது ஆண்களுக்கு இன்னும் ஒரு கடினமான விஷயமாகவே படுகிறது.

திருமணத்திற்குப் பின் ஆணும், பெண்ணும் குறிப்பிட்ட சில பாத்திரங்களையும், பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சமூகம் எதிர்பார்க்கின்றது. நாமும் தொடர்ந்து அதைத்தான் செய்கின்றோம். கவனமாக ஆராய்ந்தால் குடும்பத்தின் / வீட்டின் எல்லா வேலைகளையும் ஆண், பெண் இருவராலும் செய்ய முடியும் (குழந்தைத் பெற்றுக்கொள்வதைத் தவிர – அது பெண்களால்தான் செய்ய முடியும்).

பொதுவாக பெண்கள் மூன்று வகையான வேலைகளைச் செய்கின்றனர்.

- ***மறு உற்பத்தி :*** *(குடும்பத்தை, குழந்தைகளைப் பராமரித்தல், குடும்பத்துக்குள் ஆரோக்கியத்தைப் பராமரித்தல்)*
- ***உற்பத்தி :*** *(வீட்டின் வெளியே சம்பாதித்தல், அல்லது குடும்ப வியாபாரம் / தொழிலில் வேலைபார்த்தல்)*
- ***ஓய்வு மற்றும் சமூகம் :*** *(விருந்தாளிகளைக் கவனித்தல், கொண்டாட்டங்கள்/மகளிர் சுயஉதவிக் கூட்டங்கள்)*

ஆனால், ஆண்கள் இரண்டு வகையான வேலைகளைத்தான் செய்கின்றனர். உற்பத்தி (சம்பாதித்தல்) மற்றும் சமூகம் (வீட்டைவிட்டு வெளியே சமூகத்துடன் உரையாடுதல்).

ஆகையால் பெண்களுக்கு மூன்று மடங்கு வேலை உள்ளது.

பெண்கள் தற்போது பொருளாதாரப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோதிலும் ஆண்கள் வீட்டு வேலையில் இன்னும் பங்கேற்கவில்லை. ஆண்களும் குழந்தைகளை வளர்ப்பதில் பங்கேற்க வேண்டும். (கைக்குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளுதல், துணிகளை மாற்றுதல், பள்ளிச் சீருடைகளை மாற்றுதல், வீட்டுப்பாடம் கற்பித்தல், உடல்நிலை சரியில்லாத குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளுதல், அவர்கள் உணர்வுகளை வழிநடத்துபவர்களாக இருத்தல், அவர்களுடைய பொழுதுபோக்குச் செயல்பாடுகள், ஈடுபாடுகள் பற்றி பேசுதல் முதலியன.)

வேலைகளைப் பகிர்வது கணவன் மனைவிக்கிடையே நெருக்கத்தை ஏற்படுத்தும். அதுவே உண்மையான பந்தம். பெற்றோர் இருவரும் குழந்தை வளர்ப்புப் பொறுப்புகளை சமமாக ஏற்கும் குடும்பத்திலிருந்து வரும் பிள்ளைகள் மிகவும் தன்னம்பிக்கையுடன்,

அனைவரிடமும் கலந்துரையாடி பலதரப்பட்ட இடர்களைக் கையாளும் திறமை உடையவர்களாக இருக்கிறார்கள் எனப் பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

எனவே, உங்களுடைய முந்தைய தலைமுறை திருமணத்தைப்பற்றி வைத்திருக்கக்கூடிய வரையறைகளைப் பற்றி சிந்திக்க ஆரம்பியுங்கள். ஆணும் பெண்ணும் சமம் என்ற நிலைப்பாட்டில் இருந்து செயல்பட ஆரம்பியுங்கள் .

# அமர்வு 10

## குழந்தைத் திருமணம் - ஒரு மனித உரிமை மீறல்

**நேரம் :** *90 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள், சட்டங்கள் மற்றும் திட்டங்கள் தொடர்பான தகவல் புத்தகப் பிரதிகள், மாதிரிச் சம்பவங்களின் பிரதிகள், இணைப்பு – 1: சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் பிரதிகள்.*

### கற்றலின் நோக்கம் :

- *இந்த அமர்வின் இறுதியில், மனித உரிமைகள், குழந்தைகளின் உரிமைகள், பாகுபாட்டிற்கெதிராகப் பெண்களின் உரிமைகள் போன்றவற்றை பங்கேற்பாளர்கள் தெரிந்து கொள்வார்கள்.*
- *குழந்தைத் திருமணத்தின் மூலம் குழந்தைகளின் உரிமைகள் மீறப்படுவது பற்றியும், குழந்தைத் திருமணச் சட்டம் - 2006இல் உள்ள விதிகளைப் பற்றியும் தெரிந்துகொள்வார்கள்.*

### செயல்படுத்தும் விதம் :

### செயல் -1

- *அமர்வு 6இல் (வளரிளம் பருவப் பெண்களின் உரிமைகள்) கற்றுக் கொண்டவைகளை நினைவுப்படுத்த வேண்டும். வளரிளம் பருவப் பெண்களுக்கான உரிமைகள் என்ற தலைப்பின் முக்கிய கருத்துக்களை நினைவு கூற வேண்டும். இணைப்பு -1: மனித உரிமைகள் என்ற ஆவணத்தில் உள்ள தகவல்களைப் பற்றி விவாதித்ததை பகிரும்படி சொல்லவேண்டும் .*
- *இந்த அமர்வின் நோக்கங்களை விளக்கி எப்படி குழந்தைத் திருமணத்தில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்பதை விளக்கவேண்டும்.*

### செயல் -2 - குழந்தைத் திருமணத்தினால் மீறப்படும் மனித உரிமைகள்

- *பயிற்றுநர், பங்கேற்பாளர்களை நான்கு குழுக்களாக பிரிக்கவேண்டும்.*
- *நான்கு குழுக்களுக்கும்* ***பயிற்சித்தாள் -1****இல் உள்ள மாதிரிக் கதைகளை குழுவிற்கு ஒன்றாகக் கொடுத்து கலந்துரையாடச் சொல்ல வேண்டும்.*

- ஒவ்வொரு குழுவிலும், மாதிரிக் கதைகளின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்டு கலந்துரையாடச் சொல்ல வேண்டும்.

- அவர்களுடைய கருத்துக்களை **பயிற்சித்தாள் - 2** இல் உள்ளபடி அட்டவணையில் தொகுத்து எழுத வேண்டும்.

- நான்கு குழுக்களும் முடிந்த பின்னர், பயிற்றுநர் கருத்துத்தாளில் உள்ள கருத்துக்களையும் இணைத்துக் கூறி குழந்தைத் திருமணத்தால் வளரிளம் ஆண்கள் மற்றும் பெண்களின் வாழ்க்கை எப்படி எல்லா அம்சங்களிலும் பாதிக்கப்படுகிறது என்பதையும் விளக்கவேண்டும்.

சட்டங்கள், திட்டங்கள் மூலம் என்ன தீர்வுகள் இருக்கின்றன என்ற கருத்தையும் இணைத்துச் சொல்லவேண்டும்.

## செயல் -3 - சட்டங்கள், திட்டங்களை அறிதல்

- பிறகு குழந்தைகள் மற்றும் வளரிளம் பெண்களுக்கான சட்டங்கள் மற்றும் திட்டங்கள் கையேடு என்ற தகவல் புத்தகத்தின் பிரதிகளை பங்கேற்பாளர்களுக்கு விநியோகிக்க வேண்டும். (வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாட்டிற்கான சட்டங்கள் மற்றும் திட்டங்கள் - வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாட்டைப் பற்றி பேசுதல்)

- **பயிற்சித்தாள் - 4** இல் உள்ள கேள்விகளைக் கேட்டு கலந்துரையாடவேண்டும்.. குழந்தைத் திருமண தடைச் சட்டம் - 2006 பற்றி விளக்கி அது எவ்வாறு குழந்தைத் திருமணத்தை தடுக்கிறது என்றும், அதை மீறுபவர்களுக்கு கடுமையான தண்டனை உண்டு என்பது பற்றியும் விளக்கவேண்டும்..

## பயிற்சித்தாள் - 1 - "குழந்தைத் திருமணத்தில் மீறப்படும் மனித உரிமைகள்"

### மாதிரிச் சம்பவம் – 1

### ஆரோக்கியம் மற்றும் குழந்தைத் திருமணம்

15 வயதுடைய மீனா ஒரு கிராமத்தில் வாழ்கிறாள். அவள் ஒன்பதாம் வகுப்பில் படிக்கிறாள். ஒரு நாள் அவளுடைய அண்டை வீட்டார், மீனாவை தங்களுடைய அக்கா பையனுக்கு திருமணம் செய்வதற்காக, மீனாவின் அப்பாவை அணுகினர். அவர்கள் அக்கா பையன், ஒரு செங்கல் சூளையில் வேலை கிடைக்கும்போது வேலை செய்துகொண்டிருந்தான். மீனாவிற்கு திருமணத்தில் விருப்பமே இல்லை. ஆனால் அவள் தந்தையோ, பெற்ற கடமையை முடிக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று நினைத்தார். இறுதியில் ஒரே மாதத்தில் அவளுடைய திருமணத்தை முடித்துவிட்டார்.

ஒரு வருடத்திற்குப் பின், அவளுக்கு 16 வயது இருக்கும்போது மீனா ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். கர்ப்பக்காலத்தில் அவளுக்கு சத்தான உணவோ உடல்நல பராமரிப்போ கிடைக்கவில்லை. முக்கால்வாசி நேரம், அவளுடைய கணவன் வேலைக்காக

வெளியூர் செல்வான். அவன் வீட்டிற்கு அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தாலும், அவளுக்கு ஒழுங்காகப் பணம் தருவதில்லை. அவளுக்குப் பிரசவம் மிகவும் கடினமாக இருந்தது. மிகவும் பலவீனமாகவும் அடிக்கடி உடல்நலம் சரியில்லாமலும் இருந்தாள். ஆயினும் எடை குறைவாகவும், ஊட்டச்சத்து குறைபாடுடனும் குழந்தை பிறந்தது.

சில மாதங்களுக்குள்ளாகவே மீனாவிற்கு அடிக்கடி காய்ச்சல் வந்தது. உடலில் தடிப்புகளும், அடிக்கடி சோர்வும் ஏற்பட்டன. கழுத்தைச் சுற்றி வீக்கமும் ஏற்பட்டது. ஒரு மருத்துவரை அணுகியபோது அவர் ரத்தப் பரிசோதனைக்குப் பரிந்துரைத்தார். அந்த பரிசோதனையில் அவளுக்கு எச்.ஐ.வி. தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அவளுடைய புகுந்த வீட்டாருக்கு இது தெரிந்த பின் அவளுடைய நடத்தையே காரணம் என்று குற்றம்சாட்டி குழந்தையுடன் அவளை விரட்டிவிட்டனர். அந்தக் குழந்தையும் அடிக்கடி உடல் நலமின்றி இருந்தது. அவள் அவளுடைய பெற்றோர்களிடம் சென்றபோது அவர்களும் அவளைத் திருப்பி அனுப்பிவிட்டனர்.

**உங்கள் குழுவில் கீழ்க்காண்பனவற்றை கலந்துரையாட வேண்டும் :**

1. இந்தக் கதையில் எந்த உரிமைகள் மீறப்பட்டன? எவ்வாறு?
2. இந்த உரிமை மீறலினால் அந்த வளரிளம் பருவப் பெண்ணுக்கு ஏற்பட்ட தாக்கம் என்ன?

### மாதிரி சம்பவம் - 2

### விருப்பத் தெரிவு செய்வதற்கும், முடிவெடுப்பதற்கும் உரிய உரிமையும் குழந்தைத் திருமணமும்.

ரமா ஒரு நகரத்தின் அருகில் உள்ள ஒரு கிராமத்தில் வசித்து வந்தாள். ஒவ்வொரு வருடமும் அவள் பள்ளியில் நன்றாகவே படித்து வந்தாள். அவள் ஒன்பதாம் வகுப்பிற்குச் சென்றபின் அவளுடைய தந்தை அவளுடைய தாயின் விருப்பத்திற்கு மாறாக ரமாவிற்கு ஒரு செல்போனை வாங்கிக் கொடுத்தார். ரமா செல்போனை பயன்படுத்தி ஆங்கிலப் பயிற்சி வகுப்பில் உள்ள தன் நண்பர்களுடன் அரட்டை அடிக்கத் தொடங்கினாள். அவள் தன் நண்பர்களுடன் சுதந்திரமாக இருப்பது அவள் தந்தைக்குப் பிடிக்காமல் போக ஆரம்பித்தது.

ஒரு நாள், அவள் தன் பெற்றோர் அவளுக்காக வரன் தேடுவதை அறிந்தாள். அவள், அவளுடைய பெற்றோரிடம் திருமணம் செய்துகொள்வதற்குப் பதிலாக படிப்பைத் தொடர விரும்புவதாகக் கூறினாள். ஆனால் அவளுடைய தந்தை, அவள் தங்கள் ஜாதியில்லாத பையனுடன் தொடர்பில் இருப்பதாக நினைத்தார். அதனால், அவர் தேர்ந்தெடுத்த பையனை ரமா திருமணம் செய்துகொள்ளவேண்டுமென, அவள் “நலத்தை விரும்பும் தந்தையாக” நிர்ப்பந்தித்தார்.

*அடுத்த நாள், பள்ளிக்குச் செல்லும் வழியில் அவளுடைய நண்பனான ரவியை சந்தித்து வீட்டில் நடந்து கொண்டிருப்பதைப் பற்றிக் கூறினாள். ரமாவும், ரவியும் அன்று பள்ளிக்குச் செல்லாமல் அருகிலுள்ள பூங்காவிற்கு ஒன்றாகச் சென்று அவளுடைய பிரச்சினைகளுக்குரிய தீர்வைப் பற்றி பேசினர். திரும்பும் வழியில் ரமாவின் தந்தையை சந்தித்தனர். ரமாவை ரவியுடன் பார்த்தவுடன் அவர் மிகவும் கோபப்பட்டார்.*

*ரமா அன்று வீடு திரும்பவில்லை. ரமாவின் தந்தை உள்ளூர் காவல் நிலையத்தில் தவறான குற்றச்சாட்டு என்று தெரிந்தும் தன் பெண் கடத்தப்பட்டாள் என்று புகார் செய்தார். பின்னர் ரமா அவளுடைய தோழன் ரவியைத் திருமணம் செய்துகொண்டு அவனுடைய பெற்றோரின் ஒப்புதலுடன் அவர்களுடைய வீட்டில் வாழ்வதாகக் கேள்விப்பட்டார். கோபத்தில் அவர், அவருடைய ஊரிலுள்ள சில அதிகாரம் படைத்த நபர்களுடன் ரமாவைச் சந்தித்தார். ரவியையும் அடித்துவிட்டார். ரமாவின் தந்தை ரமாவைத் தன்னோடு வீட்டிற்கு வரும்படி வற்புறுத்தினார். ஆனால் அவள் கேட்கவில்லை. அதற்குப் பதிலாக காவல் நிலையத்திற்கே சென்று தான் கடத்தப்படவில்லை என்றும், தானே ரவியைத் திருமணம் செய்து கொள்ள விரும்பித் தேர்வு செய்ததாகவும் கூறினாள்.*

**கீழ்க்காண்பவை குறித்து உங்கள் குழுவில் கலந்துரையாடவேண்டும் :**

1. *இந்த சம்பவத்தில் மீறப்பட்ட உரிமைகள் எவை? எவ்வாறு?*
2. *இந்த உரிமை மீறல்களினால், அந்தப் பெண்ணுக்கு ஏற்பட்ட தாக்கம் என்ன?*

### *மாதிரி சம்பவம் - 3*

### *கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் குழந்தைத் திருமணம்.*

*ஷ்ரேயா ஒரு வறுமையான குடும்பத்திலிருந்து வந்தவள். மிகுந்த புத்திசாலியாக இருந்தாள். பள்ளியிலும் நல்ல மதிப்பெண்கள் பெற்றாள். அவளுக்கு இரண்டு சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் பள்ளிக்குச் சென்றனர். சிறப்பு பயிற்சி வகுப்புக்கும் சென்றனர்.*

*அவள் ஒன்பதாம் வகுப்பிற்கு வந்தபின், 15 வயதிலேயே, அவளுடைய பெற்றோர் ஒரு தையல்காரருடன் அவளுக்கு திருமணத்தை நடத்தி வைத்தனர். திருமணத்திற்குப் பின் அவள் படிப்பைத் தொடர ஆசைப்பட்டாள். ஆனால் அனுமதிக்கப்படவில்லை. அடுத்த மூன்று வருடங்களில் 2 குழந்தைகளுக்குத் தாயானாள். மெதுவாக அவளுடைய கணவனின் வியாபாரமும் நலிவடையத் தொடங்கியது. குழந்தைகளுக்கு உணவளிக்க ஏதாவது ஒரு வழியில் சம்பாதிக்கும்படி அவளுடைய கணவனால் தொடர்ச்சியாகச் சித்திரவதை செய்யப்பட்டாள்.*

*அவளுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அருகிலுள்ள அங்கன்வாடியில் காலியாக இருந்த ஒரு வேலைக்கு விண்ணப்பித்தாள். ஆனால், குறைந்தபட்சக் கல்வித் தகுதியாக பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனை இருந்ததால் அவளுக்கு அந்த வேலை கிடைக்கவில்லை.*

## உங்கள் குழுவில் கீழ்க்காண்பவை பற்றி கலந்துரையாடவேண்டும் :

1. எந்த உரிமைகள் மீறப்பட்டுள்ளன? எவ்வாறு?
2. இந்த உரிமை மீறல்களினால் அந்த பெண்ணின் மேல் ஏற்பட்ட தாக்கம் என்ன?
3. ஷ்ரேயா 10-வது வகுப்பு வரை படிப்பை முடித்திருந்தால் அது அவளுடைய வாழ்க்கையில் என்ன மாறுதல்களை ஏற்படுத்தியிருக்கும்.?

## மாதிரி சம்பவம் - 4

## வன்முறையும் குழந்தைத் திருமணமும்.

கிராமத்தில் வசிக்கும் 15 வயதுப் பெண் ராதா. தன் உயிர்தோழி மினி, சிறப்பு பயிற்சி வகுப்பிலிருந்து வீட்டிற்கு திரும்பி வரும் வழியில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டாள் என்பதைக் கேட்டு ராதா மிகவும் வருத்தம் அடைந்தாள். இத்தகைய நிகழ்வு தன் பெண்ணிற்கும் ஏற்படக்கூடாதென ராதாவின் தந்தை உடனடியாக அவளுக்கு, அவளைவிட 14 வயது மூத்தவருடன் திருமணம் செய்துவைத்து விட்டார். ராதா மேற்கொண்டு படித்து கணினி இயக்குபவராக வேலைக்கு செல்லவேண்டும் என்று விருப்பப்பட்டாலும், விருப்பமின்றி திருமணத்திற்கு ஒத்துக்கொண்டாள். மினியைப் போன்று அவளுக்கும் நடந்தால், சமுதாயத்தை எதிர்கொள்வது கேவலமாக இருக்குமென்றும், தாங்கள் தற்கொலை செய்துகொள்வோம் என்றும் அவளுடைய பெற்றோர் மிரட்டி அவளைப் பணிய வைத்தனர்.

திருமணமான முதல் நாளே, அவளுடைய மாமனார், மாமியார், அவள் கறுப்பாக இருப்பதற்கு நஷ்டஈடாக 30,000/- ரூபாய் கொண்டுவரும்படி கூறினர். அத்துடன் அவள் காலையிலிருந்து இரவு வரை எல்லா வீட்டு வேலைகளையும் செய்தாள். எல்லோரும் தூங்கியபின் தான், அவள் தூங்க அனுமதிக்கப்பட்டாள். வரதட்சணை பற்றி அவள் புகுந்த வீட்டார் கேட்ட சமயங்களில் ராதா கொண்டுவர முடியாததால் பட்டினி போடப்பட்டாள். அவள் கணவன் அவளைவிட வயதில் மூத்தவனாக இருந்ததால், அவளால் அவனிடம் பேசமுடியவில்லை. அவள் தொடர்ந்து கணவனிடம் பணம் கேட்டபோதும், அவனால் அது மறுக்கப்பட்டது. அக்கறையில்லாத கணவன், ஆனால் அவன் விரும்பும்போதெல்லாம் உடலுறவு கொள்வதென்பது அவளுக்கு சங்கடமாக இருந்தது.

ராதாவின் கணவன் அவன் வேலை செய்யும் பணியிடத்தில் வேறொரு பெண்ணுடன் தொடர்பிலிருப்பது தெரியவரும்வரை, ராதா தன் போராட்டத்தைப் பற்றி பெற்றோர்களிடம் தெரிவிக்கவில்லை.

## கீழ்க்கண்டவை குறித்து உங்கள் குழுவில் கலந்துரையாடவும்.

1. எந்த உரிமைகள் மீறப்பட்டுள்ளன? எவ்வாறு?

2. இந்த உரிமை மீறல்களினால் அந்த பெண்ணிற்கு ஏற்படும் தாக்கம் என்ன?

## பயிற்சித்தாள் - 2

| **கல்வி மற்றும் குழந்தைத் திருமணம்** | **சுகாதாரம் மற்றும் குழந்தைத் திருமணம்** | **வன்முறை மற்றும் குழந்தைத் திருமணம்** | **தெரிவு செய்வதற்குரிய உரிமை மற்றும் குழந்தைத் திருமணம்** |
|---|---|---|---|
| **மீறப்படும் உரிமைகள்** | | | |
| • கல்வி பெறுவதற்கான உரிமை<br>• வேலை வாய்ப்பிற்கான உரிமை<br>• பாலியல் சுகாதாரம் மற்றும் இனப்பெருக்கம் பற்றி தேர்வு செய்வதற்கான உரிமை | • கல்வி பெறுவதற்கான உரிமை<br>• துணையை தேர்ந்தெடுப்பதற்கான உரிமை<br>• இனப்பெருக்கம் பற்றி தேர்வு செய்வதற்கான உரிமை<br>▪ சத்துணவு மற்றும் பராமரிப்பிற்கான உரிமை<br>▪ உடல்நலம், சிகிச்சை மற்றும் பராமரிப்பு பெறுவதற்கான உரிமை<br>▪ பொருளாதாரப் பாதுகாப்பிற்கான உரிமை<br>▪ வீட்டைவிட்டு வெளியே சென்று வேலை செய்யவும் சம்பாதிக்கவும் உரிமை | • கல்வி பெறுவதற்கான உரிமை<br>• மகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கான பெற்றோரின் உரிமை | • கல்வி பெறுவதற்கான உரிமை<br>• குழந்தைகளுக்கு அவர்கள் கற்ற கல்வியை பயன்படுத்துவது எப்படி என்று கற்றுத் தரும் மதிப் பீடுகளுக்கான உரிமை |

| தாக்கம் | | | |
| --- | --- | --- | --- |
| • படிப்பை இடையில் விட்டு விடுதல்<br>• மோசமான பொருளாதார சூழல்<br>• குழந்தைகளையும் குடும்பத்தையும் கவனித்துக் கொள்வதில் ஏற்படும் கஷ்டங்கள்<br>• பெண்ணிற்கும் அவள் குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து குறைபாடு<br>• பெண்<br>• குழந்தையால்<br>• எதிர் கொள்ளப்படும் வன்முறை<br>• தாய் எதிர்கொள்ளும் வன்முறையினால் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்பு<br>• முழுமையடையாத கல்வியினால் மிகக் குறைந்த வேலை வாய்ப்பு<br>• இயலாமை அதிகரிப்பு | • கணவனால் தொற்று ஏற்பட்டாலும் எச்.ஐ.வி. தொற்றுக்கு குற்றம் சாட்டப்படுதல்<br>• மோசமான சுகாதார நிலைமை<br>• பெண்ணின் கையில் ஒரு ஆதார வளமும் இல்லை<br>• மாமனார், மாமியாரால் வீட்டை விட்டு துரத்தப்பட்ட பின் பிறந்த வீட்டிலும் புகலிடம் கிடைக்காத நிலையில் புகலிடம் இல்லாதிருத்தல் | • உடலளவில், ஆன்மீக அளவில் மற்றும் உளவியல் அளவில் பேரதிர்ச்சியும் வேதனையும் எற்படுதல்<br>• பாலியல் சுரண்டல் / துன்புறுத்தல். திருமணமான தம்பதிகளிடையே ஒப்புதல் இல்லாமல் கட்டாயப்படுத்தி பாலியல் உறவு கொண்டால் அதுவும் பாலியல் பலாத்காரமாகவே கருதப்படுகிறது | • படிப்பை இடையில் விட்டுவிடுதல்<br>• எந்த திறனும் பெறப்படவில்லை<br>• ஆதார வளங்களைப் பெற குறைந்த அளவே வாய்ப்பு<br>• வன்முறைக்கு ஆளாகக் கூடிய பலவீனமான நிலை<br>• தன் உடம்பின் மீதும், இனப்பெருக்க சுகாதாரத்தின் மீதும் தனக்கு கட்டுப்பாடில்லாத நிலை<br>• பாலின வரையறைகளால் வறுமை சுழற்சியில் மாட்டிக் கொள்ளுதல் |

## பயிற்சித்தாள் - 3

- குழந்தைத் திருமணத் தடைச் சட்டத்தின் கீழ் உள்ள சட்ட விதிகளின்படி எவர் தண்டிக்கப்படலாம்?
- குழந்தைத் திருமண தடைச் சட்டத்தின் கீழ் வலுக்கட்டாயமான / இளவயது / குழந்தைத் திருமணங்கள் எவ்வாறு ரத்து செய்யப்படலாம்?
- குழந்தைத் திருமணத்தைத் தடுக்க யாரெல்லாம் உதவலாம்? யாரையெல்லாம் தொடர்பு கொள்ளலாம்? அல்லது யாரிடம் எல்லாம் புகார் அளிக்கலாம்?
- குழந்தைத் திருமணத்தைத் தடுக்க உதவும் அரசாங்கத்தின் பல்வேறு திட்டங்கள் எவை?

# கருத்துத் தாள்

## குழந்தைத் திருமணம் வளரிளம் பருவப் பெண்கள் மேல் ஏற்படுத்தும் தாக்கம்

மாதிரி சம்பவங்கள் பற்றிய குழுக் கலந்துரையாடல்களுக்குப் பிறகு, பல்வேறு பிரச்சினைகளும் விவாதங்களும் வெளிவரலாம். பெற்றோர், பெண் குழந்தைகளுக்கு உதவும்படி பாதுகாப்பும் ஆதரவும் அளிக்காமல், அவர்களை துன்பப்பட வைப்பவர்களாக இருக்கும் கதைகளைக் கேட்க நேரிடலாம். செல்போன் பயன்பாட்டை பெற்றோர்கள் தடை செய்வது பற்றி இளையவர்கள் முறையிடலாம். ஆனால் வளரிளம் பருவத்தினர் அவர்கள் வாழ்க்கையை மோசமாக பாதிக்கக்கூடிய விவரமற்ற முடிவுகளை எடுப்பதில் இவை ஒரு காரணமாக இருப்பது எமக்குக் கையாளத்தெரியாததுதான் என்று கூறுங்கள்.

திருமண வாழ்க்கையில் ஏற்படும் பாலியல் பலாத்காரம் பற்றி தெளிவான சட்டம் இல்லை. ஆனால் குழந்தைத் திருமணம் தொடர்பாகச் சட்டம் இருக்கின்றது. ஆயினும் திருமணம் என்பது வளரிளம் பருவப் பெண்களுக்குப் பாதுகாப்பை அளிக்கவில்லை. சமூகத்தின் பங்கும், பெண்களைப் பற்றி உருவாக்கப்பட்டுள்ள மதிப்பீடும்தான் இங்கு பிரச்சினையாக உள்ளன.

## குழந்தைத் திருமண தடைச் சட்டம் -2006 :

**சட்டத்தின் முக்கியமான அம்சங்கள்:**

- இந்தச் சட்டத்தின் கீழ், ஆண்களுக்கு 21வயதுக்கு குறைவாகவும், பெண்களுக்கு 18 வயதுக்கு குறைவாகவும் இருந்தால் அந்தத் திருமணம் குழந்தைத் திருமணமாகக் கருதப்படும்.
- அனைத்துச் சட்ட மீறலும் பிணையில் வரமுடியாத குற்றமாகும்.
- சட்டத்தை மீறுபவர்களுக்கு இரண்டு வருடங்கள் கடுங்காவல் தண்டனை அல்லது 1,00,000/- ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும். மணமகன் மற்றும் மணமகன் குடும்பத்தாருக்கு அல்லது திருமணத்தை ஏற்பாடு செய்ய உதவிய நபருக்குத் தண்டனை அளிக்கப்படும்.
- குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலர்களுக்கு இந்த மாதிரியான திருமணத்தைத் தடை செய்யவும், சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கவும் உரிமை உள்ளது.

**கீழ்க்காணும் சில பிரச்சினைகள் அல்லது அனைத்து பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடவேண்டும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும் :**

- *குழந்தைத் திருமணம் என்பது ஒருவரின் மனித உரிமையைப் பறிக்கும் செயலாகும்.*
- *குழந்தைத் திருமணம், வளரிளம் பருவப் பெண்ணிற்குரிய கல்வி கற்கும் உரிமையைத் தடுக்கிறது. கல்விக்குரிய உரிமை மிகவும் இன்றியமையாத மனித உரிமை. இது சர்வதேச மனித உரிமை பிரகடனத்தின் (UDHR) 26-வது விதியில் கூறப்பட்டுள்ளது.*
- *குழந்தைத் திருமணம் வளரிளம் பருவப் பெண்களின் ஆரோக்கியத்திற்குரிய உரிமையைத் தடுக்கிறது. இது ஒரு அடிப்படை உரிமையாகும். சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் (UDHR) விதி 25-ல் இது குறிப்பிடபட்டுள்ளது.*
- *விதி 23 - வேலைக்குரிய உரிமை, விதி 22 - சமூகப் பாதுகாப்பிற்குரிய உரிமை, இவை இரண்டும் குழந்தைத் திருமணத்தால் தடைப்படுகின்றன.*
- *வயது குறைந்த ஆண் / பெண் இருவருக்கும் மன முதிர்ச்சி இல்லாத காரணத்தால், திருமணத்தின் பொறுப்புகளையும், விளைவுகளையும் பற்றி தெரிவதில்லை. அதனால் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் வரும் 16-வது விதியில் குறிப்பிட்டுள்ளபடி சுதந்திரமாக, முழு சம்மதத்துடன், திருமணம் செய்வதற்குரிய உரிமை தடைபடுகின்றது.*
- *மனித உரிமைகள் ஒன்றோடொன்று தொடர்புடையவை. குழந்தைத் திருமணம், மேற்கண்ட உரிமைகளை மீறுவது மட்டுமன்றி, மற்ற எல்லா மனித உரிமைகளையும் மீறுகின்றது.*
- *உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்திற்கு ஆதரவாக பொதுச்சபையில் இந்தியா, டிசம்பர் 10,1984 அன்று வாக்களித்துள்ளது. ஆகவே இந்தியர்களாகிய நமக்கு மனித உரிமைகள் பிரகடனத்தில் உள்ள அனைத்து உரிமைகளையும் பெற தகுதி உள்ளது.*

# அமர்வு 11

## குழந்தைத் திருமணத்தில் குடும்ப வன்முறையைக் கையாளுதல்

**நேரம் :** நிமிடங்கள்

**தேவையான பொருள்கள் :** வண்ண அட்டை, மார்க்கர் பேனா, மாதிரி சம்பவங்களின் பிரதிகள்

### கற்றலின் நோக்கம் :

இந்த அமர்வின் இறுதியில்,

- வளரிளம் பருவப் பெண்கள், குடும்பத்தில் நடைபெறும் வன்முறைச் சூழல்களை எதிர்க்கும் துணிவைப் பெற்றிருப்பார்கள். மேலும் பாலினம், அதிகாரம் மற்றும் வன்முறைக்கு இடையே உள்ள தொடர்பை இனம்கண்டு கொள்வார்கள்.
- குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் – 2005ன் முக்கியமான அம்சங்களையும் அடையாளம் கண்டுகொள்வார்கள்.

### செயல்படுத்தும் விதம் :

- பயிற்றுநர், **பயிற்சித்தாள் –1**இல் உள்ள 'குழந்தைத் திருமணத்தில் வன்முறையைக் கையாளுதல்' என்ற தலைப்பில் உள்ள மாதிரிச் சம்பவத்தை பிரதிகள் எடுத்து பங்கேற்பாளர்களுக்கு படிக்கக் கொடுக்க வேண்டும்.
- அனைத்துப் பங்கேற்பாளர்களும் படித்த பின் **பயிற்சித்தாள்–1**இல் கொடுக்கப் பட்டுள்ள கதையை பயிற்றுநர், நிறுத்தி நிதானமாக அனைவருக்கும் புரியுமாறு பொது அமர்வில் வாசிக்க வேண்டும்.
- பங்கேற்பாளர்கள் அனைவரிடமும் வாசித்த கதை புரிந்ததா என்று கேட்டு பயிற்றுநர், கதையின் கீழ் உள்ள கேள்விகளைக் கேட்டு கலந்துரையாட வேண்டும். பங்கேற்பாளர்களுக்கு தனிப்பட்ட கருத்துக்கள் ஏதேனும் இருந்தால் அவற்றையும் கூறச் சொல்லி கலந்துரையாட வேண்டும்.
- பின்னர் பயிற்றுநருக்கான குறிப்பு-1இல் கேட்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்டு கலந்துரையாட வேண்டும்.

- *பயிற்றுநர், கலந்துரையாடலுக்குத் தேவையான கருத்துக்களை கருத்துத் தாளில் இருந்து படித்து தெரிந்துகொண்டு விளக்கிக்கூறி கலந்துரையாட வேண்டும்.*

## *பயிற்சித்தாள் - 1*

### *மாதிரிச் சம்பவம்*

*25 வயதான நீனா தனது கணவர் மற்றும் மாமியாருடன் வசித்து வருகிறார். ஐந்து ஆண்டுகளுக்கு முன்புதான் அவருக்கு திருமணம் நடந்தது. திருமணத்திற்குப் பின்னர் முழு வீட்டு வேலைகளையும் தான் மட்டுமே தனியாளாகக் கவனித்து வருகிறார். அவரது கணவர் பிரசாத் தனது தந்தையுடன் ஒரு கடை நடத்தி வருகிறார். நீனாவின் மாமியார் வீட்டிலேயேதான் இருப்பார். பிரசாத் ஆரம்பத்தில் இருந்தே நீனாவை மதிக்கவோ அக்கறை காட்டவோ இல்லை.*

*சமீபத்தில், பிரசாத் தனது நிதானத்தை அடிக்கடி இழந்து, சின்ன சின்ன விஷயங்களுக்கெல்லாம் கோபமாகி விடுகிறார். உதாரணமாக, நீனா பரிமாறும் உணவு போதுமான அளவு சூடாக இல்லாவிட்டால் அல்லது அவள் துணிகளைச் சரியாகச் சலவை செய்யாவிட்டால் அல்லது பக்கத்து வீட்டாரோடு பேசுவதைப் பார்த்தால், இதுபோன்ற அற்ப காரணங்களுக்காக நீனாவை அடிக்க ஆரம்பித்து விடுகிறார். நீனா அவருடன் உடன்படவில்லை என்றாலோ அல்லது சில விஷயங்களை நியாயப்படுத்த முயன்றாலோ, அவர் இன்னும் அதிகமான வன்முறையில் ஈடுபடுவார்.*

*நீனா மீதான பிரசாத்தின் வன்முறை அணுகுமுறை அவர்களின் மூன்று வயது மகனான ராகவ் மீதும் எதிர்மறையான தாக்கத்தை உருவாக்குகிறது. இப்போதெல்லாம் அவன் அமைதியாகவும், தனக்குள்ளேயே ஒடுங்கிப்போய் மிகவும் கூச்ச சுபாவத்துடனும் இருக்க ஆரம்பித்துவிட்டான். அவனுக்கு சில கெட்ட கனவுகள் வருகின்றன. அதனால் மற்ற குழந்தைகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடம் கோபத்துடன் ஆக்ரோஷமாக இருக்கிறான்.*

*பிரசாத்தின் வன்முறைச் செயல்கள் அடிக்கடி நிகழ்கின்றன. நீனாவுக்கு தன்னையும் தன் குழந்தையையும் எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்று தெரியவில்லை. வன்முறையைப் பற்றி தனது மாமியார் அறிந்திருப்பதாக அவள் உணர்கிறாள், ஆனாலும் அவர்கள் தங்கள் மகனை கண்மூடித்தனமாக ஆதரிக்கின்றனர். இந்தப் பிரச்சினைகளை பெற்றோருடனும் பகிர்ந்து கொள்ள நீனா தயங்குகிறாள். நீனா தன் பொறுப்புகளை முடித்ததும், அவள் கஷ்டங்களை அறியாமல், அவர்கள் நிம்மதியாக வாழ்கிறார்கள். சில நேரங்களில், நீனா தனது வருத்தத்தை தன்னுடன் பரிவாக உள்ள தன் பக்கத்து வீட்டு சீமாவுடன் பகிர்ந்து கொள்வதில் ஆறுதல் காண்கிறாள்.*

## பொது அமர்வில் விவாதிக்கப்பட வேண்டிய கேள்விகள் :

1. *தனது நிலைமையை மேம்படுத்த நீனா என்ன செய்ய முடியும்? ஏன்?*

2. *நீனா, தனது கணவர் மற்றும் மாமியார் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதை எது தடுக்கிறது?*

3. *நீனாவின் நிலைமைக்கு யார் பொறுப்பு?*

4. *நீனா மீதான பிரசாத்தின் வன்முறை அணுகுமுறை, அவர்களின் சிறிய மகனான ராகவ் மீது ஏன் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது?*

5. *நீனாவுக்கு எதிரான வன்முறையை நியாயமானது என்று நினைக்கிறீர்களா? குடும்ப வன்முறையை நியாயப்படுத்தும் எந்த சூழ்நிலையும் இருக்க முடியுமா? காரணங்களைக் கூறுங்கள்.*

6. *நீனாவின் மாமியாரும் தங்கள் வீட்டில் நடக்கும் வன்முறைகளை மறைமுகமாக ஆதரிக்கிறாரா? உங்கள் அருகிலுள்ள அல்லது உங்கள் சொந்த குடும்பத்தில் இதைப் போன்ற நிகழ்வுகள் நடந்துள்ளனவா?*

7. *நீனாவுக்கும் அவரது பெற்றோருக்கும் என்ன ஆலோசனை வழங்க விரும்புகிறீர்கள்?*

## பயிற்றுநருக்கான குறிப்பு - 1

- *பிரசாத் ஏன் வீட்டில் வன்முறையைக் கையாண்டான்? நீனாவுக்கு எதிராக அவன் வன்முறையைப் பயன்படுத்த எத்தகு சூழல் அனுமதித்தது?*
- *வீட்டில் நிகழ்ந்த குடும்ப வன்முறையை நேரில் பார்த்த ஏழு வயது மகன் ராகவ் இடம் ஏற்பட்ட பாதிப்பு என்ன?*
- *குடும்ப வன்முறையை நியாயப்படுத்தும் வாதங்கள் எவை? நீனாவிடம் பிரசாத் நிகழ்த்திய அந்த முரட்டுத்தனமான அணுகுமுறையை நியாயப்படுத்த இயலுமா?*
- *தனிநபர்கள், குறிப்பாக ஆண்கள், வன்முறையைக் குறைக்க என்ன செய்யலாம்?*
- *பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறையைக் கையாள உதவும் சட்டங்கள் எவை?*

# கருத்துத் தாள்

## குடும்ப வன்முறை என்றால் என்ன?

பாலியல் வன்முறையின் எந்தவொரு செயலும், பெண்களுக்கு உடல், பாலியல் அல்லது உளவியல் ரீதியான தீங்கு விளைவிக்கும் அல்லது பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். பொது அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் இதுபோன்ற செயல்களின் அச்சுறுத்தல்கள், வற்புறுத்தல் அல்லது சுதந்திரத்தை தன்னிச்சையாக பறித்தல் நிகழ்ந்தாலும் அதுவும் குடும்ப வன்முறையின் கீழ் அடங்கும்.

குடும்ப வன்முறை என்பது உடல் ரீதியாக, பாலியல் ரீதியாக, உளவியல் ரீதியாக (அ) பொருளாதார ரீதியாக குடும்பத்திற்குள்ளே (அ) நெருக்கமான உறவுகளுக்குள் நிகழ்த்தப்படும் அத்து மீறல் ஆகும். அது கீழ்க்காண்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

- உணர்வு ரீதியாக காயப்படுத்துதல் (எ.கா) அவமானப்படுத்துதல், கேலிசெய்தல், வார்த்தைகளால் காயப்படுத்துதல், தனிமைப்படுத்துதல் (அ) ஒருவரது சுதந்திரமான நகர்ச்சியைக் கட்டுப்படுத்துதல் (வீட்டிற்குள்ளேயே அடைத்து வைத்தல், வெளியுலகோடு தொடர்பு கொள்ள விடாமல் தடுத்தல்).
- உடல் ரீதியான வன்முறை
- கேவலமான பாலியல் நடத்தை
- பொருளாதார இழப்பு, செலவுகளுக்கு பணம் வழங்க மறுப்பது
- வரதட்சணை தொடர்பான துன்புறுத்தல் அனைத்தையும் உள்ளடக்கியது .
- திருமண பந்தத்தில் பாலியல் பலாத்காரம்

கொடுமைப்படுத்துபவர்கள் அனைத்து சமூகத் தட்டுகளிலும் இருந்து வருகிறார்கள். அவர்கள் ஆண்களாகவும் இருக்கலாம், பெண்களாகவும் இருக்கலாம். ஆனால் பெரும்பாலும் ஆண்கள்தான் பெண்கள் மேல் வன்முறை நிகழ்த்துகிறார்கள். குடும்ப வன்முறையை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

குடும்ப வன்முறைக்கான காரணம் மன உளைச்சல், மனநலம் குன்றியிருத்தல், மது (அ) போதை மருந்து எனப் பரவலாக உள்ள நம்பிக்கை அபத்தமானது. இவை காரணிகளாக இருந்தாலும், குடும்ப வன்முறைக்கான காரணம் ஆண்மகன் தெரிந்தே செய்யும் வன்முறைதான். வன்முறைக்கு ஆளாக்கப்படும் அப்பாவிப் பெண் எந்த வகையிலும் இதற்குக் காரணம் என்று ஏற்றுக்கொள்ள இயலாது. பாதிக்கப்படும் பெண் அதற்குப் பொறுப்பேற்க இயலாது. தனது இணையை வன்முறைக்கு உட்படுத்துபவர்கள் அவர்கள் மீது பழியைப் போட்டு தமது நடவடிக்கையை நியாயப்படுத்துகின்றனர். இது ஒரு மோசமான விஷயமாகும் .

தம் மீது நிகழ்த்தப்படும் வன்முறைக்குத் தாமே காரணம் எனப் பெண்களே நினைக்கின்றனர். ஆனால் அந்த உணர்வு தவறானது. அவர்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைக்கு அவர்கள் எந்தத் தவறும் செய்யவில்லை, அவர்கள் அபாண்டமாகப் பழி சுமக்கிறார்கள் எனப் புரிய வைக்க வேண்டும்.

தனிமனித அளவில், ஒரு ஆண் தனது இளமைப் பருவத்தில் வன்முறையைப் பார்த்திருக்கலாம் அல்லது வன்முறைக்கு இலக்காகியிருக்கலாம் (அ) தமது குடும்பத்துக்குள்ளேயே குடும்ப வன்முறையைப் பார்த்திருக்கலாம். இத்தகு சமூகச் சூழல் ஒருவரது சுய பிம்பத்தை பாதிக்கிறது. தம்மைச் சுற்றி வன்முறை நிகழ்வுகளை அடிக்கடி பார்ப்பதால் அவர்கள் வன்முறையோடு இயங்குவதை சமூகம் அங்கீகரிக்கிறது என அவர்கள் நினைக்கலாம்.

வீட்டிலே தினமும் வன்முறையைப் பார்த்தே வளரும் குழந்தைகள் உணர்வு மற்றும் நடத்தை பிறழ்ச்சியை வெளிக்காட்டலாம். இது அதீத தனிமை, குறைவான சுயமரியாதை, கெட்ட கனவுகள், சக வயதினரோடு முரட்டுத்தனமாக நடந்து கொள்ளுதல் மற்றும் குடும்பத்தினரிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளில் வெளிப்படும்.

தமது பெற்றோர் குடும்ப வன்முறையில் ஈடுபடுவதைப் பார்த்தே வளரும் குழந்தைகள், மனைவியை மனுசியாக மதித்த தகப்பனாரது நடத்தையைப் பார்த்து வளர்ந்தவர்களைக் காட்டிலும் அதிக அளவில் தங்களது மனைவியிடம் வன்முறையாக நடந்துகொள்ளும் சாத்தியக்கூறுகள் அதிகம். வன்முறையோடு வாழ்க்கையை நகர்த்தும் பெற்றோர்களின் குழந்தைகள் பின்னாளில் மனைவியை அடிப்பவர்களாக வளர்வதற்கு வாய்ப்புகள் அதிகம். வளரிளம் பருவத்தில் யாரெல்லாம் வீட்டில் வன்முறையைப் பார்த்து வளர்ந்தார்களோ அவர்கள் ஆழ்மனதில் ஏற்படும் பாதிப்பால், அவர்களால் நேர்மறையன வழிகளில் சமூகத்தோடு தொடர்பு கொள்ள இயலாது.

ஆனால், சமூகம் தவறுகளைத் தட்டிக்கேட்கும் உரிமையை ஆண்களுக்குத் தாராளமாகத் தருவதால், தம்மைச் சுற்றி நடைபெறும் வன்முறைக்கு எதிராக விரைவான மற்றும் உறுதியான நடவடிக்கையை அவர்களால் எடுக்க முடியும்.

குடும்ப வன்முறையை முடிவுக்குக் கொண்டு வர ஆண்களையும் சிறுவர்களையும் முக்கியமான பிரதிநிதிகளாக ஏன் பயன்படுத்த வேண்டும் என்பதற்கான காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## ஆண்கள் அக்கறை உள்ளவர்கள் :

ஆண்களுள், பெரும்பாலானோர் மரியாதையானவர்கள். அவர்கள் சமூகத்தில் உள்ள சிறுமியர் மற்றும் பெண்களது வாழ்க்கை பற்றிய அக்கறை உள்ளவர்கள், பெண்களுக்கு பாதுகாப்பான இடங்களை உறுதி செய்வதில் அவர்களது பங்கு மகத்தானது.

### ஆண்களால் வன்முறையை நிறுத்த முடியும் :

குடும்ப வன்முறைக்கு முடிவு வரவேண்டுமென்றால், வன்முறையில் ஈடுபடும் ஆண்களுக்கு வேறுவிதமான தெரிவுகள் செய்ய பயிற்சி அளிக்கப்பட வேண்டும். எப்பொழுதெல்லாம் வன்முறைக்கு எதிரான பெண்ணின் குரலுக்கு ஓர் ஆணின் குரல் வலு சேர்க்கிறதோ அப்போது உலகமே நமக்கு ஓர் பாதுகாப்பான இடமாக மாறுகிறது.

### ஆண்கள் ஆண்கள் பேச்சுக்குக் கட்டுப்படுகிறார்கள் :

ஆண்கள், ஆண்கள் பேசுவதையே காது கொடுத்து கேட்பார்கள். எனவே, ஆளுமையான ஆண்கள் பெண்களை மதிப்பார்கள் என்பது ஆண்களுக்கு கற்பிக்கப்பட வேண்டும்.

### குடும்ப வன்முறை என்பது பெண்களால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினை அல்ல :

குடும்ப வன்முறை ஒவ்வொருவரையும் பாதிக்கிறது. பாலின அணுகுமுறை மற்றும் நடத்தைகளால் அது உருவாகுகிறது. வன்முறையை நிறுத்த கலாச்சார விதிகளை ஆணும் பெண்ணும் இணைந்து புரட்டிப் போடவேண்டும். குடும்ப வன்முறைக்குக் காரணமானவர்களை பொறுப்பேற்கச் செய்ய வேண்டும்.

### வன்முறைக்கு இலக்காகி பிழைத்தவர்களை ஆண்களே அறிவார்கள் :

வன்முறைக்கு இலக்காகி துயரக் கடலில் மூழ்கியிருக்கும் பெண்களின் நண்பர்கள், அண்டை வீட்டார், உறவினர் மற்றும் குடும்பத்தவர் வன்முறையை நன்றாகப் புரிந்திருப்பார்கள். பெரும்பாலான ஆண்களின் வாழ்க்கையில் ஏதோ ஒரு தருணத்தில், அவர்களுக்கு நெருக்கமானவர்கள் அவர்களிடம் உதவி கோரலாம். அத்தகைய தருணங்களில் ஆண்கள், கருணையோடும், புரிதலோடும், அக்கறையோடும் அவர்களுக்கு உதவ வேண்டும்.

### வன்முறைக்குத் தப்பிப்பிழைத்தவர்களோடு ஆண்கள் பணிபுரிகிறார்கள் :

வன்முறையைக் கையாளும் குடும்பத்துக்கு ஆதரவாக தம்மை ஈடுபடுத்திக் கொள்பவர்களுடனான சமூகத்தின் ஒரு அங்கமாகத்தான் ஆண்கள் இருக்கிறார்கள். அவர்கள் சமூகத்தில் நீதிபதி, காவல் துறை அலுவலர், மருத்துவர் போன்ற பதவிகளில் இருந்து வன்முறையால் அவதிப்படும் குடும்பத்துடன் வேலை செய்கிறார்கள்.

### கீழ்க்காணும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதின் மூலம் ஆண்கள் குடும்ப வன்முறையை ஒழிக்கலாம்:

- கண்ணுக்கெதிரே வன்முறை நிகழ்ந்தால் அமைதியாக பார்த்துக்கொண்டிருக்காதீர்கள். அதற்கெதிராகப் பேசுங்கள்.

- உங்களது நடத்தையை முதலில் அகப்பரிசோதனைக்கு உட்படுத்துங்கள். உங்களுடைய அணுகுமுறையும், நடவடிக்கைகளும் பாலின பாரபட்சத்தை பரப்புவதற்கும் வன்முறையை நியாயப்படுத்துவதற்கும் எவ்வாறு உதவியுள்ளன என ஆராயுங்கள். நீங்கள் பெண் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விடுபவராக இருந்தால் உளவியல் ஆலோசகரை நாடித் தேவையான ஆலோசனை பெற்று அதை நிறுத்துங்கள்.
- பெண்கள் மீதான வன்முறையை நிறுத்தி அவர்களை மரியாதையாக கண்ணியத்துடன் நடத்தும் முன் உதாரணமாக மாறுங்கள்.
- குழந்தைகளுடன் பேசி அவர்களுக்கு பாலினம் சார் பாகுபாடுகள் தொடர்பான புரிதலை ஏற்படுத்துங்கள்.
- பாலினச் சமத்துவத்தை சிறுவயதிலிருந்தே கற்பித்து வந்தால் வளரிளம் பருவத்திலும், ஆயுட்காலம் வரையிலும் பெண்களை மதிக்க உதவும்.
- ஊடகங்களில் பெண்களைத் தாக்குவது போல் காட்டப்படும் படங்களை (அ) கேலிச் சித்திரங்களை எதிர்த்து நில்லுங்கள்.
- வன்முறையைத் தடுப்பது பற்றி மற்ற ஆண்களோடு கலந்து பேசுங்கள்.
- குடும்ப வன்முறையிலிருந்து வெளியே வர முயற்சிக்கும் பெண்களுக்கு ஆதரவு காட்டுங்கள்.
- பெண் நண்பர்களது கவலைகள், பயங்கள் மற்றும் பாதுகாப்பு குறித்த பேச்சை காது கொடுத்துக் கேளுங்கள். தாம் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதை உங்களிடம் கூறினால் அவருக்கு ஆதரவு தாருங்கள்.
- வன்முறையற்ற, நேர்மறையான அணுகுமுறையை மக்களிடையே வளர்க்க முயற்சி செய்யுங்கள்.
- குடும்ப வன்முறைக்கு எதிராகப் புகார் செய்யத் தனி நபர்களுக்கு ஊக்கமளியுங்கள்.
- தேர்தலில் அரசியல் பதவிகளுக்குப் போட்டியிடுபவர்களுள், யார் சமூகப் பொருளாதார, அரசியல் சமத்துவத்தைப் பெண்களுக்கு உறுதி செய்கிறாரோ அவர்களுக்கு ஆதரவளியுங்கள்.
- வன்முறையை முடிவுக்குக் கொண்டு வர ஆண்களுக்கு ஊக்கமளிக்கும் சட்டங்களை ஆதரியுங்கள்.
- பெண்களுக்கு ஏற்படும் குடும்ப வன்முறைக்கு எதிராக பாதுகாப்பளிக்கும் சட்டம் 2005 ஐத் தெரிந்து கொண்டு அதைப்பற்றி அனைவருக்கும் தெரியப்படுத்துங்கள். இச்சட்டம் குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கிறது. இது ஓர்

*பொதுச் சட்டம், இதன் கீழ் யாரும் கைது செய்யப்பட மாட்டார்கள். தாய், மகள்கள், சகோதரிகள், மனைவி, சேர்ந்து வாழும் குழந்தைகள் என அனைவரும் இச்சட்டத்தைப் பயன்படுத்தி பாதுகாப்புப் பெறலாம். குடும்ப நிகழ்வு புகாரை (Domestic Incident Report) கீழ்க்காணும் உறுப்பினர் யாரேனும் ஒருவரிடம் அளிக்கலாம்.*

- *மாவட்ட அளவில் நியமிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அலுவலர்.*
- *உங்களது பகுதியில் பணிபுரியும் அரசு சாரா பொதுச் சேவை நிறுவனம்*
- *நீதிபதி*
- *வழக்கறிஞர்கள்*
- *காவல்துறை அதிகாரிகள்*

- *புகார் அளித்த மூன்று நாட்களுக்குள் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.*
- *புகார் பதிவு செய்யப்பட்ட 60 முதல் 90 நாட்களுக்குள் கடைசி விசாரணை நடக்காவிட்டால் பாதுகாப்பு அலுவலர் அபாராதம் கட்ட நேரிடும்.*
- *பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறை பாதுகாப்புச் சட்டம் -2005, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை, பாதுகாப்பான தங்குமிடம், வன்முறை நிகழ்த்தும் கணவன் (அ) துணைவனிடமிருந்து பாதுகாப்பு, குழந்தைகளை பாதுகாப்பாக வைத்திருத்தல், பொருளாதார இழப்பீடு, பராமரிப்பு மற்றும் இலவசச் சட்ட உதவி வழங்கச் சாதகமான ஷரத்துக்களை உள்ளடக்கி உள்ளது.*
- *இது தவிர நீங்கள், கட்டணமில்லா தேசிய உதவி எண் 1091ஐ அழைத்து (அ) பதிவு செய்யப்பட்ட அரசு சாரா பொதுச் சேவை நிறுவனத்திடம் இம்மாதிரியான புகார்களை வழங்கலாம் அல்லது உங்கள் பகுதியில் இதுபோன்ற நிகழ்வுகளைக் கையாளும் பதிவுசெய்யப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கு தெரிவிக்கலாம்.*

*(குறிப்பு: குடும்ப வன்முறை வழக்குகளில் குற்றவியல் புகாருக்கு ஐபிசியின் பிரிவு 498 ஏ தண்டனை வழங்குகிறது.)*

# அமர்வு 12

## சமுதாயத்தின் உறுப்பினர்களாக பெண்கள் மற்றும் வளரிளம் பருவப் பெண்களின் பங்களிப்பு.

**நேரம் :** *60 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள், உண்மைச் சம்பவங்களின் பிரதிகள், இணைப்பு - 4 - சமுதாயத்தில் பெண்களின் பங்கு.*

### கற்றலின் நோக்கம் :

*இந்த அமர்வின் இறுதியில்,*

- *சமுதாயம் ஏன் மகன்களையும், மகள்களையும் வெவ்வேறு விதமாகப் பார்க்கின்றது என்பதை பங்கேற்பாளர்கள் தெரிந்து கொள்வார்கள்.*
- *மேலும், சமுதாயத்தில் பெண்களுக்கான மதிப்பைக் கூட்டுவதற்குரிய வழிகளையும் கண்டறிந்து கொள்வார்கள்.*

### செயல் - 1 - செயல்படுத்தும் விதம் :

*அறையின் இரு வெவ்வேறு மூலைகளிலும் சார்ட் தாளை வைத்து "மகனின் மதிப்பு" மற்றும் "மகளின் மதிப்பு" என்று எழுதவேண்டும்.*

- *எல்லா பங்கேற்பாளர்களையும் அந்தந்த சார்ட் தாளில், ஏன் குடும்பங்கள் மகன்களையும், மகள்களையும் வெவ்வேறாக மதிப்பிடுகிறார்கள் என்று ஒரு காரணத்தையாவது எழுதச் சொல்லவேண்டும்.*
- *எல்லா பங்கேற்பாளர்களுக்கும் இந்த வேலையைச் செய்ய 10 – 12 நிமிடங்கள் கொடுக்கவேண்டும். பிறகு எழுதப்பட்ட பதில்களை பங்கேற்பாளர்களுக்கு வாசித்துக் காட்டவேண்டும்.*
- *பயிற்றுநர், பயிற்றுநருக்கான குறிப்பு –1இல் உள்ள கேள்விகளைக் கேட்டு பங்கேற்பாளர்களோடு கலந்துரையாட வேண்டும்.*
- *பின்னர் செயல் -2க்குப் போக வேண்டும்.*

### பயிற்றுநருக்கான குறிப்புகள் 1- கலந்துரையாடலுக்கான கேள்விகள் :

- வளரிளம் பருவ ஆண்கள் மற்றும் பெண்களின் தகுதிக் குறைவுக்கு பொதுவான காரணங்கள் என்ன?
- எதைப் பற்றி எளிதாக எழுத முடிந்தது? மகனா? மகளா?
- நிலைமையை மாற்ற, சமுதாயத்தில் வளரிளம் பருவப் பெண்களின் மதிப்பைக் கூட்ட ஆண்கள் என்ன செய்யலாம்? அது வளரிளம் பருவ ஆண்கள் மற்றும் பிற ஆண்கள் உட்பட அனைவருக்கும் எவ்வாறு பயனுள்ளதாக இருக்கும்?
- எல்லா சமூகத்திலும் இந்த நிலைமை ஒரே மாதிரியாக எல்லா சமயத்திலும் இருந்திருக்கிறதா? எப்போது வேறுபட்டிருக்கின்றது? ஏன்?
- இந்த பாகுபாட்டினால், வளரிளம் பருவ ஆண்கள், பெண்கள் மேல் ஏற்படும் தாக்கம் என்ன?
- இந்த நிலைமையை மாற்றி வளரிளம் பருவ ஆண்களும் பெண்களும் சமமாக நடத்தப்படுவதை எவ்வாறு உறுதிப்படுத்தலாம்?

### செயல் -2 - செயல்படுத்தும் விதம் :

- பங்கேற்பாளர்களை மூன்று குழுக்களாகப் பிரிக்க வேண்டும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் பயிற்சித்தாளில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிச் சம்பவங்களை ஒரு குழுவுக்கு ஒன்று வீதம் நகல் எடுத்துக் கொடுக்க வேண்டும்.
- குழுவில் அந்த சம்பவத்தை வாசித்து அதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கலந்துரையாட வேண்டும்.
- கலந்துரையாடிய கருத்துக்களை பொது அமர்வில் பகிர வேண்டும்.
- பயிற்றுநர், கருத்துத்தாளில் உள்ள கருத்துக்களை எடுத்துக் கூறி அமர்வை முடிக்க வேண்டும்.

## பயிற்சித்தாள் -1 சமுதாயத்திற்கு பெண்களின் பங்களிப்பு :

### மாதிரிச் சம்பவம் -1

*மேரிகோம், மணிப்பூர் மாநிலத்தில் உள்ள கங்காதேய் கிராமத்தில் வறுமையான பழங்குடியின குடும்பத்தில் பிறந்தார். பள்ளிக்குச் செல்வதற்கிடையில், அவளுடைய தம்பி, தங்கைகளை கவனித்துக் கொண்டு, ஹாக்கி, கால்பந்து என எல்லாவிதமான விளையாட்டுகளையும் (குத்துச்சண்டை தவிர) விளையாடி வந்தார். அதனுடன் விவசாயிகளான தன் பெற்றோருக்கு உதவியாக வயலிலும் வேலை செய்தார். மணிப்பூரின் குத்துச்சண்டை வீரர் டிங்கோசிங் 1992 ஆசிய விளையாட்டுகளில் தங்கம் பெற்றது அவருக்கு ஊக்கம் அளிப்பதாக இருந்தது. மேரிகோம் மணிப்பூரின் தலைநகரான இம்பாலிற்கு சென்று மற்ற விளையாட்டுகளில் பயிற்சி எடுத்துக்கொண்டார். கிழிந்த, மோசமான ஆடைகளுடன், அந்த வளரிளம் பெண்ணான மேரிகோம், இந்திய விளையாட்டுத் துறையின் பயிற்சியாளரான கே.கோசானா மேய்தியை அணுகி ஒரு வாய்ப்பளிக்குமாறு கேட்டாள். மற்றவர்கள் படுக்கச் சென்ற பின்னும், இரவில் அவள் பயிற்சி செய்த குத்துகள் பயிற்சியாளருக்கு நினைவில் வந்தன. மேரிகோமின் இலக்கு மிகவும் சிறியது. தன் குடும்பத்தை வறுமையிலிருந்து மீட்டெடுத்து அவளுடைய பெயரை நிலைநாட்டி வாழவேண்டும் என்பதுதான்.*

*மேரிகோம் ஐந்து தடவை உலக குத்துச்சண்டை பட்டத்தை வென்றுள்ளார். அவர் ஒருவர்தான், உலக குத்துச்சண்டைசாம்பியன் பட்ட போட்டிகளில் ஒவ்வொரு தடவையும் ஒரு பதக்கம் என ஆறு தடவை பதக்கம் பெற்றவர். 2012ஆம் ஆண்டு கோடைகால ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற ஒரே பெண் போட்டியாளர் அவர்தான். அதில் நம் நாட்டிற்காக ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்றார். அவர் உலக பெண்கள் குத்துச்சண்டை பிளை வெயிட் (Fly Weight Category) பிரிவு வீராங்கனைகள் தர வரிசையில் 4வது இடத்தைப் பெற்றுள்ளார். திருமணமாகி இரட்டையர்களான ஆண் குழந்தைகளுக்குத் தாயான 30 வயது மேரி கோம், எல்லாவற்றிற்கும் ஈடுகொடுத்ததோடு மட்டுமன்றி, 2007 முதல் வசதியற்றவர்களுக்கு இலவசமாகக் குத்துச்சண்டையும் கற்றுத்தருகிறார்.*

### கீழ்காண்பன பற்றி உங்கள் குழுவில் கலந்துரையாடவேண்டும் :

1. *இந்தக் கதையில் இந்தப் பெண்ணால் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள் என்ன? சமுதாயம் அவருடைய வெற்றிக்கு முன்பாக அவருக்கு மதிப்பளித்ததா?*

2. *சவால்களை எதிர்கொண்டு, சமுதாயத்தில் அவருடைய நிலையை மேம்படுத்திக்கொள்ள, எத்தகைய குணங்கள் அவருக்கு உதவின?*

### மாதிரிச் சம்பவம் -2

மாலாவின் கணவர் இளம் வயதிலேயே இறந்துவிட்டார். அவளுக்கு இரண்டு மகள்களையும், ஒரு மகனையும் வளர்க்கவேண்டிய பொறுப்பிருந்தது. மாலா பல வீடுகளில் சமைக்கும் வேலையை மேற்கொண்டாள். ஆனால் அந்த வருமானம் போதுமானதாக இல்லை.

நல்ல வருமானம் ஈட்ட வேறு ஏதாவது வழிகள் உண்டா என்று ஆராயத் தொடங்கினாள். அவளுக்கு ஓட்டுநர் தொழிலில் ஆர்வம் ஏற்பட்டது. சில மாதங்களில் உள்ளூரிலுள்ள ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் இலவசமாக ஓட்டுநர் பயிற்சியில் சேர்ந்து, கார் ஓட்டுவதற்குக் கற்றுக்கொண்டாள். இரண்டு மடங்காய் உழைத்து, சமையல் வேலை செய்துகொண்டே கார் ஓட்டுநர் பயிற்சியும் மேற்கொண்டாள். ஓட்டுநர் பயிற்சியுடன் தற்காப்பு கலைப் பயிற்சியும், இந்தியும் ஆங்கிலமும் பேசுவதற்கும், பேச்சுத்திறன், பெண் உரிமை மற்றும் பாலியல் சுகாதாரம் பற்றியும் கற்றுக்கொண்டாள்.

இன்று மாலாவிடம் நிரந்தர ஓட்டுநர் உரிமமும், அருகிலுள்ள பள்ளியில் நல்ல ஊதியத்துடன் கூடிய வேலையும் இருக்கிறது. அவள், அவளுடைய வேலையைப் பற்றி பெருமிதம் கொண்டு, அவளுடைய காரையும் தன் குடும்பத்தின் ஒரு உறுப்பினராகவே கருதுகிறாள். அவளுடைய மொத்த சமூகமும் அவளை உயர்வாகப் பார்க்கின்றது. இப்போது அவளால், அவள் குழந்தைகளுக்குப் பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்க முடியும்.

### கீழ்க்காண்பன பற்றி உங்கள் குழுவில் கலந்துரையாடவேண்டும் :

1. இந்தக் கதையில் வரும் பெண் எதிர்கொண்ட சவால்கள் என்ன? இந்த சமூகம் அவளுடைய வெற்றிக்கு முன் அவளுக்கு மதிப்பளித்ததா?

2. சவால்களைத் தாண்டி, அவளுடைய நிலையை சமுதாயத்தில் உயர்த்திக்கொள்ள, இந்த பெண்ணிற்கு எந்த குணங்கள் உதவின?

### மாதிரிச் சம்பவம் -3 :

ராஜேஸ்வரி குடும்பத்தின் பொருளாதார சூழ்நிலை காரணமாக ஐந்தாவது வகுப்புடன் படிப்பை நிறுத்தி விட்டார். இரண்டு ஆண்டுகள் தீப்பெட்டி கட்டு ஒட்டும் வேலை செய்தபோது குழந்தைத் தொழிலாளர்களுக்கான சிறப்புப் பள்ளி பற்றி கேள்விப்பட்டார். அங்கு படிப்பவர்களுக்கு பகலில் சாப்பாடு, அது தவிர குடும்பங்களுக்கு மாத ஊக்கத் தொகை கிடைப்பதாக அறிந்து, படிப்புடன் கூடை தயாரித்தல், எம்பிராய்டரி, புக் பைண்டிங், டெய்லரிங் போன்றவற்றை கற்றுக் கொண்டார்.

பிறகு பள்ளியில் 6ஆம் வகுப்பில் சேர்ந்து படித்து பத்தாம் வகுப்பில் 393 மதிப் பெண்கள் பெற்றார். 'பிளஸ் ஒன்' வகுப்பில் தொழிற்பயிற்சிப் பாடப்பிரிவை எடுத்து

*படிக்கும்பொழுதே, விடுமுறையில் வேலை பார்த்தார். சில நேரம் பள்ளிக்கு போகாமல் கூட வேலை பார்க்க வேண்டியதிருந்தது. 'பிளஸ் டூ' தேர்வில் 1,014 மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றார்.*

*அப்பா மறைந்து விட, அம்மா கடுமையாக உழைத்து, ராஜேஸ்வரியை ஆசிரியர் பயிற்சி டிப்ளமோவில் படிக்க வைத்தார் .*

*டீச்சர் டிரெயினிங் முடித்ததும் ராஜேஸ்வரி குழந்தைத் தொழிலாளர் சிறப்புப் பள்ளியில் வேலை பார்த்தார். பிறகு உள்ளூர்ப் பள்ளி ஒன்றில் ஆறு மாதங்கள் ஆசிரியராக வேலை பார்த்தார். இவருக்கு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் ஆசிரியர் வேலை கிடைத்தது. தற்பொழுது அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியராகி விட்டார்.*

*2006 இல் குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு நாளையொட்டி, அன்றைய தொழிலாளர் நலத்துறை அமைச்சரிடமிருந்தும் விருது பெற்றிருக்கிறார்.*

*“எனது பள்ளியில் எந்தக் குழந்தையும் படிப்பை இடையில் விட்டுவிடாமல் பார்த்துக் கொள்வேன்” என்று கூறும் ராஜேஸ்வரி, குழந்தைத் தொழிலாளராக இருந்து ஆசிரியராகி இருப்பது மற்றவர்களுக்கு முன்மாதிரி என்பதில் பெருமை கொள்கிறார்.*

*பத்திரிகைச் செய்தி - 06 -10 மார்ச் 2014*

## கீழ்க்காண்பன பற்றி உங்கள் குழுவில் கலந்துரையாடவேண்டும் :

1. *இந்தக் கதையில் வரும் பெண் எதிர்கொண்ட சவால்கள் என்ன? இந்தச் சமூகம் அவளுடைய வெற்றிக்கு முன் அவளுக்கு மதிப்பளித்ததா?*
2. *சவால்களைத் தாண்டி, அவளுடைய நிலையை சமுதாயத்தில் உயர்த்திக்கொள்ள, இந்த பெண்ணிற்கு எந்த குணங்கள் உதவின?*

# கருத்துத் தாள்

சமுதாயம், மகன்கள் (ஆண்கள்) மற்றும் மகள்கள் (பெண்கள்) செய்யும் வேலையைப் பொறுத்து அவர்களை மதிப்பிடுகிறது. ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்களை மற்றும் வளரிளம் பருவப் பெண்களைப் பற்றிய மதிப்பீடு குறைவாக இருந்தாலும், இந்த நிலையை மாற்ற முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

இந்த முயற்சியை வளரிளம் பருவப் பெண்களிடமிருந்தும் பிற பெண்களிடமிருந்தும் ஆரம்பிக்கலாம். அவர்கள் தைரியத்துடனும், மன உறுதியுடனும், பாதுகாப்பாகவும் இருப்பதற்கு வசதியாக இருக்கும் வட்டத்தை விட்டு வெளியேறி, சவால்களை எதிர்கொண்டு தங்களைச் சுற்றியுள்ள சமுதாயத்தை மேம்படச் செய்யலாம்.

ஆண்களும், வளரிளம் பருவ ஆண்களும் எந்த நிபந்தனையும் இன்றி பெண்களை ஆதரித்து சூழலை மாற்றலாம். பெண்களின் அந்தஸ்தை உயர்த்துவது என்பது பொருளாதார ரீதியாக இருக்கலாம். எண்ணங்களாலும், செயல்பாடுகளாலும் சமுதாய சீர்திருத்தங்களுக்காக வேலை செய்வதாகவும் இருக்கலாம்.

ஆதரவு தரும் குழுக்களையும் அமைக்கலாம். வரதட்சணை என்னும் மோசமான பழக்கத்திற்கு எதிராக போராடுவது, பெண்கள் தங்கள் பெற்றோரிடமிருந்து பெறாமல் போன சொத்தை, இருக்கும் சட்டம் மற்றும் சமூக ஆதரவுடன் மீட்டுத் தருவது போன்ற வகைகளில் பெண்களின் மதிப்பை உயர்த்த பாடுபடலாம் .

இத்தகைய செயல்பாடுகள், முதலில் ஒருவரால் துவங்கப்பட்டு பின்னர் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சமுதாயத்தினர் மத்தியில் மிகுந்த ஆதரவை ஏற்படுத்திக் கொடுக்கும். இது ஒரு பெண்ணின் ஆரோக்கியம், சத்துணவு, கல்வி, பெண்கள் பற்றிய அபிப்பிராயம் – இவற்றின் மீது ஒரு நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்த உதவும்.

# அமர்வு 13

## பெண்களின் எண்ணிக்கை குறைந்து வருதல் மற்றும் அதனால் குழந்தைத் திருமணங்களின் மீது ஏற்படும் தாக்கம்

**நேரம் :** *60 நிமிடங்கள்*

தேவையான பொருட்கள்: *சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள், மாதிரிச்சம்பவங்களின் பிரதிகள், பங்கேற்பாளர்களால் ஏற்கப்படும் உறுதிமொழியின் நகல்.*

### கற்றலின் நோக்கம் :

*இந்த அமர்வின் இறுதியில் ,*

- *கருவிலேயே பாகுபாட்டுடன் குழந்தையின் பாலினத்தை தெரிவு செய்யும் பழக்கங்களினால் ஏற்படும் பாதிப்பை பங்கேற்பாளர்கள் கண்டறிந்து கொள்வார்கள்.*
- *பங்கேற்பாளர்கள் கருவிலேயே பாலினத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான தடுப்புச் சட்டம் 1994ஐ பற்றித் தெரிந்துகொள்வார்கள்.*

### செயல்படுத்தும் விதம் :

- *பங்கேற்பாளர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிந்து* ***பயிற்சித்தாள் -1****இல் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிச் சம்பவங்களை, ஒவ்வொரு குழுவுக்கும் ஒன்று வீதம் கொடுத்து கலந்துரையாடல் செய்ய வேண்டும்.*
- *இரண்டு குழுக்களும் முடித்த பின்னர் பொது அமர்வில் பகிரச் சொல்லவேண்டும்.*
- *பொது அமர்வில் பகிர்ந்த பின்பு பயிற்றுநருக்கான குறிப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்குப் பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடி பிறகு பயிற்றுநர் கருத்துத்தாளில் உள்ள கருத்துக்களையும், விளக்கிக் கூறவேண்டும்.*
- *பின்னர் பயிற்றுநர் அனைத்துப் பங்கேற்பாளர்களையும் ஒன்றிணைத்து உறுதிமொழி எடுக்க வேண்டும்.*

## *பயிற்றுநருக்கான குறிப்புகள் -1 :*

- *இம்மாதிரியான கதை உங்கள் அண்டைப் பகுதிகளில் அல்லது உங்கள் சொந்தக் குடும்பத்தில் இருக்கிறதா?*

- *கருவிலேயே பாகுபாட்டுடன் குழந்தையின் பாலினத்தைத் தேர்ந்தெடுப்பதோடு தொடர்புடைய ஏதாவது சட்டம் பற்றி உங்களுக்குத் தெரியுமா?*

- *இத்தகைய சூழலை எதிர்கொள்ளும் பெண்களுக்கு உதவும் ஏதாவது நிறுவனம் பற்றி உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் எந்த வகையான உதவியை அளிப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள்?*

- *பெண் குழந்தைகள் பாதுகாப்புச் சட்டத்தைப் பற்றி அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?*

- *காலப்போக்கில் பெண்களின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்தால் என்ன நடக்கும்? அது சமுதாயத்தில் எவ்விதத் தாக்கத்தை ஏற்படுத்தும்?*

- *சில குறிப்பிட்ட இடங்களில், மணப் பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் நிகழும் குழந்தைத் திருமணங்களை தடுக்க என்ன செய்யலாம்?*

- *இரண்டு கதைகளைப் பற்றி குழுக்கள் கலந்துரையாடல் செய்த குறிப்புகளைக் கொண்டு, கருவிலேயே பாகுபாட்டுடன் குழந்தையின் பாலினத்தை தெரிவு செய்யும் முறைகேடுகளுக்கும் அதிகரிக்கும் குழந்தைத் திருமணத்திற்கும் இடையே உள்ள தொடர்பைப் பற்றி தொகுத்து வழங்கவேண்டும்.*

- *இரண்டாவது கதையில் எவ்வாறு நிகழ இருந்த குழந்தைத் திருமணம் தடுத்து நிறுத்தப்பட்டது என்பதையும், அதற்கு யார் யார் இணைந்து எவ்வாறு பணியாற்றினார்கள் என்பதையும் விளக்கிக் கூறவேண்டும்.*

- *பயிற்சியில் எல்லா கட்டகங்களிலும் தொடர்ந்து ஆர்வத்துடன் ஈடுபட்டதற்கு பங்கேற்பாளர்களிடம் நன்றி கூறி இணைப்பு – 6 இல் “பங்கேற்பாளர்கள் ஏற்கும் உறுதிமொழி”யின் பிரதிகளை விநியோகிக்கவேண்டும்.*

- *இறுதியில், “பாலியல் துன்புறுத்தல், குழந்தைத் திருமணம், கருவிலேயே பாகுபாட்டுடன் குழந்தையின் பாலினத் தெரிவு, வரதட்சணை மற்றும் வளரிளம் பருவப் பெண்களுக்கும் பிற பெண்களுக்கும் எதிரான வன்முறை மற்றும் அவர்களை மோசமாக நடத்துதல்” முதலியவற்றை நீக்குவதற்கான உறுதிமொழியினை நீங்கள் வாசிக்க உங்களைத் தொடர்ந்து அவர்களை வாசிக்கச் சொல்லவேண்டும்.*

## *பயிற்சித்தாள் - 1 :*

### *மாதிரிச் சம்பவம் - 1 சுஜாதாவின் கதை :*

*19 வயது சுஜாதா திருமணமாகி, அன்பான கணவருடன் மாமனார், மாமியாருடன் வாழ்கிறாள். அவளுடைய கணவன் அருகிலுள்ள கடையில் வேலை செய்கிறான். சுஜாதா வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்து வயதான மாமனார், மாமியாரையும் பார்த்துக்கொள்கிறாள். கணவன் அவன் பெற்றோருடன் சேர்ந்து சுஜாதாவை சீக்கிரம் குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி வந்தான்.*

*சிறிது காலத்தில் சுஜாதா கர்ப்பம் அடைந்தாள். இப்போது அவள் மூன்று மாத கர்ப்பமாக இருக்கிறாள். அவளுடைய மாமனார், மாமியார் அல்ட்ரா சவுண்ட் பரிசோதனை செய்து கருவிலிருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதை தெரிந்துகொள்வதில் தீவிரமாக இருக்கின்றனர். குழந்தை பெண்ணாக இருந்தால் என்னவாகும்? சுஜாதாவிற்கு மிகவும் கவலையாக இருக்கிறது. அவளுடைய கவலையை யாரிடம் பகிர்ந்துகொள்வாள்? கணவனிடமா? தன்னுடைய பெற்றோரிடமா?*

*உங்கள் குழுவில் இந்த கேள்விகளுக்கான விடைகளை கலந்துரையாடல் செய்யும்படி கூறவேண்டும்.*

1. *மாமனார் மாமியார் ஏன் சுஜாதா பரிசோதனை செய்துகொள்ள வேண்டுமென்று நினைக்கின்றனர்?*
2. *சுஜாதா என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? பரிசோதனை மேற்கொள்வதற்கு அவள் ஒப்புக்கொள்ள வேண்டுமா?*
3. *கருவிலிருக்கும் சிசு பெண்ணாக இருந்தால், அதனால் சுஜாதாவிற்கு ஆரோக்கியத்திலும், சமூகத்திலும் ஏற்படக்கூடிய விளைவுகள் என்னவாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள் ?*
4. *இந்த நிலையில் சுஜாதாவின் கணவன் என்ன மாதிரியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்?*

### *மாதிரிச் சம்பவம் 2 - நந்தினியின் கதை :*

*நந்தினிக்கு பத்து வயதிருக்கும் போது அவள் அம்மா இறந்துவிட்டார். நந்தினியையும் அவள் அக்காவையும் அப்படியே விட்டுவிட்டு அவள் அப்பா மறுமணம் செய்துகொண்டார்.*

*நந்தினியின் பெரியம்மா, நந்தினியையும் அவளது சகோதரியையும் தன் கிராமத்திற்குக் கூட்டிக் கொண்டு வந்துவிட்டாள். நந்தினியின் சகோதரிக்கு பதினேழு வயதாக இருக்கும்போதே அவள் பெரியம்மா அவளுக்குத் திருமணம் செய்துவிட்டார். அதேபோல் நந்தினிக்கு பதினாலு வயதிலேயே திருமணம் செய்ய நினைத்தார்.*

***நந்தினி :*** *என்னோட புத்தகங்களைப் புரட்டிக்கிட்டு இருந்தப்ப ஒரு துண்டறிக்கை கையில் கிடைத்தது. பள்ளியில் நடந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் குழந்தைத் திருமணம்*

தொடர்பான பிரச்சினைகளுக்கு அதில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு போன் செய்யலாம் என்று சொன்னது நினைவுக்கு வந்தது. என்னுடைய பெரியம்மா போனை வைத்து விட்டு போயிருந்த சமயத்தில் அந்த எண்ணுக்கு போன் செய்தேன்.

**குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரி திருவண்ணாமலை :-** அந்தப் போன்கால் சமூகநலத் துறைக்கு இணைக்கப்பட்டது, நந்தினியின் பேச்சில் பதற்றம் இருந்தாலும் உறுதியும் இருந்தது, திருமணத்தில் அவளுக்கு உடன்பாடில்லை என்பதை உணர முடிந்தது.

உடனடியாக தாசில்தார், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி, போலீஸ் அனைவருக்கும் தகவல் சொல்லி நாங்கள் அந்த கிராமத்திற்குள் நுழைந்தபோது இரவு ஒன்பதுமணி. நந்தினி அடையாளம் சொல்லியிருந்த கோயிலைக் கண்டுபிடிக்க முடியவில்லை, யாரைக் கேட்டாலும் கோயில் எங்கிருக்கிறது என்று சொல்ல மறுத்தார்கள். கிராம மக்கள் ஒத்துழைக்காவிட்டால் அரசு கிராமத்திற்கு செய்யும் உதவிகள் அனைத்தும் நிறுத்தப்படும் என்று மிரட்டினோம்.

ஒரு வயதானவர் மூலம் கோவில் இருந்த இடத்தை தெரிந்து கொண்டோம். கோயிலுக்கு அருகில் வந்தவுடன் மணமகனையும் அவன் தாயையும் பிடித்துவிட்டோம். அந்தம்மா திடீரென்று மாரடைப்பு வந்தது போல் நடித்தார்.

இப்படி போலீஸ் தேடுவதை நந்தினியின் பெரியம்மாவிடம் யாரோ போய் சொல்லிவிட்டார்கள். திருமண வீட்டுக்காரர்கள் லைட்டையெல்லாம் அணைத்து விட்டார்கள், ஒரு திருமணம் நடப்பதற்கான அறிகுறிகள் அங்கு இல்லாதிருந்தது.

**நந்தினி:** "என்னை நகைகளைக் கழற்றித் தரச் சொன்னார்கள், என்னுடைய பெரியம்மா, திருமணத்தைப் பற்றி அதிகாரிகளிடம் சொல்லக்கூடாது என்றார். ஆனால் நான் மறுத்துவிட்டேன். மேலும் மிரட்டல்கள் அதிகமாவதற்குள், இரவு பத்தரை மணிக்கு அதிகாரிகள் நந்தினியை மீட்டு விட்டனர். பிறகு நந்தினி திருவண்ணாமலை குழந்தைகள் நலக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டார். குழந்தைத் திருமண தடுப்புச் சட்டத்தின் கீழ் நந்தினியின் பெரியம்மா, மணமகனின் குடும்பம் இவர்கள் மேல் வழக்குப் பதிவுசெய்யப்பட்டது.

2018ஆம் ஆண்டு, தேசிய பெண் குழந்தைகள் தினத்தன்று பெண் குழந்தை தன்னுரிமை மேம்பாட்டிற்காக நந்தினி மாநில அரசிடம் இருந்து விருதினைப் பெற்றார்.

இந்த கேள்விகளைக் குழுவில் கலந்துரையாடல் செய்து பதில்களைப் பெறவேண்டும்:

1. ஏன் 15 வயதிலேயே திருமணம் செய்ய நினைக்கின்றனர்?
2. நந்தினியின் துணிச்சலுக்கு எவையெல்லாம் உதவின?
3. ஏன் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இவ்வளவு வயது வித்தியாசத்தில் திருமணம் நடத்தப்படுகிறது?
4. குழந்தைத் திருமணத்தைத் தடுக்க சம்பந்தப்பட்ட பங்காளர்களால் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?

# கருத்துத் தாள்

*இந்தியாவில் பாலினம் பற்றி தெரிந்துகொள்ளும் பரிசோதனைகள் பரவலாக நடப்பதற்கு, எல்லாவற்றிலும் மகன்களுக்கே முன்னுரிமை அளிக்கும் நிலைமையே வேர்க் காரணம் ஆகும். இதற்கு மதம், பாரம்பரிய பழக்க வழக்கங்கள், கலாச்சாரம் முதலியவை பெருமளவுக்கு ஒப்புதல் அளிக்கின்றன. பெண் குழந்தைகள் சுகாதாரம், சத்துணவு, கல்வி பெறுவதில் உள்ள பாகுபாடு இந்தியாவில் காலம் காலமாக இருக்கிறது. தற்போது முன்னேற்றமடைந்த தொழில்நுட்பத்தினால் பாலினத் தெரிவுக்கு நவீன வழிகள் இருக்கின்றன. பிறக்கப்போவதற்கு முன்பே பெண் குழந்தை அழிக்கப்படுவதால், ஆண் – பெண் குழந்தைகள் விகிதாச்சாரம் மிகுந்த வீழ்ச்சி அடைந்துள்ளது. இந்தப் பரிசோதனை வசதிகள் உள்ள மருத்துவமனைகளும், மருத்துவர்களும் 20 ஆண்டுகளுக்கு முன்பு கீழ்க்காணும் தலைப்பில் விளம்பரப்படுத்தி இருக்கிறார்கள். "500/- ரூபாய் மட்டும் இப்போது செலவு செய்யுங்கள், பின்னர் 500,000/- ரூபாய் (வரதட்சணையில்) சேமியுங்கள்.*

*இந்தியாவின் மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி (2011), குழந்தைகள் பாலின விகிதாச்சாரம் 914 பெண்களுக்கு 1000 ஆண்கள் என இருந்தது. கடந்த 2001ல், 927 ஆக இருந்ததிலிருந்து 914 ஆக குறைந்திருக்கிறது. இது கவலைக்குரிய நிலையை ஏற்படுத்தியுள்ளது. இவற்றில் சில, ஊடகத்தாலும் வெளிச்சம் போட்டுகாட்டப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு குஜராத், ராஜஸ்தான் மாநிலங்களின் எல்லையில் உள்ள தாங்கு மாவட்டத்தில் ஒரே குடும்பத்தில் உள்ள 8 சகோதரர்களும், மணமகள் கிடைப்பதற்கு சிரமமாக இருந்ததால், ஒரே பெண்ணை மணந்துகொண்டனர் (இந்தியா டுடே, செப்டம்பர் 2001). ஜெய்சால்மர் மாவட்டத்தில் உள்ள தேவரா கிராமத்தில் 110 வருடங்களுக்குப் பிறகு 1997 இல்தான் மணமகள் வரும் பல்லக்கு (பாராத்) ஊர்வலம் வரவேற்கப்பட்டது (பயனீர், அக்டோபர் 28, 2001).*

*கர்ப்ப காலத்தில், கர்ப்பத்தில் உள்ள சிசுவின் பாலினத்தைப் பற்றி கண்டறியும் தொழில்நுட்ப (பாலினத்தைத் தெரிவு செய்வதைத் தடை செய்யும்) சட்டம் 1994, பாலினத் தெரிவை, கர்ப்பம் தரிப்பதற்கு முன்னும் பின்னும் முறைப்படுத்துகின்றது. அல்ட்ரா சவுண்ட் என்னும் தொழில்நுட்பத்தை தவறாகப் பயன்படுத்தி சிசுவின் பாலினத்தைக் கண்டுபிடிப்பதை தடுப்பதே இந்த சட்டத்தின் நோக்கமாகும்.*

## கர்ப்ப காலத்தில் உள்ள கர்ப்பத்தை பற்றி கண்டறியும் தொழில்நுட்பத்தைப் பற்றிய சட்டம் என்ன சொல்லுகிறது? *(PC & PNDT ACT)*

- *பாலினத் தெரிவு மற்றும் பாலினத்தைப் பற்றி தெரிந்துகொள்ளும் வழிகள் தடை செய்யப்பட்டுள்ளன.*

- கர்ப்ப காலத்தில் எடுக்கப்படும் பரிசோதனைகளில் அதை செய்பவர், கர்ப்பிணியிடமோ அவரது உறவினரிடமோ, கருவில் வளரும் சிசுவின் பாலினத்தைப் பற்றி வார்த்தைகளாலோ, செய்கைகள் மூலமாகவோ அல்லது வேறு எந்த விதமாகவோ தெரிவிக்கக்கூடாது.

- அல்ட்ராசவுண்ட் பரிசோதனைகள் செய்யும் எல்லா கிளினிக்குகளும் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும். இந்தச் சட்டத்தின்படி தகுதிபெற்ற மருத்துவர்கள் மட்டுமே அல்ட்ராசவுண்ட் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.

- எல்லா கிளினிக்குகளிலும் 'கருவின் பாலினத்தைப் பற்றி தெரிவிப்பது சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது' என்ற அறிவிப்பு ஆங்கிலத்திலும், அந்தந்த மாநில மொழியிலும் எழுதி வைக்கப்படவேண்டும்.

- மருத்துவர்களோ, கிளினிக்குகளோ பாலினத்தைப் பற்றி பரிசோதனையில் கண்டறிந்து தெரிவிப்பதாக எந்த வகையிலும் விளம்பரப்படுத்தியிருந்தால் அது தண்டனைக்குரியதாகும்.

# அமர்வு 14

## சரியான தெரிவுகள் செய்து அதை கடைபிடித்தல்

**நேரம் :** நிமிடங்கள்

**தேவையான பொருட்கள் :** சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள், பெண்களின் உயர்கல்வி மற்றும் வாழ்வை மேம்படுத்துவதற்கான அரசின் சட்டங்கள், திட்டங்கள்

### கற்றலின் நோக்கங்கள் :

- இந்த அமர்வின் இறுதியில் வளரிளம் பெண்கள் தாங்களோ, தங்களோடு உள்ள ஒத்த வயதினரோ எதிர்கொள்ளக்கூடிய குழந்தைத் திருமணம் மற்றும் வன்முறை தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ந்து புரிந்து கொள்வார்கள்.
- குழந்தைத் திருமணம் மற்றும் வன்முறைப் பிரச்சினைகளைக் கையாளத் தேவையான ஆதரவு அமைப்புகள் பற்றித் தெரிந்துகொண்டு முடிவெடுப்பதற்கு பங்கேற்பாளர்கள் தெரிந்துக் கொள்வார்கள்..
- குழந்தைத் திருமணத்தை ஒழிப்பதற்கு உதவக்கூடிய பங்காளர்களை கண்டுபிடிக்கவும் அவர்களோடு பணிபுரிவதில் உள்ள சவால்களைக் கண்டுணரவும் பங்கேற்பாளர்கள் தெரிந்துக் கொள்வார்கள் .

### செயல்படுத்தும் விதம் :

- அமர்வின் தலைப்பு மற்றும் நோக்கங்களைத் தெரிவிக்க வேண்டும்.
- பின் **பயிற்றுநர் குறிப்பு-1** இல் தரப்பட்டுள்ள அட்டவணையை வரைய வேண்டும். பாதிக்கப்படக்கூடிய நிலையிலுள்ள வளரிளம் பெண்கள் எதிர்கொள்ளக்கூடிய சவால்களை பற்றி பங்கேற்பாளர்களோடு விவாதித்து அதை நெடு வரிசையில் எழுதவேண்டும். அதற்காக உள்ள வழிகளை படுக்கை வரிசையில் எழுத வேண்டும். தேவைப்பட்டால் பத்திகளை மேலும் சேர்த்துக் கொள்ளவேண்டும். விவாதத்தில் வரக்கூடிய சில மாதிரி பதில்களும், தகவல்களும் **பயிற்றுநர் குறிப்பு -1**இல் தரப்பட்டுள்ளன.

## பயிற்றுநர் குறிப்பு - 1

| வளரிளம் பெண்களுக்கான கடின சூழ்நிலை | இந்தச் சவாலை மேற்கொள்ள எனக்குத் தேவையான திறன் | ஆதரவு தரக்கூடிய திட்டம்/வழிமுறைகள் *(Mechanism)* | உதவக்கூடிய மக்கள்/ அமைப்பு |
|---|---|---|---|
| கல்வி இடை நிற்றல் | • நன்றாகத் தொடர்பு கொள்ள முடிதல்,<br>• உறுதியாக இருத்தல்,<br>• பிரச்சினைகளை தீர்த்தல்,<br>• நல்ல தீர்மானம் எடுத்தல்,<br>• பயமின்மை,<br>• பலம், தைரியம் | • கல்விக்கான உரிமையின் கீழ்<br>• அருகாமை பள்ளியில் இலவசக் கட்டாயக் கல்வி-<br>• குழந்தைக்கு உதவி தொடர்பு எண் 1098<br>• அங்கன்வாடி மையங்கள்<br>• கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா திட்டம் (KGBV). | • பெண்கள் உதவி எண்1091,<br>• குழந்தை உதவி எண் 1098,<br>• பெற்றோர், குடும்பம், பள்ளி (ஆசிரியர், பள்ளி மேலாண்மைக் குழு, கிராமக் கல்விக் குழு),<br>• செவிலியர், ஆஷா பணியாளர்கள்,<br>• பால்வாடி மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்,<br>• அங்குள்ள ஊராட்சி உறுப்பினர்,<br>• சமத்தலைவர்கள்,<br>• நிறுவனங்கள்,<br>• காவல் துறை,<br>• குழந்தை பாதுகாப்பு அலுவலர்,<br>• எம்.எல்.ஏ, எம்.பி,<br>• உள்ளூர் தன்னார்வ நிறுவனங்கள்,<br>• வட்டார வளர்ச்சி அலுவலக நிர்வாக அலுவலர்கள்,<br>• ஊடகங்கள் |

| | | | |
|---|---|---|---|
| வாழ்வாதார மின்மை | • பொறுமை,<br>• உயர்ந்த சுயமதிப்பு,<br>• மனஅழுத்தத்தை சமாளிக்க முடிதல்,<br>• தொடர்புத் திறன்,<br>• வேகமாக கற்கும் திறன்,<br>• நல்ல தீர்மானங்கள் எடுத்தல்,<br>• பேச்சுவார்த்தை திறன்,<br>• ஒருங்கிணைந்து குழுவில் செயல்படுதல்,<br>• தலைமைத்துவம்,<br>• பயமின்மை,<br>• தைரியம், பலம். | • தன்னார்வ நிறுவனங்களால் நடத்தப்படும் வேலைகளுக்கான பயிற்சி | |
| குழந்தைத் திருமணம் | • உறுதியாக இருத்தல்,<br>• பொறுமை,<br>• உயர்ந்த சுயமதிப்பு,<br>• மன அழுத்தத்தை சமாளிக்கும் திறன்,<br>• செயல்படுபதல்,<br>• தலைமை,<br>• பயமின்மை,<br>• தைரியம், பலம். | • குழந்தைத் திருமணத் தடுப்பு சட்டம் 2006 (PCMA),<br>• ஆசிரியர்கள் சுகாதாரப் பணியாளர் சைல்ட்லைன் 1098 | |

| | | | |
|---|---|---|---|
| வரதட்சணை மற்றும் குடும்ப வன்முறை, பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் | • நல்ல தீர்மானம் செய்பவர்,<br>• பேச்சு வார்த்தை திறன்,<br>• குழுவில் செயல்படுபவர்,<br>• தலைவர்,<br>• பயமின்மை,<br>• தைரியம், பலம். | • குடும்ப வன்முறைக்கு எதிராக பெண்களைப் பாதுகாக்கும் சட்டம்- 2005 (PWDVA)<br>• இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் - பலாத்காரத்தை தண்டித்தல் (விதி 376)<br>• சிறார் நீதி சட்டம் 2000, சரிசெய்த திருத்தச் சட்டம் -2006 பாதிக்கப் பட்டவர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் நிவாரண ஏற்பாடுகள் உள்ளிட்டவை.<br>• மேலும் பாதிக்கப் பட்டவர்களின் பாதுகாப்பு, பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் POCSO 2012<br>• எல்லாவித பாலியல் குற்றங்களை உள்ளடக்கிய சட்டம், குழந்தை நேய காவல் துறை மற்றும் நீதிமன்றம் அமைத்தல் பற்றிய வழிமுறைகளும் உள்ளன. | |

| | | | |
|---|---|---|---|
| | | • இந்திய தண்டனைச் சட்டம் (IPC) பிரிவு 198A குடும்ப வன்முறையின் குற்ற முறையீடு ஏற்றல், கருத்தடை முறைகள். | |
| கட்டாயப்படுத்தி குழந்தைகள் பாலியல் தெரிவு | • உறுதியாக இருத்தல்,<br>• உயர்ந்த சுயமதிப்பு,<br>• மன அழுத்தத்தை சமாளிக்கும் திறன்,<br>• பயமின்மை,<br>• தைரியம்,<br>• பலம் | • கருவிலேயே மற்றும் குழந்தைப் பிறப்பிற்கு முன் தொழில் நுட்பம்த் பயன்படுத்தி (பாலினத் தெரிவு தடைசெய்யும்) சட்டம் - 1994,<br>• கர்ப்பத்தடை நடவடிக்கைகள் | |

- அட்டவணையில் உள்ள முக்கிய கருத்துக்களை தொகுக்கவேண்டும். அதில் தனிப்பட்ட திறன் மற்றும் இருக்கக்கூடிய தெரிவுகள் பற்றிய போதுமான தகவலறிவு, தெரிந்துணர்ந்து சரியான தீர்மானம் எடுக்க உதவும் என்று தெளிவாக அழுத்திக் கூறவேண்டும்.

- பிறகு பங்கேற்பாளர்களை மூன்று குழுக்களாகப் பிரிக்கவேண்டும். வளரிளம் பருவத்தினர் எதிர்கொள்ளும் இரண்டு கடினச் சூழ்நிலைகளை ஒவ்வொரு குழுவிற்கும் இரண்டு வீதம் கொடுத்து குழுவில் கலந்துரையாடச் சொல்லவேண்டும். பின்னர் ஒவ்வொரு குழுவும் தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள கடினச் சூழ்நிலைகளைப் பற்றி ஏதேனும் ஒரு பங்காளரிடம் (பெற்றோர், சமுதாயம், பள்ளி ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மைக் குழு, உள்ளாட்சி உறுப்பினர்கள், கிராமக் கல்விக் குழு ) எப்படி விவரித்து தீர்வு காண்பார்கள் என்பதை குழுவில் கலந்துரையாடி விவாதிக்க வேண்டும்.

- யோசனைகள், எளிமையாக எடுத்துக்கூறும்படியாக நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்கவேண்டும் என்று சொல்லுங்கள். கீழ்க்காணும் 3 கேள்விகளை மையப்படுத்திய விவாதமாக இருக்கவேண்டும் என்று சொல்ல வேண்டும்.

1. பங்காளர்களை எப்படி அணுகுவார்கள்?

2. பங்காளர்களிடமிருந்து பொதுவாக வரக்கூடிய விவாதம் என எதிர்பார்க்கப்படுபவை எவை?.

3. பங்கேற்பாளர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்களிலிருந்து என்ன எதிர் வாதங்களை முன்வைக்கலாம்?

- அடுத்து 3 குழுக்களையும், குழுவில் கலந்துரையாடிய கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள சொல்ல வேண்டும்..

- குழுக்களுக்கு நன்றி சொல்லி முக்கியமான கருத்துக்களை தொகுத்துச் சொல்லவேண்டும். மேம்படுத்தப்பட்ட பேச்சுவார்த்தை திறனைப் பயன்படுத்தி பங்காளர்களோடு எப்படி வேலை பார்ப்பது என்பதற்கான அடுத்த அமர்வின் அடித்தளத்தை கட்டமைக்க இந்த அமர்வு உதவியது என்று கூறி முடிக்கவேண்டும்.

# அமர்வு 15

## உரிமைகளுக்காக பேச்சுவார்த்தையை நடத்த, குழுவாக, கூட்டமைப்பாக இணைவதால் கிடைக்கும் பலம்

**நேரம் :** *30 நிமிடங்கள்*

தேவைப்படும் பொருட்கள் : *சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள், உறுதிமொழி பிரதிகள்*

### கற்றலின் நோக்கங்கள்:

- *இந்த அமர்வின் இறுதியில் குழந்தைத் திருமணம் மற்றும் வன்முறை தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரும்பொழுது சமாளிக்கும் வகையில் பேரம் பேசும் திறனின் முக்கியத்தை வளரிளம் பெண்கள் உணர்ந்துக் கொள்வார்கள்.*
- *குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளை அமைத்து சமரசப் பேச்சுவார்த்தை நடத்தும் திறனை சிறப்பாக செய்ய பழகிக்கொள்வார்கள்.*
- *குழந்தைத் திருமணத்தை நீக்க, பாலினம் சார்ந்த பாலியல் தெரிவை ஒழிக்க, வரதட்சணை, சிறுமிகள் / பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் மற்றும் வன்முறை இவைகளை நீக்க பங்கேற்பாளர்கள் உறுதி மொழி எடுத்துக் கொள்வார்கள்.*

### செயல்படுத்தும் விதம் :

- *அமர்வின் தலைப்பு மற்றும் குறிக்கோள்களை தெரிவிக்கவேண்டும்..*
- *கடந்த அமர்வின் கடைசி பயிற்சியான பங்காளர்களுடன் இணைந்து பணிபுரியக்கூடிய செயல்களைப் பட்டியலிடும் போது அவர்கள் உணர்ந்த சவால்களை கேளுங்கள்.*
- *அவர்களுடைய பதில்களை சார்ட்டில் எழுதவேண்டும். உங்களுடைய கருத்துக்களையும் சேர்க்கவேண்டும்.*
- *பிறகு கடந்த அமர்வில் கவனித்த சில கருத்துக்களை பங்கேற்பாளர்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும். (அமர்வு 14 )*

- ✦ குழந்தைத் திருமணம் மற்றும் வரதட்சணை உட்பட குடும்ப வன்முறை போன்ற ஆழமாக பதிந்த சமூகப் பிரச்சினைகளை சமாளித்தல் கடினம்.

- ✦ இதற்கான தீர்வுகளை சிறுமிகள் / பெண்களால் மட்டும் அடைந்து விட முடியாது. வெவ்வேறு பங்காளர்கள், சமுதாயம், நம்முடைய அமைப்பு இவை எல்லாம் சேர்ந்து ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும்.

- ✦ சமுதாயத்தார், களப் பணியாளர்கள் மற்றும் பள்ளியைச் சார்ந்தவர்கள் என எல்லா பங்காளர்களும் சமூகப் பிரச்சினைகளுக்கு எதிராக செயல்படுவதில் உள்ள சிக்கல்களையும் அபாயங்களையும் கூறலாம். தனிப்பட்ட விதத்தில் செயல்படுதல் உதவாது. அதே சமயத்தில் கருத்துக்களையும் சமரசப் பேச்சு வார்த்தையையும் பங்கேற்பாளர்கள் குழுவாக கூட்டமைப்பாக ஒருங்கிணைந்து அணுகும்போது எளிதாக முடியும்.

■ பிறகு குழுக்களுடன் செயல்படுவதில் உள்ள முக்கிய கருத்துக்களைப் பேசவேண்டும். இதற்கு கீழுள்ள கேள்விகள் உதவும் :

- ✦ குழந்தைத் திருமணம், பாலின அடிப்படையில் பாலினத் தெரிவு, வரதட்சணை மற்றும் சிறுமிகள், பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல், கொடுமை போன்ற பிரச்சினைகளைச் சமாளிக்க சிறுமிகள் மற்றும் பெண்கள் குழுவாக கூட்டமைப்பாக செயல்படுதல் நல்லது என்று ஏன் நினைக்கிறீர்கள்?

- ✦ குழுக்களாக செயல்படுவதில் உள்ள நன்மைகள் என்ன? ஊராட்சி உறுப்பினர், ஆசிரியர்கள், சமயத் தலைவர்கள், காவல்துறை போன்ற வெவ்வேறு பங்காளர்களுடன் குழுவாக கூட்டமைப்பாக பணிபுரியும் பொழுது பெண்கள் வெளிப்படுத்தும் பேரம் பேசும் திறன் எந்த விதமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது ?

- ✦ உங்கள் பகுதியில் உள்ள ஏதாவது பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் பற்றி உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் என்ன விதமான செயல்களில் ஈடுபடுகிறார்கள்?

- ✦ வளரிளம் பருவப் பெண்களாக நீங்கள் உங்கள் பகுதியில் எப்படி குழு அமைக்க முடியும்?

- ✦ பள்ளி இறுதி படிப்பு முடிக்க ஊக்குவித்தல், குழந்தைத் திருமணத்தை ஒழித்தல், பாலினம் சார்ந்த பாலினத் தெரிவு, வரதட்சணை மற்றும் சிறுமி / பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் மற்றும் வன்முறை இவைகளுக்காக நீங்கள் எப்படி செயல்பட முடியும் ?

■ இந்தப் பயிற்சியில் செயல் ஊக்கத்துடன் கலந்து கொண்டதற்கு பங்கேற்பாளர்களுக்கு நன்றி கூறுங்கள்.

- *பின், இணைப்பில் உள்ள உறுதிமொழித் தாளை பங்கேற்பாளர்களுக்கு தரவேண்டும்.*
- *அந்த உறுதிமொழியை ஏற்க பங்கேற்பாளர்களுக்கு உதவுங்கள். பள்ளியில் இடைநிற்றல், குழந்தைத் திருமணம், பாலினம் சார்ந்த பாலினத் தெரிவு, வரதட்சணை மற்றும் பெண்கள் / சிறுமிகளுக்கு எதிரான துன்புறுத்தல் / வன்முறை இவற்றிற்கான உறுதிமொழியை ஏற்கச் செய்ய வேண்டும்.*

## ஒன்றாகச் செயல்படுவதன் மூலம் குழு உறுப்பினர்களுக்கு பின்வரும் பயன்கள் கிடைக்கும் :

- ✦ *பாதுகாப்பு: உடல் மற்றும் மனம், பொருளாதார, சமூக ரீதியான பாதுகாப்பு*
- ✦ *அந்தஸ்து: வெற்றிகரமான உறுப்பினர்கள் அர்த்தமுள்ள செயலில் ஈடுபடுகிறார்கள்*
- ✦ *சுயமதிப்பு: தன்னைப்பற்றிய சுய மதிப்பு அதிகரித்தல்*
- ✦ *தொடர்பு: அங்கீகரிக்கப்பட்ட குழுவில் ஒரு பகுதியாக இருப்பதில் மற்றவர்களின் நன்மதிப்பை பெறுதல்*
- ✦ *சக்தி: பெரும்பான்மையினரால் காது கொடுத்து கேட்கப்படுதல், பங்காளர்களால் உதவி பெறுதல்*
- ✦ *குறிக்கோளை அடைதல்: ஒரே குறிக்கோளை நோக்கி பல கைகளும் பல மூளைகளும் சிந்தித்து செயல்படுவது.*

- *வளரிளம் பெண்களின் சுயஉதவிக் குழுக்களையும் அவர்கள் ஒருங்கிணைந்து செயல்படும் முயற்சியையும் குறைவாக எடை போடக் கூடாது.*
- *பள்ளியில் சேர்ந்து படித்தலின் முக்கியத்துவம், குழந்தைத் திருமணத் தடுப்பு பற்றிய தகவல்களை சமுதாயத்திற்குச் சொல்லுதல் போன்றவை குறித்து ஊராட்சி உறுப்பினர்கள் மற்றும் பள்ளி மேலாண்மை க் குழுவுடன் சேர்ந்து இவர்கள் செயலாற்ற முடியும்.*
- *உள்ளூர் காவல்துறை மற்றும் குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரி (CMPO) ஆகியோரிடயே ஒரு இணைப்பை ஏற்படுத்தி அவர்களுடன் அந்தப் பகுதியின் குழந்தைத் திருமணம் மற்றும் வன்முறை பற்றி கலந்து பேச முடியும். நிகழவிருக்கிற குழந்தைத் திருமணங்கள் குறித்து அதிகாரிகளுக்கு தெரிவிக்க முடியும்.*
- *அந்தப் பகுதியின் அங்கன்வாடிப் பணியாளர், தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து பிரதிநிதிகள், சாதி வாரியான உள்ளாட்சிகள், காவல்துறை, பள்ளி ஆசிரியர்கள் போன்ற பங்காளர்களுடன் இளம் பெண்களும் சேர்ந்து செயல்பட முடியும்.*

- பொதுவாக இந்தக் குழுக்கள், குடும்பங்களுடன் விழிப்பணர்வு ஏற்படுத்தி குழந்தைத் திருமணம் நிகழக்கூடிய இடங்களில் சட்டப்படி செயல்படலாம். குழந்தைத் திருமணத்திற்கு எதிராக சமுதாயத்தில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் நாடகங்கள் நடத்த குழுக்களை தயார் செய்ய முடியும்.

- இந்தக் குழுக்கள், பெண் குழந்தைகளுக்கான கல்வி, நலச்சேவை மற்றும் வாழ்வாதாரத்திற்கான திட்டங்கள் பற்றி பேசலாம். முக்கியமாக, பள்ளிகளில் மாணவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் ஆசிரியர்களுடன் சேர்ந்து பயிற்சி நடத்த இவர்களால் முடியும்.



# இணைப்புகள்

# இணைப்பு
# 1

**மனித உரிமைகள் என்றால் என்ன?**

மனித உரிமைகள் என்பது மிக அடிப்படையானது. அவை இல்லாமல் மக்கள் கண்ணியத்துடன் வாழ இயலாது. ஒருவரின் மனித உரிமைகள் மீறப்படும் நிலையில் அவன் அல்லது அவள் ஒரு மனிதப் பிறவியாகவே கருதப்படமாட்டார்கள். சிறுமியருக்கும் பையன்களுக்கும் பாலின அடிப்படையில் பாகுபாடு காட்டப்படும்போது அவர்களால், தங்களின் மனித உரிமைகளை முழுமையாக அனுபவித்து மகிழ இயலாது.

உதாரணமாக, வீட்டு வேலைக்காகவோ அல்லது திருமணத்துக்காகவோ இளம் பெண் குழந்தைகளின் பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்தி விடுகிறார்கள். அதே சமயத்தில், குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு வருவாய் ஈட்ட வேண்டும் என்பதற்காக அந்த வீட்டுப் பையன்களைத் தொடர்ந்து படிக்க வைக்கிறார்கள். சமூகமயமாக்கல், ஆண் பெண் இருவருக்கும் தங்களது உரிமைகளைப் பெறுவதில் பெரும் தாக்கத்தை உண்டு செய்கிறது.

மனித உரிமைகளைப் பற்றி அறிந்து கொள்வதன் மூலம், மரியாதை, நியாயம், நீதி மற்றும் சமத்துவம் பற்றி நாமும் கற்றுக் கொள்வோம். இதன் பயனாக, நாம் நமது உரிமைகளைப் பெறுவதற்காக எழும் போது, மற்றவர்களின் உரிமைகளுக்கு மதிப்பு கொடுக்க வேண்டிய பொறுப்பும் உருவாகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தின் (UDHR) ஏறத்தாழ 30 விதிமுறைகளையும் ஏற்றுக்கொள்வதாக, அனைத்து நாடுகளும் கையொப்பம் இட்டுள்ளன. வளரிளம் பெண்களுக்கான முக்கிய உரிமைகள் விவரம் :

- வாழும் உரிமை, சுதந்திரம், தனிப்பட்ட பாதுகாப்பு
- சித்தரவதையிலிருந்து விடுதலை
- நியாயமான விசாரணை

- பேச்சு உரிமை
- மத ரீதியான சுதந்திரம்
- நலவாழ்வு, கல்வி மற்றும் போதிய அளவிலான தரமான வாழ்க்கை நிலை

மக்கள் தங்களது உரிமைகளை அனுபவிக்க உறுதிசெய்ய வேண்டியது அரசாங்கங்களின் பொறுப்பாகும். மக்களுக்கான சட்டங்களையும் சேவைகளையும் உருவாக்கி அதனை நடைமுறைபடுத்துவதன் மூலம் மக்கள் தங்களது உரிமைகளை அனுபவிக்க முடியும். இதர மனிதர்களுக்கும் சமுதாயத்திற்கும் ஆற்ற வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும் நமக்கு உள்ளன. நமது மனித உரிமைகளைப் பெறுவதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு உள்ள அதே நேரத்தில் மற்றவர்களின் உரிமைகளுக்கும் உரிய மதிப்பு அளிக்க வேண்டும். உதாரணமாக, ஒருவர் தனக்குரிய பேச்சு உரிமையை பயன்படுத்தும் போது, மற்றவரைத் தரம் தாழ்த்தி, அவர்களிடம் வெறுக்கத்தக்க மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் அவர்களது பாதுகாப்பு உரிமையை மீறாத வகையில் இருக்க வேண்டும். மனித உரிமை என்பது, மக்கள் சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் - குடும்பம், சமுதாயம், கல்வி நிலையங்கள், பணி புரியும் இடம், அரசியல் மற்றும் சர்வதேச உறவுகள் போன்றவற்றில் எப்படி மற்றவர்களுடன் தொடர்பு கொள்கிறார்கள் என்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. நீதி, சமத்துவம், சமூக நலன் ஆகியவற்றை உறுதிப்படுத்துவற்கு மனித உரிமைகள் அவசியம் என்பதை அனைத்து இடங்களில் உள்ள மக்களும் புரிந்து கொள்ள வேண்டியது முக்கியம். ஆனாலும், மக்களின் மனித உரிமைகள் பல சந்தர்ப்பங்களில் அடிக்கடி மீறப்பட்டு வருகின்றன. வாழ்க்கை, கல்வி, வேலை வாய்ப்பு போன்றவற்றுக்கான உரிமைகளை சிறுமியரும் பெண்களும் அடிக்கடி இழந்து விடுகிறார்கள். எவருடைய உரிமைகளும் எப்போது வேண்டுமாலும் மீறப்படலாம். குடும்ப வன்முறை, பாலியல் சித்தரவதை போன்ற வன்முறைகளை தனிநபர்கள் வாழ்க்கையில் எதிர்கொள்வது பொதுவாக நடக்கும் விதி மீறலாகும்.

**குழுப் பயிற்சி:**

*கீழ்க்காணும் அட்டவணையை குழுவில் விவாதித்து நிரப்பவேண்டும். மாதிரிக்காக ஒன்று நிரப்பப்பட்டுள்ளது.*

| எனது உரிமைகள் | அது எதைக் குறிக்கிறது | தேவையான பொருள்கள் | பொறுப்பானவர்கள், பொறுப்புக்கு உரியவர்கள் |
|---|---|---|---|
| வாழ்க்கை, சுதந்திரம், தனிப்பட்ட பாதுகாப்பு | கழிப்பறையை பயன்படுத்தும்போது பாதுகாப்பு | பாதுகாப்பான கழிப்பறைகள் – பள்ளிகளிலும் வீட்டிலும் | பெற்றோகள் ஆசிரியர்கள் |
| சித்திரவதையிலிருந்து விடுதலை | | | |
| நேர்மையான விசாரணை | | | |
| பேச்சுரிமை | | | |
| மதச் சுதந்திரம் | | | |
| நல வாழ்வு, கல்வி, போதிய வாழ்க்கைத் தரம் | | | |

# இணைப்பு

# 2

## பொது இடத்தில் ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் என்றால் என்ன ?

பொது இடத்தில் ஒரு ஆண் ஒரு பெண்ணை நோக்கி விரும்பத்தகாத பாலியல் சொற்களைப் பேசுதல், அல்லது பாலியல் இச்சையை வெளிப்படுத்தும் செய்கைகள் செய்தல் ஆகும். இது மிகவும் கடுமையான பிரச்சினை. சாலையிலும் பேருந்திலும் இந்தத் துன்புறுத்தல் ஏற்படும்போது வளரிளம் பருவப் பெண்கள், மனதளவில் சித்திரவதைக்கு ஆளாகிறார்கள், இழிவு படுத்தப்படுகிறார்கள். இது பெண்கள் மதிப்புடன் வாழும் உரிமைக்குத் தடையாக இருப்பதோடு, வாழ்வதற்கான பெண்களின் அடிப்படை உரிமைக்கும் எதிராக உள்ளது. இது தனிமனிதனாலோ, குழுவாகவோ, தனியொரு பெண்ணின் மீதோ அல்லது பல பெண்கள் மீதோ நிகழ்த்தப்படலாம். சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத வார்த்தையாகவோ, பாலியல் தொடர்புடைய வாக்கியமாகவோ இருக்கலாம். தொடுவது அல்லது இடித்துக்கொண்டு செல்வது, அவளைப் பின் தொடர்வது, விரும்பத்தகாத வார்த்தைகளைக் கூறி அவளை அசௌகரியப்படுத்துவது என நீளலாம்.

**பொது இடத்தில் பாலியல் துன்புறுத்தல் என்பது**

- பாலியல் தொனியில் உள்ள சொற்கள்
- உடலளவில் தொடுதல், அல்லது பாலியல் இச்சையை வெளிப்படுத்தும் செய்கைகள்
- ஆபாசப் படங்களைக் காண்பித்தல்
- பாலியல் தேவையை முன்வைத்தல், கெஞ்சுதல்
- பாலியல் தொடர்புடைய விரும்பத்தகாத பேச்சுகள் பேசுதல் அல்லது நடந்து கொள்ளுதல்

## பொது இடத்தில் பாலியல் துன்புறுத்தலில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் என்ன?

பாலியல் துன்புறுத்தல் தொடர்புடைய குற்றங்கள் இந்திய தண்டனைச் சட்டத்தின் 509, 294, 292 மற்றும் 354-வது விதிகளின் கீழ் கையாளப்படுகின்றன. பாதிக்கப்பட்டோர் **கீழ்க்கண்ட சட்ட விதிகள் மூலம் நிவாரணம் பெறலாம்.**

### இந்திய தண்டனைச் சட்ட விதி -294

*வளரிளம் பருவப் பெண்ணை அல்லது வேறு பெண்ணை ஆபாச செய்கைகளால், வார்த்தைகளால், பாடல்களால் துன்புறுத்தும் ஆணுக்கு, குற்றம் நிரூபிக்கப்பட்டால் மூன்று மாதம் வரை சிறைத் தண்டனை.*

### இந்திய தண்டனைச் சட்ட விதி -292

*முதல் தடவை ஆபாசப் படங்களை, புத்தகங்களை, தாள்களை வளரிளம் பருவ பெண்களுக்கோ, வேறு பெண்களுக்கோ காண்பிப்பவருக்கு 2,000/- ரூபாய் அபராதமும் 2 வருட சிறை தண்டனையும் விதிக்கப்படும். அடிக்கடி இந்த குற்றத்தை செய்தால் 5,000 /- ரூபாய் அபராதமும் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்படும்.*

### இந்திய தண்டனைச் சட்ட விதி -509

*ஆபாச செய்கைகள், அநாகரிகமான உடல்மொழி, கேலிப்பேச்சு, பெண்ணின் தனிமனித சுதந்திரத்திற்கு எதிரான நோக்கத்துடன் செயல்படுவது - இவற்றுக்கு ஒரு வருடம் சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும்.*

### குற்றவியல் சட்டத் திருத்த சட்டம் -2013

*இந்திய தண்டனை சட்டத்தில் சில மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. அதன்படி **345 A** விதியின்படி பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டால் 3 வருடங்கள் சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படலாம். இந்த மாற்றம், இன்னும் பல புதிய விதிகளை ஏற்படுத்தியுள்ளது. இதன்படி, அனுமதியின்றி ஒரு பெண்ணின் ஆடைகளைக் களைதல், பின் தொடருதல், அதிகாரத்தில் இருப்பவர்களால் நிகழ்த்தப்படும் பாலியல் செயல்பாடுகள் முதலியவை குற்றமாகக் கருதப்படும்.*

- *பணியிடத்தில் பெண்களுக்கேற்படும் பாலியல் துன்புறுத்தல்கள்களை (தடுப்பு, தடை மற்றும் தீர்வுக்கான) தடுக்கும் சட்டம் - 2013, வேலை செய்யும் இடங்களில் பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது.*

## குறிப்புகள்

## குறிப்புகள்

## குறிப்புகள்

## குறிப்புகள்